www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

'93,டிச.26-ஜன.01,1994

ரூபா 8/50

දිනමුරසු වාරමලර්

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SR... WEEKLY முரசு 31




சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
கிறிஸ்மஸ் வாழ்த்துக்களோடு
விடைபெற்று,
புத்தாண்டு வாழ்த்துக்களோடு
சந்திப்பதில் நெஞ்சு முழுக்க மகிழ்ச்சி.

வாழ்த்துக்களைப் பரிமாறுவதும்,
ஒருவர் நலனில் மற்றவர் அக்கறையோடிருப்பதும்
இனியதான விசயம்.
பொதுநலம் என்ற
அழகான திரைகளின் பின்னர்கூட
சுயநலமும்-சூதும், வாதும்
அசிங்கமாய் முகம் காட்டும் காலம் இது.
பரஸ்பர அன்பும்-புரிந்துணர்வும்,
இந்த நசிந்த காலங்களிடையே
வாழ்வதும், வந்து முகம் காட்டுவதும்
இன்னமும்
மனிதர்கள் இருக்கிறார்கள்
என்கிற
நம்பிக்கையை நிலைநாட்டப் போதும்!

சந்தோசமான நாட்களில்
அபசகுனமாய்ப் பேசுதல் முறையல்ல,
எனினும், சம்பிரதாயம் மீறியும் பேசவேண்டியுள்ளது.
"மலரும் புத்தாண்டு
சமாதான வெளிச்சத்தைத் தரவேண்டும்"
இப்படியே வாழ்த்தி- வாக்கியம் சொல்லி
எத்தனையோ புத்தாண்டுகள்
வந்தன-போயின.
சமாதானம் மட்டும்
தலைக்கறுப்பைக் கூடக் காட்டவில்லை.

புறாக்களின் சிறகுகளை
வெட்டிப் போட்டுவிட்டு
கூண்டுக்கதவுகளைத் திறந்தும் என்ன?
சிறகு முளைப்பதாய் தெரிந்தால்
மறுபடியும் வெட்டிப் போடுகிறார்கள்.
கத்திகளைக் கீழே போடுவதற்கு,
போட வேண்டியவர்கள் எவரும்
இன்றுவரை தயாராக இல்லை.

அரசைச் சாட்டிக்கொண்டு புலிகளும்
புலிகளைச் சொல்லி அரசும்
யுத்தம் செய்ய
வியூகம் வகுத்துக்கொண்டிருக்க,
மக்கள்
உயிரைக் கையில் பிடித்தபடி,
கூரையைப் பிய்த்துக் கொண்டு
மரணம் வந்து சேருமோ
என்று பயந்து கொண்டிருக்கிறார்கள்.

நம் மக்களுக்கு
தெய்வ நம்பிக்கை அதிகம்.
கொடுக்கும் தெய்வம்
கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுப்பதாகக்
கூறுவார்கள்.
இப்போதெல்லாம் தெய்வம்
கூரையைப் பிய்ப்பதில்லை.
அப்படியே தெய்வம் வந்து
கொடுப்பதற்கு கூரையைப் பிய்த்தாலும்
எடுப்பதற்கு யாரும் இருக்கமாட்டார்கள்.
பங்கருக்குள் ஓடி விடுவார்கள்.
வாழும் முறைகளையே
யுத்தம் மாற்றிப் போட்டுவிட்டது.

எனினும்-
புதிதாய் மலரும் ஒவ்வோர் ஆண்டும்
இங்குள்ள மக்களின் எதிர்பார்ப்புக்களை
எதிர்கொண்டபடியே பிறக்கிறது.

சோகம் தீருமா?
சூழ்ந்த இருள் விலகுமா?
என்று விரக்தியுற்ற விழிகள்
மலரும் புத்தாண்டை
விசாரித்துக் கொள்ளுகின்றன.
நல்லது நடக்கும் என்று
நம்பிக்கையோடு காத்திருப்பதே
இங்கு ஜீவிப்பதற்கான ஊன்றுகோல்.
அந்த ஊன்றுகோலும் இல்லையெனில்
எல்லாமே சூனியமாகிவிடும்.

எனவே-
நம்பிக்கைகளை உதறாமல் இருப்போம்.
அதே சமயம்
நம்பக் கூடாதவைகளையும்
நம்பக் கூடாதவர்களையும்
நம்பிக் கெடாமலிருப்போம்.

உங்கள் அனைவரோடும்
புதிய நம்பிக்கைகளோடும்
இனிய நேச உறவோடும்
கைகுலுக்கிக் கொண்டு
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை-

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-28

விதைக்கப்பட்டவற்றில் வெற்றி முகம் கண்ட கவிதையும் வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

முன்பக்கம் சிகரட்டில் நெருப்பிருக்கும்-அதன்
பின்பக்கம் முட்டாளின் வாயிருக்கும்!
இன்னுமா இதன்மேலே விருப்புனக்கு-மனிதா
உன்னைப்போல் நானுமோர் பெருங்குரங்கு!

செ. குணரத்தினம்
மட்டக்களப்பு.

### பாராட்டுக்குரிய கவிதைகள்

சீதையை தேடி வந்த உன்னை
சிறை வைத்து விட்டார்களா?
அன்று வாலில் தீ மூட்டினார்கள்
இன்று வாயில் தீ மூட்டுகிறார்களே!
பாண்டியூர் எஸ்.மலர்விழி.

**நன்றி!**
நன்றி மனிதா
என் பெயரைக்
காப்பாற்றுகின்றாய்
மெக்டலின்
அக்கரைப்பற்று-9.

**பற்று**
புற்று நோய்க்கு
புகையூட்டி வித்திட்டபோதும்
பற்றுடனே உதவிசெய்யும்
பாங்குதான் என்ன?
தேவ இரக்கம் இளங்கோ
வந்தாறுமூலை.

**புரியவில்லை**
மனிதனுக்கே
விளங்கவில்லை
விலங்கிற்கா
புரியப் போகிறது
புகைத்தல்
உடல் நலக்கேடென்று..
ஏ.ஜீ.சேகர்
அக்கரைப்பற்று.

**நம்பாதே**
சற்று நில்!
அவனை நம்பாதே
உன் சகோதரனையும்
கொல்லச் சொல்வான்.
நா. சுரேஷ்
கோட்டைக்கல்லாறு-1.



**சமதர்மம்**
ஐந்தும்
ஆறும்
புகை மண்டலத்தில்
சமஷ்டி ஆட்சி!
ஐ.என்.எம். நிஹ்ரீர்
புத்தளம்.

## கவிதைப் போட்டி இல-31



இது நமது நாட்டு துப்பாக்கி கலாசாரம் உருவாக்கியுள்ள விளைவு. இதனைப் பிரதிபலித்து உருவாகட்டும் உங்கள் எண்ணம். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 1.1.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 31
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

**ஆசை**
புகைத்துப் பழகணும்-மாருதி
பகையை மறக்கணும்
நகைத்துப் பழகணும்-மாருதி
சுவைத்து மறக்கணும்.
திருமதி.பிரேமசியாமளா வல்லிபுரம்
கொழும்பு.11.

**மகிழ்ச்சி**
"ஹைய்யா!
பட்ஜெட்டில்
சிகரட்
விலை-கூடவில்லையாம்
கொடு
நெருப்பை!!"
கவிஞர் ஹமாஸ்-புத்தளம்.

**நன்றன்று**
உதவுதல் நன்று!
நன்றன்று
நுரையீரல் வெந்து
சாவதற்குதவுவது!
ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-6.

**விலை ஏற்றம்**
சிகரட்டின் விலை
அதிகரிப்பது
ஏன் என்று
இப்போதுதான் புரிகிறது.
ஏ.யூ.ஜௌபர்
வாழைச்சேனை.

**மனிதா!**
போர்
ஆயுதங்களையும்
கொண்டு வந்து
எனக்கு
பழக்கி விடு!
பீ.சி.அன்ரன்-மட்டக்களப்பு

**கைதிகள்**
நாம்
இருவரும்
கைதிகளே..
நம்
சோகங்களை
பரிமாறிக்
கொள்வோமாக.
த.கண்ணன்-வவுனியா.

**மெல்லச் சாக**
சயனைட்
உடனே கொல்லும்!
இது-மெல்லக் கொல்லும்!
ஹபீலா நிஹ்ரீர்-புத்தளம்.

**இல்லாமல் வருமாம்**
கொஞ்சம் பொறு
பரீட்சித்துப் பார்க்கின்றேன்
நெருப்பில்லாமல்
புகை வருமாம்.
குமுதா-ரஜமல்வத்தை.

**(ப)புகை**
மிருகத்தோடு
புகைக்கும் மனிதனே
நீ
மனிதத்தோடு மாத்திரம்
பகைப்பதுவும் ஏன்?
ஷர்மி-கண்டி.

## வாசகசாலை

பக்கம் சாராது
பகையைத் தேடாது
பக்குவத்துடன்
பற்பல சுவையான செய்திகளை
பாமர மக்களும் அறியும் வகையில்
பஞ்ச வர்ணப் படங்களுடன்
படைத்து வருகின்றாய்
வாழ்க நீர், வாழ்க உன் புகழ்.
க. முரசொலிமாறன்-அக்கரைப்பற்று.

•

என் அமிர்த முரசமே!
அளவில் சிறிதானாலும் குறளுக்கு ஒப்பாகி தரத்தில் உயர்ந்துவிட்டாய். மகாபாரதப் பிரசுரத்தால் உன் முயற்சிக்கு சிகரம் வைத்து பார்போற்றும் மலரானாய். பாரதமும் தொடரட்டும்- உன் முயற்சியும் உயரட்டும். வாழ்க! உன் பணி.
ந. ரதீஸ்வரன்-தம்பிலுவில்-2.

•

அன்பின் தினமுரசே!
புதிதாகக் கவிஞர்களை உருவாக்கி அவர்களில் சிறந்தோருக்குப் பரிசில் வழங்க உன்னால் மாத்திரமே முடியுமன்றி வேறு எதனாலும் முடியாது.
க. மதிசீலன்-களுவாஞ்சிக்குடி.

•

வடக்கில் நடக்கும் பிரச்சினைகளை தெட்டத் தெளிவாக உடனுக்குடன் அள்ளி வழங்குகிறது தினமுரசு. மற்றும் சிறுகதை, தொடர்கதை ரசிகன் எழுதும் கண்ணே மதுமிதா என்பன முரசுக்கு மெருகூட்டுகிறது.
ஏ.எல்.அமீர் ஹுஸைன்-கல்முனை.

•

வெகுமதி கிடைத்தது
என்னால் தங்கள் பத்திரிகைக்கு அனுப்பி, பிரசுரமான "பனை" என்ற கவிதைக்கு பரிசும், பாராட்டும் கிடைத்துள்ளது. கடந்த 28.11.93 தினமுரசு வாரமலரில் பிரசுரிக்கப் பட்டிருந்த "பனை" சிறுகவிதையைக் கண்ணுற்ற பனை அபிவிருத்திச் சபை (73/4, கீறீன் வீதி, திருகோணமலை) என்னை அழைத்து கடந்த 13.12.93ல் கௌரவித்துப் பாராட்டியதோடு ரூபா 250/= ரொக்கப்பணமும் தந்தது. இந்த வகையில் "தினமுரசு" பாராட்டப்பட வேண்டியது. எனது மனமார்ந்த நன்றியை தினமுரசுக்குத் தெரிவிப்பதோடு, அதனது சேவை மென்மேலும் புத்தாண்டில் பொலிவுடன் திகழ வாழ்த்துகிறேன்.
க. நிமலதாசன்-மாங்காடு.

**மகாபாரதம்**
வாராவாரம் தினமுரசில் 'மகாபாரதம்' வசனம் இடம்பெறுவது கண்டு மகிழ்ச்சியும், வியப்பும் கொண்டேன். வாழ்க முரசு! வளர்க தமிழ் முரசு!
எம்.ஹயாத்-மட்டக்குளிய.

•

உன் வரவை எதிர்பார்த்து உன்னை என் கரங்களுக்குள் எடுத்தவுடன் தான் சந்தோசம். பக்கம் 1 முதல் 20ம் பக்கம் வரை தித்திக்கும் தேன் அமுதம். தினமுரசு நீடூழி காலம் வாழ எனது வாழ்த் துக்கள். அது சரி யாரது புதிர் போடும் ரசிகன் எங்களையெல்லாம் கேள்விக்குறியில் அதிர வைக்கும் ரசிகன்?
மா.சுலேந்திரன், நமுலிஸ்வதி, மா. சற்குணம், இ.சங்கீதா
-மட்/புதுக்குடியிருப்பு



•

ரம்யா சாகக் கூடாது!
எம் மனதில் நீங்கா இடம் பெற்ற தினமுரசே! கண்ணே மதுமிதா கவர்ந்திழுக்கிறது. ஆரம்பத்தில் இருந்து பார்க்க தவறியதை நினைத்துவேதனை அடைகிறோம். ரம்யாவை சாவு தழுவக்கூடாது என்பதே எம் ஆசை. ரசிகனுக்கு எம் வாழ்த்துக்கள். முரசே உன்னை என்னவென்று பாராட்டுவது.
ஸரீனா எஸ்.ஹமீட், ஹலீமா.எஸ்.ஹமிட், மொஹமட் ஹில்மி, மல்வான் ஹின்ன, அக்குறண.

•

இலக்கிய நயம்
"காணாத போது தான் கோபம்." என்ற இலக்கிய நயம் சூப்பர். சராசரி பெண்களின் நிலையை மிகவும் அழகாக எடுத்தியம்பி யுள்ளார் நமது ரசிகன். ரசிகனின் ரசிகையான நானும் ரசிகன் மேல் காணாத கோபமே. என்றாலும் பாராட்டுக்கள்.
செல்வி. ஜெயா செல்லத்தம்பி- கிண்ணியா-01.

•

உண்மைக்கு இலக்கணம் முரசே!
வாராவாரம் தாங்கி வரும் உன் அறுசுவை அம்சங்களே எங்கள் தெவிட்டாக் கனி. நீ அட்டகாசமான




வர்ணப்புகைப்படங்களோடு உலா வரும் நிலா. உன் அறிவாற்றல் தொடர்ந்தும் சேவையாற்ற எனது வாழ்த்துக்கள்.
எம். எஸ்.ஜுனைட்-தோப்பூர்.

•

"தகவல் பெட்டி' தந்த தரமான தகவலுக்கு தாங்க்ஸ். சிறந்த தகவல்களைத் தேடிப்பிடித்து எமக்களிப்பதில் நிகரில்லை உனக்கு பாரெங்கும் உன் புகழ் பரவ என் வாழ்த்துக்கள்.
ஏ.ஸ.நிஸானா-எருக்கலம்பிட்டி-03.

•

சிறுகதைகள் அத்தனையும் சூப்பர். தேன் கிண்ணம் சுவையாக இருந்தது. மொத்தத்தில் சூடு, சுவை சுவாரஸ்யமான ஒரே ஒரு மலர் நீயே. வாழ்க வளர்க உன் சேவை.
ஏ.ஸி.எம்.நிஸானா-பள்ளிவாசல்துறை.

•

மிகச் சொற்ப காலத்தினுள் எம்மிதயங்களை கொள்ளை கொண்ட முரசே...... நீ ஏந்தி வரும் ஆக்கங்களோ......சூப்பர். முரசில் மிளிரும் அனைத்தம்சங்களும் தேனூற்றுக்கள். முரசே...உனக்கும் எனக்குமுள்ள உறவு நெடுநாள் திளைக்கட்டும். வாழ்த்துக்கள் உன் வளர்ச்சிக்கு.
ரிஸ்னா ஏ ரிஸ்வியா-தர்கா நகர்.

•

புதிய அம்சம் "மகாபாரதம்" வரவேற்கத்தக்கது. ரசிகன் நம் நாட்டு எழுத்தாளரா..... அறிமுகப்படுத்துங்களேன். இலக்கிய நயம் படு சுவாரசியம். கவிதைகள் சூடானவை. வாழ்த்துக்கள் தினமுரசிற்கு. அதை அள்ளி வழங்கும் ஆசிரியருக்கும் எனது பாராட்டுக்கள்.
கே.வாணி.

•

வாரா வாரம் புதுப்பிறப்பு. பக்கத்திற்கு பக்கம் விறுவிறுப்பு. படிக்க படிக்க சுறுசுறுப்பு- இது தான் தினமுரசின் தனி சிறப்பு!
மா.குமார்-கண்டி.

•

அன்பான தினமுரசே! வாரம் ஒரு முறை எமது கரங்களில் தவழ்ந்து எமது இதயத்தில் மலராக பூத்து மனம் தரும் தினமுரசே. பாப்பா முரசு பகுதியில் நீ தரும் தெவிட்டாத நல்ல ஆக்கங்கள் மென்மேலும் தொடர வேண்டும் என உனை வாழ்த்துகின்றோம்.
த.சாண்டில்யன், த.தணிகையோன், - எருவில்.

•

ஆருயிர் முரசே!
உன்னை மிக சொற்பகாலத்தில் தான் சுவைத்தேன்.வாரம் ஒரு முறை உன்னை சுவைக்காமல் இருக்க முடியவில்லை. வெள்ளிக்கிழமை வந்தாலே போதும், விழுந்தடித்து உன்னை நாடுகின்றேன். உன்னை பார்த்தால் போதும் பசியும் மறக்குதே!
செல்வி ஏ.எச்.றெஜீனா-பதுளை.

•

முத்தான என் முரசே,
புழுகில்லாமல் நீ போடும் "எக்ஸ்ரே ரிப்போட்" உண்மை நிலை அறிய உதவுகிறது.
ரசிகன் எழுதும் "கண்ணே மதுமிதா" என்னை இடையில் சில நாள் தவிக்க வைக்கிறது. பிரகலாதனின் "ஆன்மிகத்தை" சிறுவர்களுக்கு சிறந்த சிந்தனையை தூண்டுகிறது. தினமுரசே எப்படி வாழ்த்தலாம் உன்னை திண்டாடுகிறேன் தினமும் நான்.
ஆர். மீனலோஜனி-களுவாஞ்சிக்குடி.

•

அன்பின் தினமுரசே,உனது சேவையை சிறியோர் முதல் பெரியோர் வரை பாராட்டுகிறார்கள். உள் நாட்டிலும் வெளிநாடுகளிலும் உன்னை பாராட்ட வேண்டுமென வாழ்த்துகிறேன்.
வீ.அன்புத்துரை-வெளிமடை.

# ஆன்மீகம்

## மீண்டும் பிறப்பது எப்படி?



"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன்" என்கிறார் இயேசு கிறிஸ்து. (யோவான் 3:3)

தாயின் கருவறையிலிருந்து பிரசவித்து, உலகத்திற்கு மனிதன் மழலை வடிவில் வெளிப்படுவது முதற்பிறப்பு.

பின் எப்படி மீண்டும் மனிதன் பிறக்க முடியும்? மீண்டும் பிறப்பது என்றால் என்ன?

மனிதன் கருவறையில் உதித்தது முதல், அவனது இதயம் பாவத்தால் நிரம்பி இருக்கிறது. பொய், கீழ்ப் படியாமை, வஞ்சகம், வேசித்தனம், பகை, விரோதம், இச்சைகள் இது போன்ற பாவ இருள் இருதயத்தை நிறைத்திருக்கிறது. இதைத்தான் தாவீது ராஜா, "இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள்" என்றான். (சங்கீதம் 51:5)

இந்தப் பாவங்களிலிருந்து விடுபட்டு, அதாவது பாவத்திற்காகச் செத்து, நீதிக்காகப் பிழைப்பதே மறுபிறப்பு.

ஒருவன் தனது பாவங்களை எண்ணி, அதற்காய் மனஸ்தாபப் பட்டு, இறைவனிடத்தில் இறைஞ்சும் போது அவர், அவனது பாவங்களை மன்னித்து, அவனை புதிய மனுஷனாய் மாற்றுகிறார். இங்கு மறுபிறப்பு நிகழ்கிறது.

இதற்குத்தான் கிறிஸ்தவத்தில் ஞானஸ்நானம் எனும் திருமுழுக்கு அளிக்கப் படுகிறது. மனிதன் தனது பாவங்களுக்காக மனஸ்தாபப்படும் போது அவனது பாவம் யாவும் சாக அவன் அடக்கம் பண்ணப் பட்டதுபோல தண்ணீருக்குள் அடங்கி விடுகிறான். பின்னர் மீண்டும் எழுகிறான்.

நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். (ரோமர் 6:11)

ஜி.செல்வா.

## சிந்தனைக்குச் சில நன்மொழிகள்

- அல்லாவைத் தியானிப்பதால் உள்ளங்கள் நிம்மதி அடைகின்றன. -அருள் மறை அல்குர்ஆன்-
- இறைவனைத் துதிக்காமலும்- நபியவர்கள் மீது ஸலவாத் மொழியாமலும் எவர் பிரார்த்திக்கிறாரோ அவரது பிரார்த்தனை ஏற்கப்படுவதில்லை. -நபி மொழி-
- இறை பாதையில் தம் இன்னுயிரை அர்ப்பணித்த நல்லடியார்களின் உடலங்கள் மரணிப்பதில்லை. அத்தகையோர் தாம் இறைவனிடத்தில் உயிரோடு இருக்கின்றனர். அவர்களுக்கு ஆகாரமும் வழங்கப்படுகிறது. (திருமறை)
- மக்கள் மீது ஒரு காலம் வரும். அக்காலத்தில் முன்னோர்களில் நலலோர்களைத் தூற்றக்கூடிய போலி அறிஞர்கள் தோன்றுவர். இவர்களின் தூண்டுதலால் மக்களில் பலர் சன்மார்க்க விடயங்களில் புதுமையான வழிகளைப் பின்பற்றுவர். பணக்காரர்களின் விருப்பத்துக்கேற்ப சன்மார்க்க நடைமுறைகள் மாறி விடும். வணக்க முறைகள் குறைந்து சுருங்கிவிடும். பண ஆசையில் மயங்கி அறிவை விலை பேசும் அறபாகள், அறிஞர்களாக உருவெடுப்பதால் இந்நிலை ஏற்படும். (ம ஆரிபுல் கிதாப்)
- இறுதி நாள் சமீபமாகும் போது பள்ளிவாசல்கள் அழகிய- உயர்ந்த கட்டடங்களாக நிர்மாணிக்கப்படும். ஆனால் உள்ளச்சத்துடன் தொழுகை நிறைவேற்றுவோர் விரல் விட்டு எண்ணக்கூடிய ஓரிருவரே இருப்பர். பள்ளிவாசல்கள் உலக விவகாரங்களைப் பேசக்கூடிய இடங்களாக மாற்றமடையும். (நபிமொழி)

திஹாரிய-ஹாரித்

# உளவுப் பிரிவினர் 17 பேருக்கு பிரபா பரிசு
# பூநகரி வெற்றிக்கு வேவுப் பிரிவே காரணமாம்
## புலிகளின் கூட்டங்களில் பொட்டு அம்மானுக்கு முக்கியத்துவம்

யாழ்ப்பாணத்தில் வைத்து தமது இயக்க உளவுப்பிரிவினர் 17 பேருக்கு பிரபாகரன் பரிசில்கள் வழங்கியுள்ளார். பரிசில்கள் வழங்கப்பட்டவர்கள் புலிகள் அமைப்பின் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

பூநகரி முகாம் மீதான தாக்குதலின் பின்னர் தமது இயக்கத்தின் உறுப்பினர்களை உற்சாகமூட்டும் வேலைகளில் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் ஆர்வம் காட்டி வருகிறார்.

அதே சமயம் பூநகரி மோதலின் வெற்றிவிழாக் கூட்டங்கள் நடத்தி, வடபகுதி மக்களிடையே தமது இயக்கம் பற்றிய நம்பிக்கையூட்டல்களிலும் புலிகளின் பல்வேறு பிரிவுகளும் ஈடுபட்டுள்ளன.

யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பூநகரித் தாக்குதல் வெற்றிவிழாக் கூட்டத்தில் பிரபாகரனுக்கு கேடயம் ஒன்று பரிசளிக்கப்பட்டது.

அதனை பிரபாகரன் சார்பில் புலிகள் அமைப்பின் உளவுப் பிரிவுத் தலைவர் என்று கருதப்படும் பொட்டு அம்மான் பெற்றுக்கொண்டார்.

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களில் ஒருவரான பொட்டு அம்மான் தற்போது பகிரங்கக் கூட்டங்களில் கலந்துகொண்டு வருகிறார்..

இயக்கத்தின் மூத்த தளபதி என்று குறிப்பிடப்படுகிறார்.

பொட்டு அம்மான் என்ற பெயரில் தமது இயக்கத்தில் யாரும் இல்லை என்றே முன்னர் புலிகள் கூறிவந்தனர்.

இப்போது தமது மூத்த தளபதி என்று பொட்டு அம்மானை குறிப்பிடுகின்றனர்.

பிரபாகரனின் நம்பிக்கைக்குரியவர் என்று கருதப்படும் பொட்டு அம்மான் இப்போது பகிரங்கமாக முதன்மைப் படுத்தப்படுகிறார்.

மாத்தையாவுக்குப் பின்னர் பிரபாகரனுக்கு அடுத்த நிலையில் முக்கியப்படுத்தப்பட்டு வந்த திரு.பேபி சுப்பிரமணியம் முன்னர் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றி வந்தார்.

இளங்குமரன் என்ற பெயரில் சகல பொது நிகழ்ச்சிகளிலும் அவர் பங்குகொண்டார்.

தற்போது பேபி சுப்பிரமணியம் கூட்டங்களில் கலந்து கொள்வது குறைந்துவிட்டது.

அவருக்குப் பதிலாக பொட்டு அம்மான் இப்போது பொதுக்கூட்டங்களில் கலந்து கொண்டு வருகிறார்.

இதே வேளை தமது உளவுப் பிரிவைச் சேர்ந்த 17 பேருக்கு பிரபாகரன் பரிசில்கள் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்பான இரகசிய முகாம் ஒன்றில் வைத்து அவர்களுக்கு பரிசில்கள் வழங்கிய பிரபாகரன் அங்கு உரையாற்றும் போது,

"கெரில்லாத் தாக்குதல்களில் எமது ஆயுதப்போராட்ட வடிவம் என்றுமில்லாதவாறு பெரு வளர்ச்சி கண்டுள்ளது.

கெரில்லாப் போர் முறையில் சிறிய அளவிலான தாக்குதல்களை நடத்தி வந்த நாம், இன்று பாரிய தாக்குதல்களை நடத்தும் சக்தி பெற்றுள்ளோம்.

இந்தப் பாரிய வளர்ச்சிக்கு வேவுப் பிரிவினரின் பங்கு முக்கியமானது.

வேவுப்பிரிவினரின் துணிகரமான தாக்குதல்கள் மூலுமே பூநகரிச் சமரில் நாம் வெற்றியீட்ட முடிந்தது."

என்று குறிப்பிட்ட பிரபாகரன் மேலும் தமதுரையில்,

"வேவுப் பிரிவினர் பெற்றுத்தரும் தகவல்களின் அடிப்படையிலேயே நாம் தாக்குதல்களை நடத்துகிறோம். இந்தப் பணியில் எத்தனையோ உறுப்பினர்கள் பலியாகியிருக்கின்றனர்" என்றும் கூறியுள்ளார்.

பூநகரி முகாம் தாக்குதல் அரசு மீது அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், அதனால் எதிர்க்கட்சிகள் அரசு மீது நிர்ப்பந்தங்களை ஏற்படுத்த முடிந்துள்ளதாகவும் புலிகள் யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளனர்.

புலிகள் அமைப்பின் அரசியல்துறைப் பொறுப்பாளர் என்று சொல்லப்படும் கரிகாலன் சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போது, இனி பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம் போன்ற பேச்சுகளுக்கே இடமில்லை. மாபெரும் யுத்தம் ஒன்றுக்கு மக்கள் அணி திரளவேண்டும் என்று கூறியுள்ளார்.

## உங்கள் துயரங்களில் முரசும் பங்கெடுக்கிறது!

நாடெங்கும்
வானம் தன் பலம் காட்டியிருக்கிறது.
கொடிய மழையில் பெருகிய
வெள்ளத்தில்
பல்லாயிரம் குடும்பங்கள்
அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

வடக்கு-கிழக்கிலும்
வெள்ளப்பெருக்குத் தோன்றி
ஏற்கனவே அல்லப்படும் மக்களை
தானும் தன் பங்குக்கு
அவலப்படுத்தி அகதிகளாக்கியுள்ளது.

கொடிய போரில்
அகதிகளானவர்கள்
எப்போது போர் முடியும்,
எப்போது வாழ்வு விடியும்

என்று அகதி முகாம்களில்
விரக்தியோடு காத்திருக்க
அங்கும் வெள்ளம் புகுந்து
அங்கிருந்தும் அவர்களை
விரட்டுகிறது.
சுமைகளுக்கு மேல் சுமைகள்.
துயரங்களுக்கு மேல் துயரங்கள்.

வெள்ளப் பெருக்கால்
பாதிப்படைந்த சகல மக்களினதும்
சுமையான துயரங்களை
தினமுரசும் பகிர்ந்து கொள்கிறது.

தகுந்த நிவாரணப்பணிகள்
துரித கதியில்
மேற்கொள்ளப்படுவதும்,
நிவாரணப்பணிகளில்
பாரபட்சமற்ற அணுகுமுறைகள்
கைக்கொள்ளப்படுவதும்
பாதிக்கப்பட்டுள்ள மக்களின்
துயர் துடைக்க அவசியமாகும்.

அரசாங்கமும்- அரச அதிகாரிகளும்
தொண்டர் நிறுவனங்களும்
தம் கடமைகளை
திறம்பட ஆற்றுவார்கள்
என்று நம்புவோமாக.

## "கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும்"
### மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கூறுகிறார்கள்

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் கடந்த 17.12.93 அன்று வகுப்புக்களை பகிஷ்கரித்தனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற ஒரு மாதகால அவகாசம் வழங்குவதாகவும் அதன் பின்னரும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் பகிஷ்கரிப்பு தொடரும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

தமது கோரிக்கைகள் தொடர்பாக மட்டக்களப்பு தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் சங்கம் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

1. மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி முதலாம் தரதொழில் நுட்பக் கல்லூரியாக உயர்த்தப்பட வேண்டும்.

2. நிரந்தரமான அதிபர், பதிவாளர், உப அதிபர், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

3. சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியுடன் இயங்காமல் தனிமையாக இயங்குவதற்கு வழி செய்ய வேண்டும்.

4. அரசாங்க வர்த்தமானி மூலம் விளம்பரப்படுத்திய சகல கற்கை நெறிகளும் 1994 தொடக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

5. மாணவர்களாகிய எங்களுக்கு தேவையான சகல தளபாடங்களும் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

6. கட்டி முடிக்கப்பட்ட வேலை கூடங்களுக்குரிய கற்பித்தல் இயந்திரங்கள், உபகரணங்கள் முதலியன உடனடியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இவைகளை அரசாங்கம் செய்து முடிக்குமா என்பதில் எங்களுக்கு பலத்த சந்தேகம் எழுந்துள்ளது. எனவே இலங்கையில் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கி நூற்றாண்டும் கடந்து விட்டதை கொண்டாடும் வைபவத்தை, மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களாகிய நாங்களும் தொழில் நுட்பக் கல்வி பெற வேண்டும் என்ற ஆவல் உள்ளவர்கள் என்பதனால் ஜீரணிக்க முடியாமல் உள்ளது. எனவேதான் தொழில்நுட்பக் கல்லூரியில் நூற்றாண்டுவிழாவான 17.12.93 அன்று நாம் வகுப்புக்களைப் பகிஷ்கரித்தோம்.

## எடுத்துச் சொல்லியும் செவியில் ஏறவில்லை! வாங்குவதில் வேகம்! சேவையிலே மந்தம்!!

(திருகோணமலை நிருபர்)



நீரோடும் வாய்க்காலுக்குள்ளாக மக்கள் பயணம் செய்கிறார்கள் என்று நினைத்து விடாதீர்கள். மக்கள் போகும் பாதையில்தான் நீர் பயணம் செய்கிறது.

வரிப்பணம் அறவிடுவதில் கண்டிப்புக்காட்டும் நகராட்சி மன்றம் சேவை என்று வந்தவுடன் கண்டும் காணாமல் இருந்து விடுவதால் பாழடைந்து போன தில்லை நகர் வீதிகளே இவை.

தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் காலத்தில் சீராகச் செப்பனிடப்பட்ட வீதிகள் இன்று மக்கள் பலமுறை எடுத்துச் சொல்லியும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

நகரை அழகாக வைத்திருங்கள்- தூய்மையாக வைத்திருங்கள் என்று பிரச்சாரம் செய்ய வேண்டிய நகரசபையார் தங்கள் விடுதியினின்று மழை நீருடன் கழிவு நீரையும் மதிலின் கீழ்ப்புறத்தால் மக்கள் பாதைக்குத் திருப்பி அது இரண்டு வீதிகளை ஊடறுத்துப் பாயும் காட்சிதான் மேலேயுள்ள படம்.

## சபாஷ் சந்திரிக்கா!



"நாட்டில் இனப்பிரச்சனை இல்லை. பயங்கரவாதப் பிரச்சனை மட்டுமே உண்டு என்பதில் எனக்கு உடன்பாடு கிடையாது.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் இந்த நாட்டில் ஏற்பட்ட இனவாத, மொழிவாத, மதவாத அரசியல்தான் இன்றைய இனப்பிரச்சனைக்கு காரணமாகும்.

1983 இனக்கலவரத்திற்கு அரசியல் வாதிகளின் திட்டமிட்ட நடவடிக்கைகளும் காரணமாக அமைந்தன."

மேல் மாகாண முதல்வர்
திருமதி சந்திரிக்கா.

## 1993ல் மரணமானோர் 1949 பேர்!

93ம் ஆண்டில் யாழ் போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டோர் தொகை 57,700 பேர்கள் என்று புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கிறது.

நோய்கள், தொற்றுநோய்கள், யுத்தத்தின் இடையில் சிக்கியவர்கள், புலிகள் அமைப்பினது போரில் காயப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரில் 1949 நோயாளர்கள் மரணமாகியுள்ளனர். யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானவர்கள் தொகை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருப்பி அனுப்பாதே! சுவிஸில் ஆர்ப்பாட்டம்!!

சுவிற்சர்லாந்திலுள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப அந்த நாடு அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளைக் கண்டித்து அங்குள்ள இலங்கை அகதிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

சூரிச் விமான நிலையம் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்ட மறியல் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகள் பங்குகொண்டனர்.

## தொடர்ச்சியான மழையால் விவசாயிகள் பாதிப்பு

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பிரதேசத்தில் அண்மைக் காலமாக தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் விவசாயிகளே பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இப்பகுதி விவசாயிகள் மிகவும் பாதிப்படைந்ததோடு இரண்டு, மூன்று தடவைகளும் விதைப்பு வேலைகளையும் மேற்கொண்டுள்ளனர் எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது இப்பகுதியில் சில வீடுகளும் சுவர் விழுந்து சேதமடைந்தும் காணப்படுகின்றதாகவும் தெரிய வருகின்றது.

## 'உறவு முறியாது' முரசு சொன்னதே நடந்தது!





இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் பதவி விலகப் போவதாகவும், அரசோடு இ.தொ.கா.வின் உறவு முறியப்போவதாகவும் சில பத்திரிகைகள் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தின.

ஆனால் தினமுரசு மாத்திரமே முரண்பாடுகள் இருந்தாலும் உறவு முறியாது என்று முன்கூட்டியே செய்தி வெளியிட்டிருந்தது.

இப்போது அமைச்சர் தொண்டமானும் அதனையே கூறியுள்ளார்.

## தமிழ்-முஸ்லிம் மகாவித்தியாலயங்கள் தேவை! மத்திய மாகாணத்தில் வலுவாகிவரும் கோரிக்கை!!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தரம் வாய்ந்த மகாவித்தியாலயங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கை வலுவடைந்து வருகிறது.

மத்திய மாகாண சபைக் கூட்டங்களிலும் மேற்படி கோரிக்கை பலமாக முன்வைக்கப்பட்டது.

இருபத்தி ஐயாயிரம் தமிழ் மாணவர்களுக்கு ஒரு மகாவித்தியாலயம் என்ற அடிப்படையிலேயே இப்போது நுவரெலியா, மாத்தளை, கண்டி ஆகிய பிரதேசங்களில் தமிழ் பாடசாலைகள் இருக்கின்றன.

மத்திய மாகாணத்தில் உள்ள ஒரு இலட்சத்து பதினாலாயிரத்து நானூற்றி ஐம்பத்தொன்பது தமிழ் மாணவர்களுக்கு 5 ABC பாடசாலைகள் மட்டுமே உள்ளன.

கண்டியில் ஒரு தமிழ் மகாவித்தியாலயம் இல்லாத குறை நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கிறது.

கண்டியில் தரமான முஸ்லிம் மகாவித்தியாலயம் ஒன்றை உருவாக்க முஸ்லிம் அமைச்சர் ஒருவர் மேற்கொண்ட முயற்சியும் பயனளிக்கவில்லை.

## கிழக்கில் இருந்து வடக்கே இராணுவம்?

மட்டக்களப்பில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரில் ஒரு பகுதியினர் அங்கிருந்து திரும்பப் பெறப்பட்டு வடக்கே உள்ள முகாம்களுக்கு அனுப்பப்படுவதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் இராணுவத்தினர் விட்டுச் செல்லும் பகுதிகளில் விசேச அதிரடிப்படையினர் நிலைகொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

சமீபத்தில் யாழ் குடாநாட்டில் கடும் மழை பெய்து கொண்டிருந்த போதும் இடைக்கிடையே ஷெல் வீச்சுக்கள் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

மழை நேரத்திலும் விமானப்படை விமானங்கள் பலாலி இராணுவ முகாமுக்கு அடிக்கடி சென்று வந்தன..

மேலதிகப் படையினரை அங்கு கொண்டு சென்று இறக்கும் வேலைகள் நடைபெறுவதாக யாழ் செய்திகள் கூறுகின்றன.


## திருவெம்பாவை சிறப்பு பூஜைகள்

கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி கோவிலில் திருவெம்பாவை மற்றும் தனூர் மாச பூஜைகள் கடந்த 16.12. 93 அன்று ஆரம்பமாகி 14.01.94 வரை நடைபெறுகின்றன.

பூஜைக்கான சிறப்பான ஏற்பாடுகளை தேவஸ்தான நிர்வாகம் செய்துள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## விளம்பரப் பகுதி

### மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex, NUWARA ELIYA.**
**Dial: 052-2508 & 3093**
**Celltel. 072-26088, 078-61933**

**COLOMBO BRANCH:**
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. 078-71243 FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நண்டபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

இம்மாதம் 20 தொடக்கம் 31 திகதிவரை
கொழும்பு மாநகரில் சந்திக்கலாம்.

Room No. 33 — அறை இல. 33
No. 26, Charliman Beach Inn — இல. 26, சார்ளிமன் பீச் இன்
Wellawatte. — வெள்ளவத்தை.

*Phone: 052-2508, 052-3093, 078-71243*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்



### ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு,*
*கொழும்பு 11,*
*போன்: 421398*



### நரைமயிர் கறுப்பாகிறது புதுமை ஆனால் உண்மை

வட இந்தியாவில் தேர்ச்சி பெற்ற டாக்டர் ஒருவரால் 10 வருடகாலமாக பரிசோதனை செய்து தயாரிக்கப்பட்டது.

மெடிக்கல் ஒயில் விலை ரூபா 280/=

நீங்கள் விரும்பிய எண்ணெயுடன் கலந்து பாவிக்கலாம்.

**கிடைக்குமிடங்கள்:**

*UVA MEDICALS , UDAPUSSELLAWA.*
*CITY DRUGS, NO. 93, OLCOTT MAWATHA,*
*(OPPOSITE RAILWAY STATION) PETTAH*
*SISIRA MEDICAL- KANDY ROAD, KIRIBATHGODA.*
*PRAME MEDICAL, 46- PERADENIYA ROAD, KANDY.*
*LANKA MEDICALS, MAIN STREET, RATNAPURA.*
*GOMES PHARMACY, BALANGODA*
*ARAVINDA TRADING CO., 47, STATION ROAD, GAMPOLA*
*ROYAL TRADE CENTRE, NUWARAELIYA.*
*UVA PHARMACY, BANDARAWELA.*
*RENUZA, WELIMADA*
*LANKA CHEMIST, EDIRIWEERA STORES,*
*STATION ROAD, BADULLA.*
*HAPUTALE PHARMACY, HAPUTALE.*

**இத்தைலத்தை விற்பனை செய்வதற்கு வியாபாரிகள் தேவைப்படுகிறார்கள்.**



### SARIKA TEX

Ladies Tailoring
24 மணிநேரத்தில்
சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்

உங்கள் உடலமைப்புக்கேற்றபடி
நவீன முறையில் தைத்துக்கொள்ள

*Hewa Shopping Complex*
*No. 69/5-1/1, 1st Floor,*
*Galle Road,*
*Dehiwela South.*


## இயங்க மறுக்கும் தொலைபேசிகள்! வளர்ந்துவரும் நகரில் தொடர்ந்துவரும் பெரிய குறை!!

(கல்முனை நிருபர்)

கல்முனை 067 என்ற குறியீடு இலக்கத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் குருக்கள் மடம், போரதீவு, வெல்லாவெளி தொடக்கம் பொத்துவில், குமண வரை கரையோரப் பிரதேசம் முழுக்க கல்முனை (டீஜரீ) மாவட்டத் தொலைத்தொடர்புப் பரிசோதகர் பொறுப்பில் தொலைபேசிச் சேவை பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதற்கான காரியாலயம் கல்முனை நீதிமன்றத்துக்கு அருகாமையில் யாட் ரோட்டில் அமைந்திருக்கின்றது.

சுமார் 60 மைல் நீளங்கொண்ட இடப்பரப்பை பராமரிப்பதற்கு ஒரு மாட்டு வண்டியேனும் தரப்படவில்லை என அதிகாரிகளும் ஊழியர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

பராமரிப்புக்கான வயர்களோ, தொலைபேசிகளோ வழங்கப்படவில்லை. இதன் காரணமாக தொலைபேசிகள் இயங்க மறுக்கின்றன. "டீஜரீ"யின் தொலைபேசி கூட இயங்க மறுக்கின்றது என்றும், அந்த தொலைபேசியில் உள்வரும் அழைப்புக்கள் மாத்திரமே வரும் என்றும் வெளிச் செல்லும் அழைப்புக்கள் செல்லாது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொலைபேசி இயங்காமல் விட்டதும் பாவனையாளர் ஒருவர் அதையிட்டு முறைப்பாடு செய்வார். முறைப்பாடு கிடைத்தவுடன் அதிகாரிகளும் ஊழியர்களும் ஓட்டமும் நடையுமாக சைக்கிளிலும் நடையிலும் வந்து விடுவார்கள். வக்குகளைத் திறந்து நீர்ப்பம்பி கொண்டு வக்குகளை இறைத்து வயர்களைச் சுழியோடிக் கண்டுபிடித்து வெட்டித் திருத்தி சரிக்கட்டி பாவனையாளருக்கு அவ்விடத்தில் இருந்தே தொலைபேசியில் "ஐயா உங்கட ரெலிபோனைச் சரிக்கட்டி விட்டோம். நல்லாப் பேசுவதா?" என்று கேட்பார்கள். பாவனையாளர் "இன்றைக்குத்தான் ரெலிபோன் சத்தம் நல்லாக்கேட்குது" என்று கூறுவார். 'சரி வைக்கிறோம்' என்று கூறிவிட்டு வைத்துவிடுவார்கள். பின்னர் அது பேசாது. இனிப் பேசவைக்க பாவனையாளர் இன்னொரு தடவை சம்பந்தப்பட்ட சகலரையும் சந்திக்க வேண்டும். இதுதான் இன்றைய ரெலிகொம் நிறுவனத்தாரின் தொ(ல்)லை பண்ணிச் சேவை. இது மாத்திரமல்ல. ஒருவர் 'தொலைபேசியை எடுத்துக் கதைத்தவுடன் அந்தக் கதை உடனே இன்னும் பலருக்கு சமகாலத்தில் கேட்கிறது. அதைப் போல ஒருவர் கதைத்தவுடன் கட்டணமும் பலருக்கு கொம்பியூட்டரில் பதிவாகிவிடுகின்றது. இதை விசாரித்தபோது நிலத்துக்கடியில் உள்ள கேபிள்கள், அவற்றில் உள்ள சிறிய வயர்கள் காலங்கடந்த காரணத்தினால் உஷ்ணத்தினால் உருகி ஒன்றோடொன்று இணைந்துவிட்டது: எனவே அவை தாமாகவே செய்திப் பரிவர்த்தனை செய்து கொள்ளுகின்றன என்று கூறுகின்றனர். இதற்குப் பரிகாரமாக 10 ஆண்டுகளுக்கு முன் போடப்பட்ட கேபிள்களை முழுமையாக மாற்ற வேண்டும் எனக் கூறுகின்றனர். அதற்குப் போதிய பணம் இல்லையாம்.

கல்முனையில் இருந்து நேரடியாகச் சுழற்றி பேசமுடியாது. 101ஐச் சுழற்றி 'கோல் புக்' பண்ணித்தான் பேசவேண்டும். அவ்வாறு புக் பண்ணினால் இரண்டொரு நாட்கள் கழித்தும் ஒரு கோல் கிடைப்பது அரிது. ஏற்கனவே கொழும்புக்கு தொலைபேசி வழிகள் போக 10உம் வரப் 10உம் இருந்தன. அவை பழுதடைந்து விட்டதன் காரணமாக தற்பொழுது மட்டக்களப்பில் இரவல் எடுத்து மூன்று வழிகள் போவதற்கும், வருவதற்கு 2 வழிகளும் செயற்படுகின்றன. இவற்றினூடாக சுமார் 700 பாவனையாளர்களின் தேவை எவ்வாறு நிறைவேறும்?

கல்முனை ஒரு வளர்ந்து வரும் நகரம். இப்பிரதேசத்தின் விவசாயம், மீன்பிடி, வர்த்தகம் என்பன சிறந்து விளங்குகின்றன. அலுவலக தேவைகள் ஆயிரமாயிரம். நடமாட்டம் கொழும்பு நகரை மிஞ்சி விடும். இவர்களது தேவைக்கு ரெலிகொம் நிறுவனத்தினர் நின்று பிடிக்க முடியாது விழி பிதுங்குகின்ற நிலையைத் தற்போது கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இதன் காரணமாக மக்கள் எப்போதும் அரசாங்கத்தையே குறை கூற முற்படுவர்.

எனவே சம்பந்தப்பட்டவர்களும், அரசும் இதில் அக்கறை கொண்டு உடனடியாக இக்குறைபாட்டை உடன் நிவர்த்திக்க ஆவன மேற்கொள்ள வேண்டும் என பொது மக்கள் தினமுரசுக்குத் தெரிவித்தனர்.

## புகார் பெட்டி

### குடியிருப்பாளர்களின் கவலை!

*திஹாரிய பிரதேச ஆதனவரி செலுத்துபவர்களும், குடியிருப்பாளர்களும் கீழ்வரும் முறைப்பாட்டை எமக்குத் தந்துள்ளனர். முறைப்பாடு வருமாறு-*

அண்மைக்காலமாக வாரண ரஜமஹா விஹாரைக்குச் செல்லும் பிரதான வீதியில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் எரியாத காரணத்தால் வாரண வீதி முற்றாகவே இருளில் மூழ்கியுள்ளது. பல முறை அதிகாரிகளின் கவனத்துக்கு இக்குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டும் பலனளிக்கவில்லை. பாதசாரிகளும் குடியிருப்பாளர்களும், வரி இறுப்பவர்களும், அச்சமும், கவலையும் கொண்டுள்ளனர்.

சிரமங்களையும், அசௌகரியங்களையும் மக்கள் எதிர் நோக்குவதால் தயவு செய்து உயரிய கவனத்தை ஈர்த்து மக்களின் அச்சத்தைப் போக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

எ.சி.எம்.தஸ்லிம்.-திஹாரிய நலன்புரி அமைப்பு.

### கொடுக்கப்படாத கொடுப்பனவுகள் தொலைக்கல்வி போதனாசிரியர்கள் கவலை!

இலங்கைத் தேசிய கல்வி நிறுவனத்தின் கீழ் இயங்கும் தொலைக்கல்வித் துறை மூலம் பயிலுனர் ஆசிரியர்கட்குப் பயிற்சியளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியளிக்கும் பணியில் இலங்கை முழுவதிலும் சிரேஷ்ட போதனாசிரியர்களாகவும், போதனாசிரியர்களாகவும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களின் கொடுப்பனவு, தேசிய கல்வி நிறுவனத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

போதனாசிரியர்களின் கொடுப்பனவுகளை உரிய காலத்தில் வழங்குவதில் தேசிய கல்வி நிறுவனம் அசிரத்தையாக இருக்கின்றது. கடந்த 1993 மே மாதத்திற்குப் பின்னர் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படவில்லை. சில போதனாசிரியர்கள் தமது சொந்தப் பணத்தில் தொலைக்கல்வி நிலையத்தின் தேவைகளுக்குச் செலவு செய்துவிட்டு மாதக் கணக்கில் காத்து இருக்கின்றனர்.

இதன் காரணமாகச் சில போதனாசிரியர்கள் தொலைக் கல்விக் கடமையை விட்டு நீங்குவதற்கும் யோசிக்கின்றனர்.

விடைத்தாள்கள் திருத்துவதிலும், செயன் முறைப்பரீட்சைக் கடமைகளிலும் பரீட்சகர்களாகக் கடமையாற்றினவர்களுக்குக் கூட இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

மேலும் கூட்டங்களுக்காகப் போதனாசிரியர்கள் கொழும்புக்கோ, கண்டிக்கோ, அல்லது வேறு இடங்களுக்கோ மாதாந்தம் அழைக்கப்படுகின்றனர். கூட்டங்கள் முடிவில், வரவுச் சான்றிதழ்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. அவற்றைக் கொடுப்பனவுப் பத்திரங்களுடன் வைத்து அனுப்பினால் மாதக் கணக்காக அவை வழங்கப்படாமல் தூங்குகின்றன.

வடகிழக்குப் பகுதிகளிலிருந்து கொழும்பில் நடைபெறும் போதனாசிரியர் கூட்டங்களுக்குச் செல்வதற்கு 200/- ரூபாய் மட்டுமே வழங்கப்படுகின்றது. ஆனால் 500/- ரூபாவுக்கு மேல் செலவேற்படுகின்றது. இவ்வாறு செலவிடப்பட்ட பணத்தைக் கூட உரிய காலத்தில் பெற முடியாமல் மாதக் கணக்காகக் காத்து நிற்க வேண்டியுள்ளது.

இது சகல தொலைக்கல்விப் போதனாசிரியர்கட்கும் கவலையையும் விரக்தியையும் தருகின்றது.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்துக் கொடுப்பனவுகள் உரிய காலத்தில் தாமதமின்றி வழங்க ஏற்பாடு செய்வார்களா? எமது குறையை நிவர்த்தி செய்ய உதவுவார்களாக?

எஸ்.எம்.உவைஸ்- கிண்ணியா.

### பஸ் தரிப்பிடமின்றி பயணிகள் அவதி!

குருநாகல்-கண்டி பிரதான வீதியில் அமையப்பெற்ற பறகஹதெனிய மக்களுக்கு கடந்த பல வருடங்களாக பஸ் தரிப்பு நிலையமொன்று இல்லாதது பெருங் குறையாக உள்ளது.

இவ்வூர் மக்கள் பஸ்ஸுக்காக மரங்களின் கீழும், கடைகளிலும் ஒதுங்கி நிற்கும் பரிதாப நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக பாடசாலை செல்லும் மாணவர்கள் தங்களுக்கு ஒரு பஸ் தரிப்பிடமின்றி மழை, வெயிலில் அவதியுறுவதை மாவத்தகம பிரதேச சபைக்கு முறையிட்டும் இதுவரை எதுவித நடவடிக்கையாவது எடுக்கப்படாமல் இருப்பதையிட்டு பெரும் கவலை கொண்டிருக்கின்றனர்.

எனவே, பறகஹதெனிய மக்களின் இப்பெரும் குறைபாட்டை நீக்குவதற்குரிய தகுந்த நடவடிக்கையை மேற்கொள்வது அவசியமாகும்.

-ரியாஸா பறகஹதெனிய-

### உள்ளதும் போச்சடா!

தற்போது ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகள், நாடகங்கள் மிகவும் அரிதாகி விட்டன. ஒளிபரப்பாகும் சில நிகழ்ச்சிகளைக்கூட நேரமாற்றம் செய்து 6.00 மணிக்கு ஒளிபரப்புகின்றனர். இதனால் தமிழர்களுக்கு ஏமாற்றம்தான். குறிப்பாக மலையகம் வாழ் தமிழர்கள் வேலை முடியவே 6.00 மணியாகின்றது. எனவே இந்நிகழ்ச்சிகளைப் பார்க்க முடிவதில்லை. மேலும் திங்கள், புதன் கிழமைகளில் ஒளிபரப்பான நாடகங்களுக்கு என்ன ஆயின? சகோதர மொழி பேசுவோர்க்கென தினமும் நாடகங்கள், நிகழ்ச்சிகள் தடையின்றி ஒளிபரப்பாகும் இவ்வேளையில் நாம் ஒரு 40 நிமிட நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக ஞாயிறு தினத்தை பூரணமாக ஒதுக்க முடியுமா? இதனையும் ஒரு சிலரால் மாத்திரமே பார்க்க முடியும். எனவே ஞாயிறு தினங்களில் ஒளிபரப்பாகும் இந்நிகழ்ச்சியினை தினமும் மாலை செய்தியறிக்கைகளுடன் சேர்த்து 6.30 முதல் 7.55 வரை ஒளிபரப்பு செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முடிவெடுப்பார்களா? ஏனென்றால் மற்றோருக்கு அநுமதிப்பத்திரத்திற்கு (வர்ணத் தொலைக்காட்சி) 250/- ரூபாயும் தமிழ் பேசுவோர்க்கு 25/- ரூபா மாத்திரமா அறவிடுகின்றார்கள்? எமது தலைவர்கள் எனக் கூறப்படுவோர்கள் கவனிப்பார்களா?

இராதி.சந்தியாகு.கந்தப்பளை.

### அந்தோ.....! அவலம் இங்கே

சாய்ந்தமருது-12ல் ஹமீதியா வீதி, என ஒரு வீதி. தொழிலாளர்கள் செறிந்து வாழும் இவ்வீதி, மழைக்காலங்களில் விதியின் விளையாட்டால் சிறு குளம் போல் ஆகிவிடுகின்றது.

நீர் ஓடிச் செல்லக்கூடிய வடிகால் வசதி எதுவும் இங்கு இல்லாமையும், கவனிப்பாரற்ற சமச்சீர் இல்லாத மேடுபள்ளங்களுமே இதற்குக் காரணமாகும்.

இப்போது இவ்வீதியில் முழங்கால் அளவுக்கு நீர் தேங்கி நிற்கிறது. இதனால் இப்பிரதேச வாழ் தொழிலாளர்களும், மாணவர்களும், பாதசாரிகளும் அனேக துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். தொடர்ந்து நீர் தேங்கி நிற்பதனால் துர் நாற்றம் வீசுகின்றது. எல்லாவற்றையும் விட நுளம்புத் தொல்லை, இரவில் தவளைகளின் புலம்பல் சகிக்க முடியவில்லை.

அரசியல் வாதிகள் தேர்தல் காலங்களில், வாக்குக் கேட்டு மட்டுமே இப்பிரதேசத்துக்கு விஜயம் செய்வார்கள். எந்தச் சூழலிலும் இப்பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படுவதே இல்லை. இந்த மாற்றான் தாய் மனப்பான்மை நீக்கப்படுமா? என இப்பிரதேச மக்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

இப்பிரதேச மக்களின் கஷ்டம் நீங்க, இனியாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்வார்களா? இவர்களின் குறை நிவர்த்தி செய்யப்படுமா?

முகம்மது யூசுப் அமீர்- மாளிகைக்காடு.

### பார்த்தார்கள்! - போனார்கள்!

நுவரெலியா மாவட்டத்தில் நாவலப்பிட்டிக்கு அருகாமையில் உள்ள சின்னக்கிராமம் தான் எமது பொல்வதுர எனும் கிராமம். இதற்கு முன்னர் ஒரு முறை நான் தினமுரசு புகார் பெட்டிக்கு தந்த சின்னத் தகவல்களினால் எமது பெரும் பிரச்சனையான பாதைப் பிரச்சனை தொடர்பாக கவனிப்பதற்காக சிலர் வந்தார்கள்; போனர்கள். அவ்வளவு தான். அவர்களுக்கே எமது பாதையால் வந்தது போதுமாகி போயிருக்க வேண்டும். ஏன் இந்த நிலை இன்னும் நீடிக்க தான் வேண்டுமா? நாம் படும் சொல்லொண்ணா துன்பங்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. எமது பாதையின் தோற்றம் இதோ தகுந்தவர்கள் பார்வைக்கு புகைப்படமாக இணைத்துள்ளேன்.

மேலும், ஒரு கடிதத்தை தபாலிடக்கூட நான்கு மைலுக்கு அப்பால் உள்ள நாவலப்பிட்டிக்கே நாம் கால்நடையாக செல்லவேண்டியுள்ளது. ஊருக்குள் ஒரு சின்ன தபால் பெட்டியாவது இல்லை. எந்தவொரு சின்னத் தேவைக்கும் நாவலப்பிட்டிக்கு தான் போக வேண்டும். இந்த நிலையில் கடும் நோயாளிகள், திடீர் நோயாளிகள் அவசர சிகிச்சையில்லாமல் இறந்து போனவர்கள் பட்டியல் நீண்டு கொண்டு போகிறது.

எம் பிரச்சனைகள் எல்லோருக்கும் புலப்படும்படியாக எத்தனையோ முறை எடுத்துக் கூறியும் எல்லோரும் ஏனோதானோ என்று வாக்கு தந்துவிட்டு பின் அதனை மறந்து மறைந்து போகிறார்கள். தயவு செய்து இதன் பிறகாவது எமக்கு ஒரு விடிவு கிடைக்க வேண்டும் என சம்மந்தப்பட்டவர்களை பணிவாக வேண்டுகிறேன்.

சித்தி வஸீலா சலாகுடீன்
பொல்வதுர.

### அரச கரும மொழி போனது எங்கே?

கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள, தேசிய வீடமைப்பு அதிகார சபையில் தான் கொழும்பு மாடி வீட்டு வாசிகள் வாடகை கட்ட வேண்டும். எந்தெந்த பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அங்கு வாடகை கட்டலாம் என்பதனை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே அறிவித்தலில் போடப்பட்டுள்ளது. இதனை தமிழிலும் எழுதி போட்டால் தமிழ் பேசக்கூடியவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

சபிக் அஹமட்-கொழும்பு-14.

### சுற்றுப்புறத்தில் பாம்புப் புற்று!

கலஹாவில் அமைந்துள்ள ஆறு ஏக்கர் அரசாங்க வைத்தியசாலை சுற்றுப்புறங்கள் காடுகளாகவும், பாம்பு புற்றுகள் வளர்ந்தும் காணப்படுகிறது. எனவே தயவு செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பொது மக்களும் இதனை கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென பணிவாய் கேட்டுக் கொள்கிறேன்.

ஸரபுன்னிஸா நிலாப்டீன்-கலஹா.

### திருத்தம் திடீர் நிறுத்தம்!

புத்தளம் மாவட்டத்திலுள்ள கீரியன் கள்ளி-ஆனமடுவ பிரதான பாதையில் முதலாவது மைல் கல்லுக்கு அருகிலுள்ள பிரதான பாலம் பழுதடைந்து பல காலம் சென்ற பின் அண்மையில் தான் திருத்த வேலைகள் ஆரம்பமாகியது.

எனினும் இப்பாலத்தின் கீழ் செல்லும் ஆற்றில் நீர் அதிகமாக செல்வதால் பதில் பாலம் போட முடியாமல் போய்விட்டது என்ற காரணம் காட்டி அப்பாலதிருத்த வேலைகள் திடீரெனக் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மழைக்காலம் ஆரம்பமாவது டிசம்பர் மாதம் என்பது அனைவருக்கும் தெரியாத விடயமல்ல. பாலத்தின் மேல் போடப்பட்டிருந்த கொங்கிரீட்டுகள் கழற்றப்பட்டு கீழே அடியில் தெரியும் தகரம் மட்டுமே பாலத்தின் மேல் உள்ளது.

நப்ஹான்-தாராபுரம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

— நாரதர் —

# அரசியல் கோமாளி சுவாமியும் அவருக்கு முக்கியம் கொடுத்த லங்காபுவத்தும்!



சுப்பிரமணியம் சுவாமி

கடந்த வாரம் பிரபா-மாத்தையா பிரச்சனை பற்றி எழுதியிருந்தேன்.

இலங்கை தொலைக்காட்சியில் கேட்ட செய்தி அதிர்ச்சியாக இருந்தது.

மாத்தையா கொல்லப்பட்டுவிட்டதாக லங்காபுவத் சொன்னதாக தொலைக்காட்சி அறிவித்தது.

"லங்கா புவத்" செய்திகளுக்கு இங்கே இருக்கும் மரியாதை தெரியாத விசயமல்ல.

இதில் இன்னொரு வேடிக்கை இந்தியாவிலிருந்து சுப்பிரமணியம் சுவாமி என்பவர் மாத்தையா மடிந்துவிட்டதாக சொல்லியிருக்கிறாராம். அவரது கூற்றை ஆதாரமாக வைத்தே 'லங்கா புவத்' அந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இங்கே 'லங்காபுவத்'துக்கு உள்ள மரியாதை கூட இந்தியாவில் சுப்பிரமணியம் சுவாமி என்பவருக்கு கிடையாது.

பரபரப்பான செய்திகள் மூலமாக தன் பெயரைப் பிரபலப்படுத்தவென்றே பிறப்பெடுத்த ஒரு அரசியல்வாதிதான் சுவாமி.

இலங்கைத் தமிழ் அமைப்புக்கள் சிலவற்றோடு ஆரம்பத்தில் அவருக்குத் தொடர்பிருந்தது.

அவரை ஒரு பெரிய புள்ளி, இந்திய மத்திய அரசில் செல்வாக்குள்ள ஆள் என்று நினைத்து இயக்கத்தலைவர்கள் சிலரும் மரியாதை கொடுத்ததும் பழைய கதை.

பின்னர் சுவாமிக்கு செல்வாக்கும் கிடையாது, சல்லிக்காசுக்கு மதிப்பும் கிடையாது என்று தெரிந்து அவர் வீட்டுப் பக்கமே இயக்கங்கள் எட்டிக்கூடப் பார்ப்பதில்லை.

அவரை அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயின் ஆள் என்றும் தமிழ் இயக்கங்கள் சில பகிரங்கமாகவே கூறியும் இருந்தன.

இந்திய அரசியலில் சுவாமிக்கு ஒரு கோமாளிக்குரிய அந்தஸ்தே காணப்படுகிறது.

யாரும் அவர் சொல்லும் விசயங்களை சீரியசாக எடுத்துக்கொள்வதில்லை.

இந்திரா காந்தியோடு நல்ல மாதிரி; ராஜீவ் காந்தியோடு நெருக்கம். நினைத்த நேரத்தில் சந்திக்க முடியும்; தான் நினைப்பது போல அவர்களை சிந்திக்கவைக்க முடியும் என்றெல்லாம் பந்தா காட்டியே அரசியல் நடத்தியவர் சுப்பிரமணியம் சுவாமி.

இந்திய அரசியலில் ஒரு தேர்தலில் நின்றால் தனது கட்டுக்காசைக் கூட காப்பாற்ற முடியாத சுவாமியின் பார்வை இலங்கைத் தமிழர் பிரச்சனை மீதும் விழுந்தது.

தனக்கு தமிழ் மீதும், தமிழர்கள் மீதும் பற்றுதல் இருப்பதாகக் காட்டிக்கொள்ள சிறந்த சந்தர்ப்பம் என்று கருதிய சுவாமி இலங்கைத் தமிழருக்காகப் பேசுவதாகக் காட்டிக் கொண்டார்.

அதனையும் யாரும் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை.

ஆரம்பத்தில் இருந்தே புலிகள் அமைப்பு சுவாமியோடு ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்றே இருந்து வந்தது.

அதனால் புலிகள் தன்னை மதிக்கவில்லை என்று சுவாமிக்கு கடுமையான கோபம்.

ரெலோ அமைப்போடு ஆரம்பத்தில் அவருக்கு உறவு இருந்தது. பின்னர் அதுவும் அறுந்து போனது.

ரெலோ இயக்கத்தின் முன்னாள் தலைவரும், புலிகளால் கொல்லப்பட்டவருமான சிறீ சபாரத்தினத்தின் சகோதரர் ஒருவர் தானே ரெலோ என்று தமிழ்நாட்டில் இருந்து அறிக்கை விட்டுக்கொண்டிருக்கிறார்.

அவரைப் பற்றியும் சிறிது சொல்ல வேண்டும். அவரது பெயர் எஸ்.கந்தா. ஆயுர்வேத வைத்தியர்.

அவரை தியாகியாக்கிய பெருமை இலங்கை இராணுவத்தினரையே சேர வேண்டும்.

சிறீ சபாரத்தினத்தை தேடிப் போனபோது அவர் வீட்டில் இல்லை என்பதால் கந்தாவைப் பிடித்துக்கொண்டு போனார்கள்.

சிறைவாசம் முடித்துத் திரும்பிய கந்தா கொலரைத் தூக்கிவிட்டுக்கொண்டு சபாரத்தினத்தின் வாரிசு என்று சொல்லித் திரிந்தார்.

வாரிசு அரசியல் தமிழ் இயக்கங்கள் மத்தியில் தொற்றிக்கொள்ளவில்லை என்பதால் கந்தாவை யாரும் கவனிக்கவில்லை.

இப்போது சங்கிலித் திருட்டு, மோட்டார் சைக்கிள் கடத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனையாளருக்கு புகலிடம் கொடுத்து நாலுபேர் இருந்தால் இயக்கம் என்ற விதியின் படி செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்.

அந்தக் கந்தா மீது சுவாமிக்கும் ஒரு பிடிப்பு.

கந்தாவை வைத்து சுவாமி தமிழ் நாட்டில் ஒரு ஊர்வலம் நடத்தினார். கலந்து கொண்டவர்கள் தொகை 30க்கு மேற்பட வில்லை.

தமிழ் இயக்கம் ஒன்று தன்னோடு இருப்பதாக காட்டிக்கொண்ட திருப்தி சுவாமிக்கு.

சுவாமியை விட கந்தா பரவாயில்லை. ஒரு முப்பது பேரையாவது கந்தாவால் திரட்டிக்கொடுக்க முடிந்தது.

ஆறரைக் கோடி தமிழர்கள் உள்ள தமிழ்நாட்டில் சுவாமியால் ஐந்து பேரைக்கூட திரட்ட முடியாது.

சுவாமியும் ஒரு கட்சி நடத்துகிறார். ஜனதா கட்சி. ஜனதா என்றால் மக்களைக் குறிக்கும். சுவாமியின் கட்சியில் அவரே சகலமும் - அவரே மக்கள். உறுப்பினர்களாக மட்டும் யாரும் சேருவதில்லை.

சமீபத்தில் சந்திரலேகா என்னும் பெண் அதிகாரியை கட்சியில் சேர்த்தார். பின்னர் சந்திரலேகா சுவாமியை ஓரம் கட்டப்பார்க்க சுவாமி உஷாராகி ஒரே பிரச்சனை.

கடந்த வருட ஜனவரிக்கு முன்னர் சுவாமி ஒரு வெடி குண்டுப் பிரச்சாரம் நடத்தினார். தமிழ் நாட்டில் ஜெயலலிதா ஆட்சி ஜனவரியோடு கவிழும். அதற்காகவே டில்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்து விட்டேன் என்று சொன்னார்.

அது பரபரப்பான செய்தியாக பத்திரிகைகளில் வெளிவந்தது. 93 ஜனவரி போய் இப்போது 94 ஜனவரியும் வரப் போகிறது-வந்து விட்டது. ஜெயலலிதா இருக்கிறார். சுவாமிதான் இடையிலே காணாமல் போய் மீண்டும் தோன்றியுள்ளார்.

தோன்றும் போது சூடான செய்தியோடு தோன்ற வேண்டும் என்று 'மாத்தையா மடிந்து போனார்' என்று அறிவித்திருக்கிறார்.

அதை தமிழகத்தில் யாரும் கண்டுகொள்ளவில்லை. இங்கேயுள்ள லங்காபுவத் காதில் வாங்கி காற்றில் கலக்க வைத்துவிட்டது.

கச்சதீவை மீட்கப் போவதாகச் சொல்லிக் கொண்டு சுவாமி கச்சை கட்டிய விசயம் லங்காபுவத்துக்கு தெரியுமோ தெரியவில்லை.

மாத்தையாவுக்கு முன்னரே தண்டனை வழங்கிவிட்டு, வழங்கிய தண்டனையை நியாயப்படுத்தவே இப்போது விசாரணை நடப்பதாக காட்டுகிறார்கள் என்றும் பேசப்படுகிறது.

எப்படியோ மாத்தையாவின் கதி நன்றாக இல்லை என்பது மட்டும் தெளிவு.

ஆனால் மாத்தையா மடிந்துவிட்டதாக சுப்பிரமணியம் சுவாமி சொல்வதை ஒரு நம்பகமான தகவலாகக் கொள்ள முடியாது.

தப்பித்தவறி சிலர் உண்மை பேசினால் கூட அது பொய்யாக இருக்குமோ என்ற சந்தேகம் வருவதுண்டு. அப்படித்தான் சுவாமி விசயமும். அவர் போன்றவர்கள்

மாத்தையாவுக்கு புலிகள் அமைப்புக்குள் பிரச்சனை இருப்பது உண்மை.

மாத்தையா உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பது கூட சந்தேகமானதாகவே இருக்கிறது.

தமது இயக்கத்தில் பிரதித்தலைவராக இருந்த ஒருவர் இப்போது எங்கேயிருக்கிறார் என்ற விபரத்தைக்கூட புலிகள் சொல்ல மறுக்கிறார்கள்.

மக்கள் விசயங்களை அறிய வேண்டும். மக்களுக்கு உண்மைகள் தெரியவேண்டும் என்பதில் அக்கறையில்லாமல் போயிருப்பதன் வெளிப்பாடே அதுவாகும்.

தாம் சொல்வதை மக்கள் கேட்கவேண்டும். அப்படியே நம்ப வேண்டும். அதுதான் இங்கே பொதுவான அணுகுமுறையாகி விட்டது.

உண்மைகளைப் பேசாமல் இருந்தால் அதனால் உண்மைகள் மரியாதை பெறும்.

■

# புதிய ஆண்டும் போர் வியூகங்களும்!



போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில் புத்தாண்டு மலர்கிறது.

புதிய இராணுவத்தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி சில்வா பதவி ஏற்றுள்ளார்.

புதிய இராணுவத்தளபதியின் துணைவியார் ஒரு தமிழ் பெண்மணி என்பது குறிப்பிடத்தக்கது.

அதனால் புதிய தளபதிக்கு சில சங்கடங்கள் தோன்றக்கூடும்.

சூழல்களையும், திறமைகளையும் கவனத்தில் எடுத்து நிறை குறைகளை ஆராயாமல் இனவாதக் கண்ணோட்டத்தோடு நோக்கும் கூட்டம் கூச்சல் போடக்கூடும்.

அவர் நிதானமான போக்கைக் கடைப்பிடித்தால் அதற்கு வேறு கோணத்தில் அர்த்தம் சொல்லவும் ஆட்கள் இருக்கிறார்கள்.

"ஜெரி சில்வா முன்னர் வடமராட்சி தாக்குதலில் முக்கிய பங்கு எடுத்தவர். கடும் போக்காளர். கிழக்கில் அவர் பொறுப்பில் இருந்த போது கடுமையாகவே நடந்து கொண்டார்" என்று யாழ்ப்பாணத்தில் புலிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடுமையான ஒரு சூழலில் ஜெரி சில்வா பொறுப்பேற்கப் போகிறார்.

பேச்சுக்கள் பற்றிய செய்திகள் மறைந்து அரசும்-புலிகளும் போரில் தமது நம்பிக்கையை பகிரங்கமாகவே வெளிப்படுத்தியுள்ள வேளையில் புதிய தளபதி மீது சுமைகள் அதிகமாகும்.

பூநகரியில் கைப்பற்றிய ஆயுதங்களோடு புலிகளும் போர் வியூகங்களை வகுத்து வருகிறார்கள்.

"ஆயுதங்கள் போதியளவு இருக்கிறது. அதை ஏந்த ஆட்கள் வேண்டும்" என்று புலிகள் அறைகூவல் விடுத்திருக்கிறார்கள்.

புலிகளிடம் சென்றுள்ள டாங்கி, மற்றும் நீண்டதூரம் செல்லக்கூடிய மோட்டார்கள் பற்றி படையினரும் யோசிக்கவே செய்கின்றனர்.

பூநகரியில் கைப்பற்றிய ஆயுதங்கள் புலிகளுக்கு புதிய நம்பிக்கையைக் கொடுத்திருக்கின்றன.

எனவே- பேச்சுக்களில் மனப்பூர்வமாக நாட்டம் கொள்ளக்கூடிய நிலமை தற்போதைக்கு எழாது. அது தற்போது ஏற்பட்டுள்ள புதிய நம்பிக்கையையும், போருக்கான மனப் பாங்கையும் குறைத்துவிடும் என்றே புலிகள் நினைப்பார்கள்.

அதே சமயம், பூநகரிக்கு பின்னர் தமது பலத்தை நிரூபிக்க பாரிய தாக்குதல் ஒன்று அவசியம் என்றே படையினரும் கருதுவர்.

புதிய இராணுவத் தளபதியும் தனது தலைமைத்துவத்தில் நம்பிக்கையை ஏற்படுத்த தீவிரமான போர் உத்தியை வகுக்கக்கூடும் என்றே நம்பப்படுகிறது.

தற்போதைய நிலையில் வடக்கே படையினர் தரைவழியாக நுழைய முயன்றால் பாரிய மோதல் நிகழும்.

இரு தரப்புக்களின் இழப்புக்களும் ஒரு புறம் இருக்க, சாதாரண மக்களது நிலமைதான் மிக மோசமாகும்.

ஆக, புத்தாண்டு சமாதானச் சூனிய நிலையில் பிறக்கிறது. போர் முரசம் எப்போது ஒலிக்கும்? போரின் இடையில் சிக்கிக்கொள்ள விரும்பாத மக்கள் காதுகளைத் தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். தப்பிக் கொள்ள வழி தேடுகிறார்கள். ஆனால் தப்பிக்கொள்வது அத்தனை சுலபமல்ல.

■

## அதிரடி அய்யாத்துரை



கிளிநொச்சியிலை இரெண்டு எழுத்துக்காரர் டாங்கி ஒடித்திரிஞ்சவையாம். பழகியிருக்கினம். விசயம் எப்படியோ கிளாலி வழியா வந்து கசிந்து போச்சுது. உடனை மேலாலை போய் அடி நடந்திருக்குது. டாங்கியைத்தான் அடிச்சது எண்டு சொல்லுகினம். எதிலை அடி விழுந்தது எண்டு இரெண்டு எழுத்தாருக்கு தானே தெரியும்.

முன்பு பரபரப்பாய் பேசப்பட்ட ஓய்வு பெற்ற பொலிஸ் அதிபர் திருப்பதி வெங்கடேஸ்வரர் மேலே உடும்புப்பிடியாய் ஒரு பற்றுதல் வைச்சிருக்கிறாராம். அவற்றை மணி பேர்சுக்குள்ளை திருப்பதியான் படம் இருக்குதாம். இந்தியாவுக்கு போன இடத்திலை திருப்பதியானை வேண்டிக்கொண்டதாலை தான் இப்ப இஞ்சை திரும்பிவர முடிஞ்சுதாக்கும்.

யாழ்ப்பாணத்திலை இப்பவெல்லாம் வாய்த்தர்க்கம் கைகலப்பா மாறும் போக்கு குறைஞ்சு போச்சுதாம். சமீபத்திலை இரண்டு பேர் முசுப்பாத்தியிலை கதைக்கத் தொடங்கி பிறகு அது வழக்கம் மாதிரி தர்க்கம் ஆகி, கைகலப்பு வாற கட்டத்திலை மற்றவர் சொன்னாராம். "டேய் உன்னோட 500 ரூபாய் வைச்சுக்கொண்டுதான் கதைக்க வேணும்." காரணம் தெரியுமோ? அடிபட்டு மாட்டுப்பட்டால் ரெண்டு எழுத்துக்காரரின் காவல்துறைக்கு 500 ரூபா தண்டம் கட்ட வேணும். அடிபட்டு - அடி பலமாய் பட்டு இரத்தக் காயம் எண்டு வையுங்கோ. தண்டம் ஆயிரம் ரூபாய். அதுதான் இப்ப அடிபட முதல் பொக்கற்றைத் தொட்டுப் பாக்குற வேலை.


"ஆக்கிவாயு பிறப்பாக்கி" பெயரைப் பார்க்கேக்கை குழப்பமாய் இருக்குதோ? இது யாழ்ப்பாணத்திலை இரெண்டு எழுத்துக்காரர் கண்டுபிடிச்சிருக்கிற புது இயந்திரம். வாயுவை மின்சாரமாக்கும் கருவி. காஸ் சிலிண்டரை வெட்டி, உள்ளே நிலக்கரி போட்டு ஏதோ செய்யினமாம். ஜெனரேட்டர் இயங்குதாம். நல்லைக் கந்தன் திருவிழாவுக்கும் அதிலை இருந்துதான் ஜெனரேட்டருக்கு மின்சாரம் எடுத்தவையாம். விரைவில் "ஆக்கிவாயு பிறப்பாக்கி" விற்பனைக்கு வரும் எண்டும் கேள்வி. பெயர் ஒரு மாதிரி எண்டாலும் பிரயோசனம் இருக்குது.

மலைப்பகுதி ஒண்டிலை தமிழ் பேசுற ஒருவர் நகர முதல்வராகியிருக்கிறார். தற்காலிக நியமனம்தான். உடனை ஒரு பேப்பர் இனவாதம் கக்கியிருக்குதாம். அது ஒரு பக்கம் கிடக்க, அங்கையுள்ள இந்து நிறுவனம் ஒண்டைச் சேர்ந்தவரும் முதல்வருக்கு எதிராக மேலிடத்துக்கு கடிதம் போட்டாராம். கோபப்பட்ட ஒருதர் சொன்னது என்ன தெரியுமோ? "தமிழன் தான் தமிழனுக்கு எதிரி" அவர் சொல்லுறதிலும் ஓரளவு நியாயம் இருக்குதோ? யோசித்துப் பாருங்கோ.

வாழ்க்கையும் சில சமயங்களிலை ரயில் பயணம் மாதிரித்தான். இறங்கும் ஸ்ரேசன் வரும் வரையும் ஒருத்தரோடை பேசிக் கொண்டிருப்பம். அவரைப் பிடிச்சுப் போகும். ஆனால் ஸ்ரேசன் வந்தவுடனை அவரவர் இறங்கிப் போயிடுவம். பிறகு வாழ்க்கையிலை எந்த முனையிலையும் சந்திக்காமல், கால ஓட்டத்திலை எல்லாம் மறந்து...இதுகளை நினைச்சா வெறுப்பும் வரும். என்ன வாழ்க்கை இது? என்று மனம் சூனியமாகும். இதைத்தான் சிவாக்கியர் பாடினவர்.

"கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்து போன சங்கின் ஓசை உயிர்களும் உடற்புகா.
விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை இல்லை. இல்லை. இல்லையே."

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



இஸ்ரேல்-பலஸ்தீன சமாதான ஒப்பந்தம்


உலக ரவுண்ட் அப்



# கடந்துபோன ஆண்டில் நடந்துமுடிந்த முக்கிய நிகழ்வுகள்



# விடைபெற்று விலகும் 1993



பில் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதிப் பிரமாணம்

உலக அரங்கிலிருந்து பிரியாவிடை பெற்றுள்ள 1993ம் ஆண்டு பல முக்கிய அரசியல் நிகழ்வுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி திரு. பில் கிளின்டன் 1993ம் ஆண்டு ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து மேற்கத்தேய அரசியலில் புதிய உத்வேகம் இழையோட ஆரம்பித்தது.

அமெரிக்காவில் நீண்டகாலம் ஜனாதிபதிப்பதவி குடியரசுக் கட்சிக்காரர்கள் வசம் இருந்தது. திரு. றொனால்ட் றீகன், அவரையடுத்து பவிக்கு வந்த திரு. ஜோர்ஜ் புஷ் ஆகியோர் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையிலேயே அதிக அக்கறை காட்டியிருந்தனர்.

திரு.றீகனின் ஆட்சிக்காலத்தில் சோவியத்யூனியன் மீது கம்யூனிஸத்தைக் குலைக்கும் வகையில் அமெரிக்கா வேட்டுவைக்க ஆரம்பித்தது.

அமெரிக்கா, சோவியத் யூனியன் எவ்வாறெல்லாம் வளைந்து கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்த்ததோ, அந்த எதிர்பார்ப்புக்கு ஏற்ற வகையில் திரு. மிக்கேல் கோபச்சேவ் அமெரிக்கர்களின் கைப்பாவையாக மாறியிருந்தார்.

திரு.றீகன் சோவியத் யூனியனில் கம்யூனிஸத்தின் வீழ்ச்சிக்கு அடித்தள மிட்டிருந்தார். பின்னர் திரு. ஜோர்ஜ் புஷ்ஷின் ஆட்சியில் சோவியத் யூனியனில் கம்யூனிஸம் பரிபூரணமாக நிலைகுலைந்தது.

சோவியத்தில் கம்யூனிஸ தத்துவத்தின் பிதாமகராக இருந்த திரு. லெனினின் அடிச்சுவடே இல்லாத நிலை தோன்றும் சூழ்நிலை ரஷ்யாவில் உருவாகியிருந்தது.

இத்தகைய நிலைமை, 1993ம் ஆண்டில் கிரெம்ளினில் இன்றுவரை இறந்தும் இறவாத நிலையில் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டுவந்த லெனினின் பதப்படுத்தப்பட்ட பூதவுடலையும் புதைத்து விடுமளவுக்கு வழியமைத்துள்ளது.

இது தவிர அமெரிக்காவில் குடியரசுக்கட்சியினரின் ஆட்சியிலேயே வளைகுடாவில் யுத்தமும் ஏற்பட்டதுடன், மேற்கத்தேய நாடுகள் பலவும் தமது அதி நவீன போர்த்தளபாடங்களுடன் ஈராக்கை அதன் குவைத் ஆக்கிரமிப்புக்கெதிராக எதிர்கொண்டிருந்தன.

ஆனால் 1993ம் ஆண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி திரு.பில் கிளின்டன் அமெரிக்காவின் உள்நாட்டு விவகாரங்களிலேயே தமது அரசு கூடுதல் கவனத்தைச் செலுத்தும் என அறிவித்திருந்தார்.

இதனையடுத்து அமெரிக்கா ஒரு உலகளாவிய பொலிஸ்காரனாக மாறி விடுமோ என்று தோன்றிய எதிர்பார்ப்புகளுக்கு, கிளின்டனின் ஜனநாயகக் கட்சி அரசு ஆப்பு வைத்திருந்தது.

இருந்த போதிலும் 1993ம் ஆண்டின் நடுப்பகுதியில் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் ஸ்தாபன அமைதிப்படைகளுடன் இணைந்து ஆபிரிக்க நாடான சோமாலியாவினுள் பிரவேசித்திருந்தது.

சோமாலியாவில் கிளர்ச்சிக்குழுக்களை ஜனநாயக வழிக்குக் கொண்டு வருவதும், அங்கு பசி பட்டினியால் வாடும் மக்களைக் காப்பாற்றுவதுமே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இருந்த போதிலும், சோமாலியாவின் பிரதான கிளர்ச்சியாளரான ஜெனரல் மொகமட் ஐடீட், ஐ.நா. படைகளிடம் சரணடையமறுத்திருந்தார்.

இதனையடுத்து ஐடீட் தலைமையிலான கிளர்ச்சியாளர்கள் ஐ.நா அமைதிப்படையில் அங்கம் வகித்த அமெரிக்க துருப்பினர்களுக்கு வேட்டுவைக்கலானார்கள். இதனால் அமெரிக்காவும் ஐடீட்டுக்கு எதிராக தனது கடும் போக்கை முடுக்கி விட ஆரம்பித்தது. ஆனால் பின்னர் தனது நிலையை மாற்றி சோமாலிய கிளர்ச்சித்தலைவர் ஐடீட்டுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கியிருந்தது.

இதே வேளை தென்னாபிரிக்க ஜனாதிபதி டி.கிளார்க் மற்றும் கறுப்பினத்தவர்களின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டெலாவுக்கும் 1993ம் ஆண்டுக்கான நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டமை தென்னாபிரிக்காவில் பல தசாப்தங்களாக புரையோடியிருந்த நிறவாதம், இனவாதம் என்பன படிப் படியாக ஒடுங்க ஆரம்பித்துள்ளதை வெளிப்படுத்துவதாக இருந்தது.

இதே வேளை புதிய ஆண்டான 1994ம் ஆண்டில். தென்னாபிரிக்காவில் முதல் தடவையாக கறுப்பர்களும், வெள்ளையர்களோடிணைந்து தேர்தல்களில் வாக்களிக்கவுள்ளனர்.

எனவே தென்னாபிரிக்காவில் இப்புதிய தேர்தலானது, தென்னாபிரிக்காவின் வெள்ளையர் ஆட்சியை கறுப்பினத்தவர்களின் கைகளில் இந்த ஆண்டில் ஒப்படைப்பதாகவே அமையவிருக்கின்றது.

ரஷ்யாவில் அரசியல் ஒரு பெரும் குளறுபடியான கட்டத்தையே 1993ம் ஆண்டில் எட்டியிருந்தது.

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ஸ்டினுக்கு எதிரான அரசியல் கிளர்ச்சியாளர்கள் ரஷ்ய பாராளுமன்றத்தை முற்றுகையிட்டிருந்தனர்.

இதனையடுத்து பொரிஸ் யெல்ஸ்டினுக்கு விசுவாசமான ரஷ்யப்படைகள் பாராளுமன்றத்துக்குள்ளிருந்த கிளர்ச்சியாளர்களைத் துரத்தியடிக்கும் வகையில் பாராளுமன்றத்தை நோக்கியே வேட்டுக்களைத் தீர்த்து, அதனை தீக்கிரையாக்கி விட்டிருந்தனர்.

ஆசியாக் கண்டத்தில் பாகிஸ்தானில் இடம் பெற்ற ஆட்சி மாற்றமும், இலங்கையில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா கொல்லப்பட்டமையும் முக்கிய நிகழ்வுகளாக விளங்கியிருந்தன.

பாகிஸ்தானில் திருமதி. பெனாஸிர் பூட்டோ இருவருடங்களுக்குப் பின்னர் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார். இதனையடுத்து அவரது அரசியல் வைரியான திரு. நவாஸ் ஷெரிப் பிரதமர் பதவியை இழந்து எதிர்க்கட்சித் தலைவராகியுள்ளார்.

இலங்கையில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா 1993ம் ஆண்டு மே மாதம்- உலக பாட்டாளிகளின் தினமான மே தினத்திலன்று படு மோசமான முறையில் குண்டு வெடிப்பொன்றில் கொல்லப் பட்டிருந்தார். இதனையடுத்து இலங்கையில் ஆட்சிமாற்றம் சுமுகமாக இடம் பெற்று புதிய ஜனாதிபதியாக திரு. டி.பி. விஜேதுங்க தெரிவாகியிருந்தார்.



அவுஸ்திரேலியாவில் ஒலிம்பிக்



சோமாலியாவுக்குள் அமெரிக்கப் படை



இந்தியாவில் கொடிய பூகம்பம்

இதே வேளை இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் கிலாரி என்ற இடத்தில் இடம் பெற்ற மாபெரும் பூகம்பம் இந்த ஆண்டில் பெரியளவிலான மனித அழிவை ஏற்படுத்தியிருந்தது.

சுமார் 30 ஆயிரம் மக்கள் இப்பாரிய பூகம்பத்தினால் இந்தியாவில் கொல்லப் பட்டிருந்தனர்.

விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரை 2000ம் ஆண்டில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவது தொடர்பாக அவுஸ்திரேலியாவுக்கும், சீனாவுக்குமிடையே பலத்த போட்டி நிலவியிருந்தது.

ஆனால், இப்போட்டியில் கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் சீனா தோல்வி கண்டது. அவுஸ்திரேலியா சிட்னிநகர் 2000ம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்களை நடத்தும் தகுதியைப் பெற்றது.


இதே வேளை சிறியஉலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை யொத்த மாபெரும் கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் இடம் பெற்றிருந்தன.

மேற்கு வங்காளத்தின் கல்கத்தா கிரிக்கெட் சபையின் வைரவிழாவையொட்டி இப்போட்டிகள் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தன.

இறுதிப் போட்டியில் இந்தியா, மேற்கிந்திய அணியை வெற்றி கண்டு ஒரு குட்டி உலகச் சாம்பியனாக மாறியிருந்தது.

இவ்வாறு பல்வேறு நிகழ்வுகளையும் கொண்டதாக விளங்கிய 1993ம் ஆண்டு இன்று உலக அரங்கிலிருந்தும் அகன்றுள்ளது.

அடுத்து 2000ம் ஆண்டை நோக்கி உலக அரங்கு தற்போது 1994ம் ஆண்டினுள் காலடி எடுத்து வைத்துள்ளது.



ரஷ்யப் பாராளுமன்றத்தின் மீது வேட்டுக்கள்



இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்



பாகிஸ்தானில் மீண்டும் பெனாஸிர்



இந்தியா ஒரு குட்டி உலக சாம்பியன்

# இலங்கை - இந்திய உளவுப் பிரிவுகளோடு தொடர்பு! பிரபா உட்பட 11 முக்கியஸ்தர்களைக் கொல்லச் சதி

## மாத்தையா மீதான குற்றச்சாட்டுக்கள்

புலிகள் அமைப்புக்குள் ஏற்பட்டுள்ள உள்பிரச்சனைகளின் விபரங்களைப் பொதுமக்கள் அறிவது முக்கியமானதாகும். இன்று இலங்கையில் ஒரு தீர்க்கமான சக்திவாய்ந்த அமைப்பாக இருக்கும் புலிகள் அமைப்பின் உள் விவகாரங்கள் பொதுமக்களாலும் அறியப்படுதலே ஜனநாயகமாகும். அந்த வகையில் கனடா 'செந்தாமரை'யில் வெளியான தகவல்கள் முரசில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. இதில் முரசின் கருத்து எதுவுமில்லை.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு.பிரபாகரன் மற்றும் 11 விடுதலைப் புலி முன்னணிப் பிரமுகர்களைக் கொலை செய்வதென்று இந்திய உளவுப்படை பிரிவு 'றோ' தீட்டிய சதிக்கு உடந்தையாக விளங்கினார் என்பதுவே திரு.மாத்தையாவுக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டு என்று அறியப் படுகிறது. இப்பிரதான குற்றச் சாட்டுடன் வேறு சில குற்றச்சாட்டுகளும் திரு.மாத்தையா மீது சுமத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பான விசாரணைகளை உளவுப் படைப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பொட்டு நேரடியாக மேற்பார்வை செய்து வருகிறார். இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் 2ம் திகதியன்று கைது செய்யப்பட்ட திரு.மாத்தையா மீதான விசாரணைகள் பெருமளவில் பூர்த்தி அடைந்துள்ளதாக அறியப்படுகிறது. மிக விரைவில் விசாரணை முடிவுகள் வெளியிடப்படவுள்ளன.



பிரபாகரன்

விடுதலைப்புலிகள் தலைவர் திரு.பிரபாகரனையும் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த 11 பேரையும் கொல்வதற்கு இலங்கையின் அனுசரணையுடன் இந்திய உளவுப்பிரிவு தீட்டிய சதி முயற்சிக்குத் திரு. மாத்தையா துணை போனார் அல்லது உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகம் தொடர்பானது.

இரண்டாவது விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் பிரதி தலைவர் மாத்தையாவுக்கும் இடையில் முன்னரே தோன்றிய கசப்புணர்வு. எந்தவொரு இயக்கத்திலும் உள்ளது போல் கருத்து வேறுபாடுகள் பிரிவுகள் விடுதலைப்புலி மேல் மட்டத்திலும் இருந்தது. ஆனால் அவை விரோதங்களாக, பிளவுகளாக விஸ்வரூபமெடுத்தது வருத்தத்துக்குரிய விடயமே.

புலிகள் மக்கள் முன்னணி என்ற கட்சியைப் பதிவு செய்தனர். இதன் தலைவராக மாத்தையா நியமிக்கப்பட்டார். செயலாளராக யோகி நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு வடக்கில் வாகரையில் முதல் மாநில மாநாடும் மாத்தையா தலைமையில் நடைபெற்றது. இதற்கு முன்னரே இயக்கத்தின் பிரதி- தலைவராக மாத்தையா பொறுப்பு வகித்தார்.

இந்தியாவுக்குப் பிரபாகரன் செல்கையில் தான் வரும்வரை மாத்தையாவையே இயக்கத்துக்குப் பொறுப்பாகத் தமது வாரிசாக வரித்துச் சென்றார்.

தான் இந்தியாவில் இருந்து விடுக்கும் உத்தரவைக் கூட மாத்தையாவுக்குத் தேவை ஏற்படின் நிராகரிக்கும் அதிகாரத்தைக் கூட வழங்கினார்.

(மிகுதி அடுத்த முரசில்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது – இராஜதந்திரி

# அனைத்து ஜீவராசிகளுக்கும் கருணையை வழங்கும் இயேசு அவதாரம்!





# மாரி பொய்த்த போதிலும் சளைத்துவிடாத மக்கள்

# விமானக் குண்டு வீச்சினால் 'வானம் பார்த்து' நிற்கும் நிலை!

நத்தார் பண்டிகைக்கால குதூகலம் உலகம் முழுவதையும் ஆக்கிரமித்திருக்கும் தருணம் இது.

மாட்டுத் தொழுவத்தில் வைக்கோல் குவியல்களின் நடுவே, தனது தாயார் அன்னை மேரி, தந்தையார் ஜோசப் மட்டுமல்லாது, விலங்கினங்களும் சூழ்ந்து நிற்கவே இயேசு பாலன் இப்புவியில் அவதரித்திருந்தார்.

ஏழைப் பெற்றோருக்கு மகனாக, மாட்டுத் தொழுவத்தில் விலங்கினங்கள் நடுவே இடம் பெற்றிருந்த இயேசுபிரானின் அவதாரம், இறைவனின் கருணை உலகில் அனைத்து ஜீவராசிகளையும் தழுவியதாகவே இருக்கின்ற தென்ற உயர்ந்த கருத்தையே எடுத்தியம்புவதாக விளங்குகின்றது.

இயேசுபிரான் தமது வாழ்நாளில் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவங்களை ஒரு சாதாரண குடிமகனாகவே வாழ்ந்திருந்து போதித்தார். அத்துடன் ஏழை- எளிய மக்களின் சகவாசத்தையே நாடி நின்றதுடன் அம்மக்கள் மூலமாகவே அவர் தமது போதனைகளையும் உலகறியச் செய்யலானார்.

ஓர் ஏழை மகனாக அவதரித்து, எளிமை யாளனாக வாழ்ந்து உன்னதமான வாழ்க்கை நெறிகளை இயேசு பிரான் போதித்தார்.

ஆனால் கொடிய உலகத்தின் முன்பாக ஒரு குற்றவாளியாகவே அவர் உயிர் நீத்திருந்தார்.

ஆனால் இன்று அம் மகான் போதித்துச் சென்றவையே உலகில் கோடானு கோடி மக்களின், வாழ்க்கை நெறியாகவும் அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பியர்களின் வருகை இலங்கையர்களின் சுதந்திரத்துக்குக் கால் கட்டுப் போட்டிருந்தது.

ஆனால் சுதந்திரம், சுதேசியம், தன்னாதிக்கம், மதப்பாரம்பரியங்கள் என்றெல்லாம் மார் தட்டி நின்றவர்கள் சாதித்திருக்காதவற்றை ஐரோப்பியர்கள் இலங்கையில் சாதித்திருந்தனர்.

இலங்கையின் சிங்கள-பௌத்தர்களின் வழிவழி வந்த 'துட்டகைமுனு- எல்லாளன்' கதைக்கு ஐரோப்பியர்களின் வருகை ஆப்பு வைத்திருக்கலாம். ஆனால் இலங்கையர்களின் கல்வி, பொருளாதாரம், தொழில் நுட்பம், சுகாதாரம், போக்குவரத்து, சட்டம்-ஒழுங்கு போன்ற பல்வேறு துறைகளிலும், ஐரோப்பிய நிர்வாகிகளினதும், அவர்களோடு வந்திருந்த கிறிஸ்தவ மிஷனரிமார்களினதும் பங்களிப்பு மிக விசாலமானதாகவே விளங்கியிருந்தது.

இன்றுங்கூட ஐரோப்பாவின் பல்வேறு பாகங்களிலும் இலங்கையில் இருந்த ஐரோப்பிய சமூகத்தவர்களின் வாரிசுகள் வாழ்ந்து கொண்டேயிருக்கின்றார்கள்.

ஓரிரு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் ஒரு சர்வதேச மகாநாடு இடம் பெற்றிருந்தது.

அப்போது அம்மகாநாட்டில் பங்கு பற்றிய ஐரிஷ் நாட்டுக்காரரான திரு. மெக்விக் என்பவர், அதே மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்து கொண்டிருந்த யாழ்ப்பாணத்து நபர் ஒருவருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட போது, பெருமகிழ்ச்சியடைந்திருந்தார்.

ஐரிஷ் காரரான திரு. மெக்விக், அந்த யாழ்ப்பாணத்து நபரைக் கட்டித்தழுவி, தாமும் யாழ்ப்பாணத்திலேயே பிறந்து வளர்ந்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

தமது தந்தையார் வடபகுதியில் பருத்தித்துறை, கிழக்கே கல்முனை, மற்றும் நுவரெலியா போன்ற இடங்களில் ஒரு கிறிஸ்தவப் போதகராகப் பணிபுரிந்த கதையை திரு.மெக்விக் தெரிவித்திருந்தார்.

கூடவே தமது தந்தையார் இன்றுங்கூட அயர்லாந்தில் உயிர்வாழ்ந்து வருவதாகவும், யாழ்ப்பாணம் செல்வதற்கு வாய்ப்புக் கிடைத்தால் அங்குள்ள மாம்பழத்தையும் சுருட்டுக்கட்டொன்றையும் வாங்கி வரும்படி தம்மிடம் கூறியதாகவும் திரு. மெக்விக் கூறியிருந்தார்.

இலங்கையைப் பொறுத்தவரை, உயர்ந்த தரத்திலான பாடசாலைகள், வைத்திய சாலைகள் என்பன தோற்றம் பெறுவதற்கு ஐரோப்பியர்களே காரண கர்த்தாக்களாக இருந்தனர்.

மற்றும் தென்னிந்தியாவிலிருந்தும் கடும் உழைப்பாளிகளான மக்களைக் கொண்டு வந்து மலையகத்தின் இருண்ட காடுகளை பசுமையான தேயிலைத் தோட்டங்களாகவும், ஏனைய பெருந்தோட்டப் பயிரினங்களின் விளை நிலங்களாகவும் ஆங்கிலேயர்கள் மாற்றியிருந்தனர்.

மேலும் விஸ்தாரமான நெடுஞ்சாலைகள் முதற்கொண்டு, விமான ஓடு பாதைகள் வரை இலங்கையில் தோன்றுவதற்கு ஆங்கிலேயர்களே வழியமைத்திருந்தனர். நாட்டின் அனைத்துப் பகுதிக்கும் ரயில் வண்டிகளை ஓட விடுவதற்கும் அவர்களே தமது 'மூளைவள'த்தைப் பிரயோகித்திருந்தனர்.

இலங்கையர்களின் சுதந்திரத்துக்கு ஐரோப்பியர்கள் கால்கட்டுப்போட்டிருக்கலாம். ஆனால் இலங்கையர்களின் உலகோடிணைந்த விழிப்புணர்வுக்கு ஐரோப்பியர்களும் அவர்களோடு வந்திருந்த கிறிஸ்தவ மிஷனரிமாருமே பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் பிரமாண்டமான கல்விக் கூடங்களை ஆங்கிலேய மிஷனரிமார் ஸ்தாபித்திருந்தனர்.

வடபகுதியும் கிறிஸ்தவ மிஷனரிமாரின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருந்தது.

யாழ்குடாநாட்டில் கிறிஸ்தவ மிஷனரிமார் பாடசாலைகளை அமைத்திருந்த காலத்தில், யாழ் குடாநாட்டின் சைவத் தமிழ்ப் பெரியாரான ஆறுமுக நாவலர் கூட, ஆங்கிலேயரினால் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலேயே ஆசிரியராக் கடமையாற்றினார்.

அத்துடன் சைவ சமயப்பணி, தமிழ்ப்பணி என்பவற்றில் தீவிரமாக ஈடுபட்டிருந்த போதிலும், விவிலிய வேதத்தை (Bible) ஆறுமுக நாவலர் தமிழில் மொழி பெயர்த்திருந்தார்.

யாழ் மத்திய கல்லூரியில் பணிபுரிந்த வண. பேர்சிவலின் வேண்டுகோளின் பேரிலேயே ஆறுமுக நாவலர் இப்பணியைச் செய்திருந்தார்.

1948ம் ஆண்டு பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றிருந்தது. ஆனால் சுதந்திரம் கிடைத்த ஆண்டிலிருந்து ஒரு சில வருடங்கள் மட்டுமே இலங்கையில் இனரீதியிலான அந்நியோன்யங்கள் விளங்கியிருந்தன.

ஆனால் இன்று எங்கும் எதிலும் இன, மத, மற்றும் பிரதேச ரீதியிலான துவேசங்களே தலைவிரித்தாடுவதோடு வடக்கு-கிழக்கில் இரத்த வெறி பிடித்த கோரத்தாண்டவமாகவும் இன்றைய இலங்கையின் இனப்பிரச்னை விளங்கி நிற்கின்றது.

தகுந்த அரசியல் தீர்வின்றி இரத்தப் பிரவாகமாக வடக்கு-கிழக்குப் பிரச்னை விரைந்து கொண்டிருக்கும் இத்தருணத்தி லேயே, மலையகத்தில் உள்ள தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

எனவே வடக்கு-கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்குத்தகுந்த தீர்வினையும் முன்வைக்காது, மலையகத்தில் நாட்டின் வருவாய்க்கு வழியமைத்த பாட்டாளி மக்களின் கோரிக்கைகளையும் ஆட்சியாளர்கள் புறக்கணித்து வருவதை நோக்கும்போது, இலங்கையில் நிலவுவதாகக் கூறப்படும் ஜனநாயக ஆட்சியானது உண்மையிலேயே நாடு தழுவியதாகவும் அனைத்து மக்களாலும் எற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றதோ? என எண்ணத் தோன்றுகின்றது.

இன்றைய வடக்கு-கிழக்கு நிலவரம் ஓர் அரசியல் தீர்வை மட்டும் நாடி நிற்கவில்லை. மனிதாபிமான ரீதியிலான அணுகுமுறைகளையும் எதிர்பார்த்ததாகவே காணப்படுகின்றது.

அரசியல் தீர்வை முன்வைப்பதில் ஆர்வமற்றிருக்கும் ஆட்சியாளர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கெதிரான யுத்தம் என்று கூறிக்கொண்டு கோயில்கள், தேவாலயங்களை மட்டு மல்லாது, குடிமனைகள், வைத்தியசாலைகளையும் குண்டுவீசித் தகர்த்து வருகின்றனர்.

வடக்கில் புலிகளுக்கெதிரான குண்டு வீச்சு இன்று, நேற்று ஆரம்பமானதல்ல. கடந்த ஒரு தசாப்தகாலமாகவே இக்குண்டு வீச்சுக்கள் இடம் பெற்று வருகின்றன. அத்துடன் இக்குண்டு வீச்சுக்கள் தற்போது மிக மூர்க்கத்தனமான கட்டத்தை எட்டியவையாகவும் காணப்படுகின்றன.

நத்தார் நாட்களில் அமைதியான ஆராதனைகள் இடம் பெற்றுவந்த கிறிஸ்தவ தேவாலயங்கள் குடா நாட்டில் விமானக் குண்டு வீச்சுக்களால் உருக்குலைந்து போயுள்ளன.

வடக்கே கிறிஸ்தவ, கத்தோலிக்க பேராயர்களும், இந்து சமயத்தலைவர்களும் பலத்த கண்டனங்களை வெளியிடுமளவுக்கு விமானக் குண்டுவீச்சுக்களும், ஷெல் தாக்குதல்களும் கண்மூடித்தனமானவையாகக் காணப்படுகின்றன.

தென்னிலங்கையில் நத்தார் பண்டிகைக் காலம் களை காட்டியிருக்கக் காணப்படுகின்றது. ஜவுளிக் கடைகளும், மளிகைக் கடைகளும் மக்களால் நிரம்பி வழிந்த வண்ணமிருக்கின்றன.

இது தவிர நத்தார் பண்டிகைக்கால அலங்காரங்களாகவும் மின்விளக்குகள் விதவிதமான முறையில் போடப்பட்டிருக்கக் காணப்படுகின்றன.

ஆனால் வடக்கே அனைத்துமே வெறிச்சோடியவையாகவும், அடிப்படை உணவு மற்றும் மருத்துவ மின்சார வசதிகளற்ற சூழ்நிலையைக் கொண்டவையாகவும் விளங்குகின்றன.

வடக்கே கொடிய இருள் சூழ்ந்திருக்கும் இத்தருணத்தில் தெற்கே மின் அலங்காரங்கள் கண்ணைப் பறிப்பனவாக இருக்கின்றன.

இத்தகைய மாறுபாடான சூழ்நிலையிலேயே கடந்தவாரம் புனர்நிர்மாண சமூக நல அமைச்சர் பி.தயாரத்ன பாராளுமன்றத்தில் கூறியவை கருத்தில் எடுக்கப்பட வேண்டியவையாக இருக்கின்றன.

அமைச்சர் பி.தயாரத்ன தமது பாராளுமன்ற உரையில் கூறியதாவது: "நாம் வடக்குக்கு உணவு மற்றும் பொருள்களை அனுப்புவதை சிலர் குறை கூறுகின்றனர். வடக்கில் இருப்பவர்களும் எமது நாட்டு மக்கள். அவர்களை நாம் பட்டினிபோட முடியாது. வடக்கிலுள்ள மக்களை நாம் வென்றெடுக்க வேண்டும்." என்று கூறியிருந்தார்.

இன்றைய யுத்த நிலைமைகளை அவதானிக்கும் போது யாழ்குடா நாடு அனைத்து விதமான நெருக்கடிகளாலும் சூழப்பட்டதாகவே காணப்படுகின்றது.

புவியியல்ரீதியாக நோக்கும் போது, யாழ்குடா நாடு ஒரு வரண்ட பிரதேசமாகவே விளங்குகின்றது. அங்கு தெற்கில் இருப்பதைப் போல வளமான நதிகளோ அல்லது பிரமாண்டமான குளங்கோ, அணைக்கட்டுகளோ காணப்படவில்லை.

இருந்த போதிலும் வடபகுதி மக்கள் வானம்பார்த்தவர்களாக வரண்டு போயிருக்கவில்லை.

நிலத்தைக்குடைந்து கிணறுகளைக்கட்டி தமது நீர்வளத்தைப் பெருக்கியதுடன், அனைத்துவிதமான பயிர் வகைகளையும் குடாநாட்டில் செழித்து வளரச் செய்திருந்தனர்.

உணவுப் பயிர்வகைகள் மட்டுமல்லாது, விதவிதமான பூங்கனிச் செய்கைகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வெற்றி கண்டிருந்தனர்.

வடக்கே இன்று பலாலி இராணுவத் தளத்தை அண்டிய தோலகட்டிப் பிரதேசம் சுவை மிக்க முந்திரிகைப் பழச்செய்கைக்குப் பிரசித்தி பெற்ற பிரதேசமாக விளங்கியிருந்தது.

தோலகட்டியில் கத்தோலிக்க குருமார்களினால் முந்திரிகைச் செய்கையுடன், நெல்லிரசம் போன்ற ஆரோக்கியமான ஔடத பானங்களும் தயாராகியிருந்தன.

சர்வதேச ரீதியாக பிரபல்யமடைந்ததாகவே தோலகட்டிப் பாதிரிமாரின் நெல்லிரசம், முந்திரிகைப்பழச் செய்கை, என்பன விளங்கியிருந்தன.

ஆனால் வடக்கே இராணுவ விஸ்தரிப்புகள் ஆரம்பமான போது தோலகட்டிப் பிரதேசமும் பாதிப்படைய ஆரம்பித்தது.

அமைதியான தேவாலயத்துடன் பூங்கனிச் சோலைகளால் சூழப்பட்டிருந்த தோலகட்டி இன்று 'சாத்தானின்' உறைவிடமாக இருக்கின்றது.

இலங்கையின் மலைநாட்டுப் பகுதியில் உற்பத்தியாகும் மரக்கறி வகைகளைக் கூட தமது கடின உழைப்பினாலும், விடா முயற்சியினாலும் யாழ்குடாநாட்டினர் வடக்கே உற்பத்தி செய்திருந்தனர்.

எனவே வரண்ட பிரதேசமாக இருந்த போதிலும் 'வானம் பார்த்த பூமி'யாக இருந்திராத யாழ்குடாநாடு, இன்று மூர்க்கத்தனமான விமானக் குண்டு வீச்சிலிருந்தும் தப்பும் வகையில் 'வானம் பார்த்த பூமி'யாகக் காணப்படுகின்றது.

அமைச்சர் பி.தயாரத்ன தமது பாராளுமன்ற உரையில் மேலும், "வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு அரசியல் தீர்வுதான் ஒரே வழி என்று கூறுவோர், வெறுமனே வாய்ப்பேச்சுடன் மட்டும் நின்று விடுகின்றனர். மனதார எதனையும் செய்வதில்லை" என்று தெரிவித்துள்ளார்.

ஆளுங்கட்சியின் ஒரு பிரதான உறுப்பினராகவும், அரசாங்கத்தில் ஒரு சிரேஷ்ட அமைச்சராகவும் இருக்கும் திரு.பி. தயாரத்னவின் மேற்குறிப்பிட்ட பாராளுமன்ற உரை, வடக்கு-கிழக்குப் பிரதேசத்துக்கான அரசியல் தீர்வு ஒன்றில் தென்னிலங்கை அரசியல் வாதிகள் அக்கறையற்றிருப்பதையே புலப்படுத்துவதாக இருக்கின்றது.

வடக்கே பொருளாதாரத் தடைககளை விதிப்பதன் மூலம் அங்குள்ளவர்களின் எதிர்பார்ப்புக்களைத் திசைதிருப்பலாம். அத்துடன் உணவுப் பசியை ஏற்படுத்துவதன் மூலம், அரசியல் தீர்வுக்கான பசியை முடக்கிவிடலாம் என்று ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கலாம்.

ஆனால் வடக்கே பொருளாதாரத் தடைகள் நிலவுகின்ற போதிலும், அங்கு எதுவுமறியாத அப்பாவிப் பொதுமக்களே இழப்புக்களை எதிர்நோக்குகின்றனரே தவிர, ஆயுதப் போராட்டத்தை நடத்துவோர் தொடர்ந்து தீவிரமாகவே இயங்கி வருகின்றனர்.

வடக்கில் மட்டுமே யுத்தம் நீடிக்கின்றது. கிழக்கே நிலைமை சுமுகமாக இருக்கின்றது என ஆட்சியாளர்கள் கூறிவருக்கின்றனர்.

ஆனால் கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு.சி. மௌன குருசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பொன்றில் கிழக்கே தேர்தல்களை நடத்தக்கூடிய சூழ்நிலைகள் எதுவும் தற்போது காணப்படவில்லை என்று கூறியுள்ளார்.

இது தவிர இராணுவ வட்டாரங்களை ஆதாரங்காட்டி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் படையினரிடம் ஆங்காங்கே சரணடைந்து வருவதாக ஆட்சியாளர்கள் கூறி வருகின்றனர்.

ஆனால் திருமலை மாவட்டத்தில் உள்ள வெருகல் இராணுவ முகாமில் கடந்த வாரம் இடம் பெற்ற சம்பவம் பாதுகாப்புப் படை வட்டாரங்களை திகைப்புக்குள்ளாக்கி விட்டுள்ளது.

வெருகல் இராணுவ முகாமில் சரணடைந்திருந்த இரு விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள், அம்முகாமில் இருந்த படைவீரர் ஒருவரை நையப்புடைத்து அவரிடமிருந்த துப்பாக்கியைப் பறித்து மற்றொரு படைவீரரைச் சுட்டுக் கொன்ற பின்னர் தலை மறைவாகியுள்ளனர்.

இச் சம்பவம் புலிகளின் புதிய கெரில்லாத்தாக்குதல் தந்திரத்தையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

இன்று தென்னிலங்கையில் அனைத்து அரசியல் கட்சிகளும் வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொண்டுள்ள தன்மை காணப்படுகின்றது.

அமைச்சர் பி.தயாரத்ன வடக்கில் உள்ளவர்களும் இந்த நாட்டின் மக்களே. அவர்களை பட்டினிபோட்டு எதுவித தீர்வையும் காணமுடியாது. அரசியல் தீர்வே இன்றைய பிரச்னைக்கு சிறந்த பரிகாரம் என்றெல்லாம் கூறியுள்ளார்.

வடக்கே, பொருளாதாரத் தடையினாலும், யுத்தக் கெடுபிடியினாலும் அல்லற் படும் மக்கள் மட்டுமல்ல. ஆயுதப் படைகளில் சேர்ந்து நாளாந்தம் உயிர்களையும் இழந்து, ஊனமுற்றவர்களாகவும் மாறிக்கொண்டிருக்கும் இளைஞர்களும் இந்நாட்டு மக்களே.

எனவே நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாத்து, ஒரு கௌரவமான- மனிதாபிமான ரீதியிலான தீர்வு ஏற்படுவது அவசியமாகின்றது. அத்தகைய தீர்வுக்கு அரசியல் ரீதியிலான அணுகுமுறைகளே இன்று இன்றியமையாததாகின்றது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

கதையாக ஒரு அட்வைஸ்

-புஷ்பா அக்கா-

# பிரேமா ஏன் மெலிந்தாள்?

பல வருடங்களின் பின்னர் எனது பால்ய சினேகிதி விமலாவைச் சந்திக்க நேர்ந்தது. இருவரும் ஒரே வயதினர். ஒரே தெருவில் வசித்தோம். ஒரே பள்ளியில் படித்தோம். எங்கள் இரு வீட்டாரது சுக துக்கங்களில் பங்குபற்றும் அளவு குடும்ப உறவு இருந்ததே தவிர எங்களுக்குள் இரத்த உறவு கிடையாது.

விமலாவுக்குத் திருமணமானதும் அவள் கணவனுடன் வேற்றூர் சென்றுவிட்டாள். ஒருவருடத்தின் பின்னர் நானும் மணம் முடித்தேன். 20 வருட இடைவெளியின் பின் அவளைக் கண்டேன். கண்டதும் இருவரும் அடையாளம் கண்டு கொண்டோம். அளவிலா ஆனந்தம் கொண்டோம்.

அடுத்த நாள் தன் மகள் பிரேமாவுடன் வீடு வந்தாள். பிரேமாவுக்கு வயது 18 எனக் கூறினாள். என்னால் நம்பவே முடியவில்லை. வயதுக்கேற்ற பொலிவை அவளிடம் காண முடியவில்லை. உடல் மெலிந்து கூனிக்குறுகி நின்றாள். எனக்கே கவலையாக இருந்தது.

எனது 16 வயதான மகள் பூர்ணிமாவை அழைத்து அறிமுகப்படுத்தி வைத்தேன். வயதுக்கு மீறிய பொலிவுடன் காணப்பட்ட எனது மகள் மீது என் சினேகிதியின் கண்பட்டுவிடுமோ என்று கூட எனக்குச் சற்றுக் கலக்கமாக இருந்தது. விமலாவுக்கு என் மீது பொறாமை ஏற்பட்டிருக்கக் கூடும். என் மகளைவிட இரு வயது அதிகமாக இருந்தும் கூட பெண்மைக்கு வேண்டிய பொலிவின்றி தன் மகள் இருக்கிறாளே என்ற ஏக்கம் விமலாவின் முகத்தில் பளிச்சிட்டது.

இத்தனைக்கும் எங்கள் குடும்பத்தை விட விமலாவின் குடும்பம் ஓரளவு செல்வச் சிறப்புள்ளது. வாழ்க்கை வசதிகளும் அதிகம். இல்லாமை என்ற சொல்லுக்கே அர்த்தம் தெரியாத இடத்தில் பிறந்து வளர்ந்த குழந்தை, செழிப்போடு வளராமல் ஒட்டி உலர்ந்த சருகு போலிருக்கக் காரணம் என்ன என்று அறிய முடியாத கவலை தன்னை வெகுவாக வாட்டுவதாக விமலா என்னிடம் வெளிப்படையாகக் கூறினாள்.

வளரும் குழந்தைகளுக்குக் காலத்துக்குக் காலம் தகுந்த சத்து உணவுகளை ஊட்டுவதன் மூலம் அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும். சற்று வசதியுள்ள குடும்பங்களில் அளவுக்கு மீறிய சத்துணவை பிள்ளைகளுக்கு ஊட்டு வார்கள். இதனால் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் எதிர்மாறான பலனே கிடைக்கும்.



குழந்தைகள் பொதுவாக உணவில் அதிக நாட்டம் செலுத்துவதில்லை. கீழைத்தேயங்களில் பிறந்த தாய்மார் சில சமயங்களில் மேலைத் தேய முறைகளை அனுசரிக்கத் தலைப்பட்டுவிடுவதுண்டு. இதில் அவ்வப்போது உட்கொள்ள வேண்டிய உணவினை உண்பதற்கு பிள்ளைகளுக்குச் சுதந்திரம் கொடுத்துவிடுவதுமுண்டு. பிரேமாவின் வளர்ச்சியையும் இந்த முறைதான் பாதித்துள்ளது என்பது புரிந்துவிட்டது. எட்டுவயதானதும் தனக்குரிய உணவினைத் தானே உண்பதற்கு பிரேமாவுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டுவிட்டது.

வேளைக்கு அவள் மகள் உணவு உட்கொண்டாளா என்பதனைக் கூட விமலா விசாரிப்பதற்கு வேளை கிடைப்பதில்லை.

## லேடீஸ் ஸ்பெசல்

'லேடீஸ் கிளப்' என்றும் 'சோஷல் சேர்வீஸ்' என்றும் வெளிக்கிளம்பி விடுவாள்.

எதிர்காலத்தில் தாய்மை எய்த வேண்டிய பெண் குழந்தைகளுக்கு ஏழெட்டு வயதாகும் போதே தக்க போஷாக்குணவு வகைகளை தாய் ஊட்ட வேண்டியது அவசியம். இந்தக் காலத்தில் அவர்கள் உணவைத் தேடி உண்ண விரும்ப மாட்டார்கள். இனிப்பு வகைகளையும் சில சிற்றுண்டிகளையுமே அவர்கள் நாடுவார்கள்.

பிரேமா சிறு வயதிலிருந்தே ஆங்கிலப் புத்தகங்களை விரும்பிப் படிப்பாள். படிக்கத் துவங்கினால் அவளுக்கு புலன் வேறெங்குமே செல்லாது. இதனால் அவள் உணவு உண்பதையே மறந்து விடுவாளாம். தாயார் வீட்டில் இருப்பதில்லை. வீட்டுப் பணியாட்களும், உணவு உண்ணும் படி இரண்டொரு தடவை மட்டும் கடமைக்காக வந்து கேட்பார்கள். அவ்வளவுதான். இதனால் இன்று 18 வயதாகியும் சோபை இழந்து காணப்படுகிறாள் பிரேமா.

பெண் குழந்தைகள் ஏழு வயதை அடைந்ததுமே அவர்களுக்கு சத்து அதிகமான உணவுகளைத் தேடி ஊட்டுவது தாய்மாரின் பிரதான கடமையாகும். இரும்புச்சத்து, சுண்ணம் போன்ற சத்துக்கள் தரும் காய்கறிகளும் ஏனைய மாமிச மற்றும் மீன் வகைகளும் ஊட்டப்பட வேண்டும்.

பூப்பெய்தும் பருவத்துக்கு முதலே உளுந்து கலந்த உணவுகளும் நல்லெண்ணெய்யும் அவளுடைய அன்றாட உணவில் சேர்க்கப்பட வேண்டும். பூப்பெய்தி இரண்டு வருடங்களுக்காவது தினசரி உளுந்து, முட்டை, நல்லெண்ணெய் போன்ற உடலுறுதிக்கும் உறுப்பு வளர்ச்சிக்கும் உதவும் பண்டங்கள் ஊட்டப்பட்டால் பருவகால வளர்ச்சி துரிதமடைவதுடன் தாய்மை எய்தும் காலத்துக்கேற்ற அத்திவாரமுமாக அமையும்.

விமலாவிடம் இவற்றைக் கூறியபோது அவள் கண்கலங்கினாள். தான் பருவமடைந்த காலத்தில் தனது தாயார் உணவு விடயத்தில் காட்டிய கண்டிப்பினை இப்போதுதான் உணர்வதாகக் கூறினாள். அவற்றையெல்லாம் தான் வெறும் மூட நம்பிக்கை என்று கருதி தன் மகளுக்கு ஐஸ் கிறீமும், சொக்கலேட்டுகளும் பெட்டி பெட்டியாக வாங்கிக் கொடுத்ததனை எண்ணி மனம் நொந்து கொண்டாள்.

## நீங்களும் தைக்கலாம்


### சாரி பிளவுஸ்

முன் சட்டை அகலம்- 17"+1"= 18"÷2= 9"
தோளிலிருந்து இடுப்புவரை நீளம்- 13"+2"= 15"
முன் கழுத்தின் ஆழம்- 4 1/2"
தோளிலிருந்து டாட் வரை நீளம்- 10 1/4"
இடுப்புச் சுற்றளவு- 26"÷4= 6 1/2"
தோல் கட்டு அகலம்- 4 1/2"
பின் சட்டை அகலம்- 16"+1"= 17"÷2"= 8 1/2"
பின் கழுத்து அகலம்- 2 1/2"
பின் கழுத்தின் ஆழம்- 1/2"
கையின் நீளம்- 9"+1"+1"= 11"
கையின் சுற்றளவு- 13"+1 1/2"=14 1/2"÷2"= 7 1/4"
கை வாய் அளவு- 9"+1 1/2"=10 1/2"÷2"=5 1/4"
கைக்கீழ் மூட்டின் உயரம்- 5"

படத்திலுள்ளவாறு Aயிலிருந்து 4 1/2" E வரையும் A யிலிருந்து 2 1/2" F வரையும் குறித்து E,Fஐ இணைத்து முன் கழுத்தை வரைக. Fலிருந்து 4 1/2" Gயை வரைக. Bயிலிருந்து 5 1/2" வரை குறித்து G,Hஐ இணைத்துக் கை வரைக. தோளிலிருந்து டாட் வரை 10 1/4" குறித்து O என்று மார்க் பண்ணவும். நான்கு டாட்கள் உள்ளன. விரும்பின் மூன்று டாட் வைக்கலாம். அக்குளில் இருந்து இடுப்பை அளந்து குறிக்கவும்.

பின்பக்கம் வரைவது இரண்டாவது படத்தைப் பார்த்து வரையவும். கையின் அளவுக்கு Cயிலிருந்து 5" Eவரை குறித்து A,Eஐ இணைக்கவும். Dயிலிருந்து 5 1/4" Fகுறித்து E,Fஐ இணைக்கவும். படத்தில் உள்ளவாறு கை வளைத்து எடுக்க வேண்டும். கழுத்து உங்கள் விருப்பப்படி தைக்கலாம். மெல்லிய பைபிங் வைத்தால் நன்றாக இருக்கும்.

ஏ. பலோசியா-மதவாச்சி.






பூச்சாடியில் வைப்பதற்கோ அல்லது தலையில் வைப்பதற்கோ பூக்கள் வாங்கும்போது, எந்தப் பூவாக இருந்தாலும், கூடுமானவரை காம்புடன் வாங்கவும். வாங்கிய பிறகு, காம்பின் நுனிப்பகுதியை சிறிதளவு வெட்டி விட வேண்டும். காம்பின் மீது ஈரத் துணியைச் சுற்றி வைத்தாலும் சரி. இல்லாவிட்டால் ஸ்பொஞ்சை தண்ணீரில் நனைத்து அதன் மீது பூக்களை வைத்தாலும், வாடாமல், புதிதாகவே இருக்கும். பிறகு தேவையான போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

ஏற்கனவே பத்துக்கேள்விகள் தரப்பட்டுள்ளன. இன்று வரும் ஐந்து கேள்விகளோடு மொத்தம் 15 கேள்விகளுக்கும் பதில் எழுதி எமக்கனுப்பி வையுங்கள்.

முரசு 9 முதல் 27வரை வெளியீடுகளில் இடம் பெற்ற விடயங்களில் இருந்தே பதில்கள் எழுதப்பட வேண்டும். விடைகளைச் சாதாரண தாளில் எழுதினால் போதும். வினாக்களையும் எழுதி அதன்கீழ் விடை எழுதுங்கள்.

பதில்களை அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 5.1.1994.

மகளிர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

### இதோ கேள்விகள்-

11. உடல் பருமனுக்கும் ஆயுளுக்கும் சம்பந்தம் உண்டா?
12. உங்கள் அறை சிறியதாக இருக்கிறது. அதனைப் பெரிதாகக் காட்ட என்ன செய்வீர்கள்?
13. குழந்தைகளுக்கான சப்பாத்து வாங்கும்போது எப்படியானதைத் தெரிவு செய்வது புத்திசாலித்தனம்?
14. பெண்களுக்கு என்று தனியான சுரங்க ரயில் பாதை எங்கே இருக்கிறது?
15. எதிரி உங்களைப் பிடித்து வைத்திருக்கிறான். தப்பிக்க எவ்வாறு முயல்வீர்கள்?

15 கேள்விகளும் சுலபமானவை. சேகரித்து வைத்துள்ள முரசுகளைப் புரட்டிப் பார்த்து பதில் எழுதி அனுப்பிவையுங்கள்.

**அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-**
பட்டுச்சேலைப் பரிசுத் திட்டம்
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5.

## சமைப்போம் சுவைப்போம்

தருவது – சுகந்தினி

### கிறிஸ்மஸ் கேக்

ரவை- 500 கிராம்
சீனி - 1 கிலோ
மாஜரின் - 500 கிராம்
கறன்ஸ் - 250 கிராம்
பூசனி அல்வா - 500 கிராம்
கன்டிற் பீல் - 250 கிராம்
சொவ் சொவ் - 250 கிராம்
1 வைன் கிளாஸ் பிராண்டி
1 வைன் கிளாஸ் தேன்
வெனிலா,ஆமண்ட், றோஸ் எசன்ஸ்
ஏலக்காய், கராம்பு, கறுவாய் தூள்
முட்டை மஞ்சட் கரு - 25
வெள்ளைக்கரு - 12
பிளம்ஸ் - 500 கிராம்
விதையுள்ள முந்திரி வற்றல் 500 கிராம்
கஜு - 500 கிராம்
செரிஸ் - 250 கிராம்
இஞ்சிப் பாகு - 250 கிராம்
1 போத்தல் கோல்டன் சிறப்
1 சாதிக்காய்
1 போத்தல் ஸ்ரோபரி யாம்
1 அண்ணாசிப் பழ யாம்

பிளம்ஸ், கறன்ஸ், முந்திரிகை வற்றல் ஆகியவற்றை கழுவி காயவைத்து சிறு சிறு துண்டுகளாக வெட்டவும். அதே போல் மிகுதியாக உள்ள பழங்களையும் சிறு சிறு துண்டுகளாக்கி, ஒரு பெரிய போத்தலில் இடவும். அதனுள் எசன்ஸ் வகையையும், பிராண்டி, தேன், யாம், வாசனை தூள் ஆகியவற்றையும் சேர்த்து ஒரு வாரம் வரை வைக்கவும். இரண்டு நாளுக்கு ஒருதடவை அதனை குலுக்கி விடவும். ரவையை பொன்நிறமாக வறுத்து மாஜரீனோடு சேர்த்து 1 மணித்தியாலம் வரை வைக்கவும். முட்டை வெண் கருவை நன்றாக நுரை எழும்பும் வரை அடிக்கவும். அதே போல் மஞ்சட் கருவை சீனியோடு சேர்த்து அடிக்கவும். அதனுள் ரவையையும், பழக்கலவையையும், வெண் கருவையும் ஒன்றாக போட்டு கிளறவும். ஒரு தட்டில் மூன்று ஒயில் பேப்பர் மேல் பட்டர் பூசி அதன் மேல் கலவையை ஊற்றி பேக் பண்ணவும்.

## கச்சிதமான கட்டான உடலுக்கு!




இந்த அழகியின் பெயர் தோயார் கிட்ஸ். தன் உடல் அழகுக்குக் காரணம் பற்றி அவரே சொல்வது:-

"தினமும் கயிறு அடிப்பது, பாரம் தூக்குவது, தினமும் ஒரு குறிப்பிட்ட தூரம் நடப்பது"

பார்த்தீர்களா? அருகில் உள்ள கடைக்குச் செல்லவே சோம்பல் பட்டுக்கொண்டு அழகும் வேணடும் என்று அடம்பிடித்தால் எப்படி? பயிற்சி கைகொடுக்கும். உடல் அழகை மெருகூட்டும்.

## வயதான போதும் இளமைக்கு....!



எண்ணெயில் பொரித்த கட்லெட்டுக்களைத் தின்றால் பருவப் பெண்களுக்கு பருவெடிக்கும். உடம்பிலுள்ள அதிகப்படியான கொழுப்பு பருவுக்கு ஒரு காரணம் என்று சொல்கிறார்கள். ஆனால் அடிப்படையான காரணம் மலச்சிக்கல்தான். விடியற்காலையில் எழுந்திருக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு 90 சதவீதம் வராது. பரு இருக்கிறதே என்று கவலைப்படாதீர்கள். தினமும் சாப்பாட்டில் கீரை சேர்த்துக் கொள்ளலாம். பச்சைக்காய்கறிகளைச் சாப்பிடலாம். தினமும் ஏதாவது ஒரு பழம் சாப்பிட்டு குறைந்தது எட்டு டம்ளர் தண்ணீர் குடிக்கவேண்டும். பிரச்சனை ரொம்ப சுலபமாகப் போய்விடும்.

எண்ணெய்ப் பசையுள்ள தோலாக இருக்கிறதே, முகத்தில் எத்தனை முறை சோப்புப் போட்டாலும் எண்ணெய் வழிகிறதே, என்று நினைக்கலாம். இது கடவுள் கொடுத்த வரம் என்று எண்ணிக்கொள்ளுங்கள். எல்லாப் பெண்களுக்கும் வயதானாலும் இளமையான தோற்றம் இருக்க வேண்டும் என்று தானே ஆசை இருக்கும். எண்ணெய் பசையுள்ள தோல் இருந்தால் அவர்களுக்கு இளமை இலேசில் போகாது. அட சந்தோசத்தைப் பாருங்களேன்.

## கருவிலிருந்து கவனம் தொடங்கட்டும்!

குழந்தை அழகாக இருந்தால் மட்டும் போதாது. அதிலும் தாய்க்குலம், தலைமுறைகளைத் தருகின்ற ஆலயங்கள் அல்லவா? தாயாகப் போகும் பெண்ணுக்கு, மருத்துவர்கள் ஆலோசனை சொல்வார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் ஆயிரம் யோசனை சொல்வார்கள்.



குழந்தை நல்ல முறையில் வளர்ச்சி பெற அப்பிளும், தோடம்பழங்களுமாகத் தாய்க்குக் கொடுப்பார்கள். குழந்தையின் மனவளர்ச்சி கருவிலேயே நிர்ணயிக்கப்படுகின்ற ஒரு விசயம். அதில் கவனம் செலுத்த வேண்டும்.

## புருவத்தில் என்ன இரகசியம்?

அடர்த்தியும், கனமும் உள்ள புருவ வளர்ச்சி- ஒருவருடைய ஆதிக்கத்தைக் காட்டும்.



லேசான புருவங்கள்- ஒருவரது விட்டுக்கொடுக்கும் தன்மையையும், எதையும் அனுசரித்துப் போகும் குணத்தையும் காட்டும்.

புருவத்தின் மத்தியில் நீண்ட உரோமங்கள்- நீண்ட ஆயுளைக்காட்டும்.

லேசான, நெருக்கமில்லாத படியாத உரோமம் உள்ளவர்கள்: காம ஆட்டம் விரும்புவார்கள்.

புருவத்தின் வெளி முனைகளில் உரோமங்கள்- மேல் நோக்கி இருந்தால் நண்பர்களிடமிருந்து உதவி நிறையப் பெறுவார்கள்.

உரோமங்கள் சீராகவும் மிருதுவாகவும், ஒழுங்காகவும் இருந்தால்: மிதமான உணர்ச்சியோடு இருப்பார்கள். சினேகத்திற்கு ஒத்தும் இருப்பார்கள்.

புருவங்களின் அடியில் சற்றே எலும்பு எடுப்பாகத் தெரிந்தால்: வாழ்க்கையில் புகழும் பெருமையும் அடைவார்கள்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தகவல் பெட்டி

## உருவத்திலே ஒற்றுமை எடையிலே வேற்றுமை விசித்திரமான இரட்டைக் குழந்தைகள்


ஊரில் உள்ளவர்கள் அனைவரும் அவர்களை விரும்புகின்றனர்
எடைகள் வேறுபட்டாலும் குறும்புகளில் மட்டும் குறைவைப்பதில்லை!

மைக்கலும் மத்தியூவும் ஒரே தாய் வயிற்றில் ஒரே நேரத்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகள். இருப்பினும் இவர்களுடைய தோற்றமும் எடையும் மிகவும் வித்தியாசமானவை.

மூன்று மாதங்களுக்கு முன்னர் சிக்காகோ நகரிலுள்ள ஒரு மருத்துவ மனையில் பிறந்த இவர்களில் மத்தியூ 26 இறாத்தல் எடை கொண்டவனாக இருக்கும் போது மைக்கேல் ஆக 5 இறாத்தல் எடையுள்ளவனாக இருக்கிறான். பிறக்கும் போதே மத்தியூ 15 இறாத்தல் எடை கொண்டவனாகக் காணப்பட்டான். மைக்கேல் ஒரே இறாத்தல் எடையுள்ள வனாகவிருந்தான்.

நிறைமாதக் குழந்தைகளாக இருவரும் பிறந்தமையினால், எடை குறைந்த மைக்கேலுக்கு பிரத்தியேக பிராணவாயுக் கூண்டில் கிடத்தப்பட வேண்டிய நிலை ஏற்படவில்லை. இருவரும் தோற்றத்திலும் எடையிலும் வித்தியாசப்பட்டிருந்த போதிலும் அவர்களுடைய தேக சுகத்தில் எந்தப் பாதிப்பும் இருக்கவில்லை.

இவர்களைப் பரிசோதித்த மருத்து வர்களும், இருவரும் எக்குறையுமற்றவர் களாகவே காணப்படுகின்றனர் என்று கூறியுள்ளனர்.

பற்றிக்கா ட்றிலோர் என்ற 31 வயதான இக்குழந்தைகளின் தாய், இக்குழந்தைகள் கருவிலிருக்கும் போது தொடுக்கப்பட்டிருந்த தொப்புள் கொடியில் ஏற்பட்ட சிறு மாற்றமே இக்குழந்தைகளின் தோற்ற-எடை வித்தியாசத்துக்குக் காரணம் என்பதை பிரசவ காலத்தின் போது மருத்துவர்கள் கண்டுகொண்டதாகக் கூறியுள்ளார்.

மத்தியூவின் வயிற்றுடன் பொருத்தப் பட்டிருந்த கொடி சற்றுத் தடிப்பமாக இருந்தமையினால் அதிகமான போஷாக்கு அவனுக்கே கிடைக்க வசதியேற்பட்ட தென்றும் மைக்கேலுடன் தொடர்பு கொண்டிருந்த தொப்புள் கொடி மெலிந்து, சிறுத்துக்காணப்பட்டமை யினால் மிகக் குறைந்த அளவு போஷாக்கு மைக்கேலுக்குக் கிடைத்ததெனவும் அவர் தெரிவித்தார்.

தேகத்தின் அளவு வேறுபட்டிருந்த போதிலும் இருவரினது உருவ அமைப்பில் எந்தவிதமான வித்தியாச மும் காணப்படவில்லை.

மைக்கேலுக்கு பிரத்தியேகமாக அதிக கலோரி கொண்ட உணவு ஊட்டப்பட்டு வருகிறது. இதனால் விரைவில் மைக்கேல் தன் சகோதரனின் அளவு வளராவிட்டாலும் ஓரளவு சாதாரண வளர்ச்சியினைப் பெறுவான் என்றே மருத்துவர்கள் நம்புகின்றனர்.

இருவரையும் ஒருங்கே பார்க்கும் பலர் மைக்கேல் ஏதோ உடலியற் குறைபாட்டின் காரணமாகவோ அல்லது ஏதோ ஒரு வியாதியால் பாதிக்கப்பட்டதனாலேயோ இம்மாற்றம் என்று கருதுகின்றனர். இவ்வாறு பரிதாபப்படும் பலரைப் பார்த்தால் தான் சங்கடப்படுவதாக தாயார் பற்றீஷியா வருத்தப்படுகிறார்.

ஆனாலும் இக்குழந்தைகள் பலரின் அன்புக்குப் பாத்திரமாகியுள்ளனர் என்று அவர் மகிழ்ச்சியடைகிறார்.

## ஏ.....ப்.....ப.....ம் உலக சாதனை!


1990ல் படைத்த சாதனையை முறியடிக்க ஆளில்லை. எனவே, படைத்தவரே 1993ல் முறியடித்தார்.

பந்தியிலே அமர்ந்து வயிறு முட்ட ஒரு பிடித்துவிட்டு, பாயாசத் தையும் ஒரு குடி குடித்துவிட்டு இலையை மடித்துவைத்து எழும்பும் போது திருப்தியாய் ஒரு ஏப்பம் விடுவது சிலருக்கு உலக மகாதிருப்தி.

அவ்வாறானவர்களுக்கெல்லாம் ஒரு போட்டி வைத்தால் என்ன? வைத்தே விட்டார்கள்! எங்கே? டென்மார்க்கில்.

அது நடந்தது 1990ம் ஆண்டு. ஏப்ப மன்னர்கள் பலர் கூடிவிட்டனர். 'ஏப்பம் தானே! விட்டால் போச்சு. இது என்ன பிரமாதம்' என்ற நினைப்பு.

அவர்கள் நினைப்பு தவறாகி விட்டது. ஏப்பம் விடுவது சுலபமான விசயமல்ல. அதாவது நீண்ட நேரம் ஏப்பம் விடுவது.

ஒருவர்தான் ஏப்ப மன்னராக அதிசயிக்க வைத்தார்.

அவர் பெயர் ஒலிவெட்டி. 3 நிமிடம் 23 நொடிகள் இடைவிடாத ஏ....ப்...ப...ம். அதுவே, அன்றே உலக சாதனையாகியது.

அது நடந்து மூன்றாண்டுகள் கழிந்த பின்னர் மீண்டும் அதே நபர் இப்போது டென்மார்க்கில் அதே இடத்தில் சாதனை படைத்துள்ளார்.

இப்போது முன்பைவிட 10 நொடிகள் அதிகமாக ஏப்பம் விட்டு, முன்னர் தான் செய்த சாதனையைத் தானே முறியடித் துள்ளார்.

இம்முறை அவர் ஏப்பம் விட்டுள்ள நேரம் 3 நிமிடம் 33 நொடி.

போட்டியில் பங்கெடுத்தவர்கள் 67 பேர். . அதில் பாதிக்கு மேலானவர்கள் போட்டியின் பாதியிலேயே ஓடிவிட்டனர். காரணம், ஒலிவெட்டி நீண்ட நேரம் ஏப்பம் விட்டதை கண்டபின் தம்மால் முடியாது என்று தெரிந்து கொண்டார்கள்.

ஏப்ப மன்னனின் வெற்றி இரகசியம் என்ன?

"ஏராளமான வாயுவை சேமித்து வைக்கும் அவரது வயிறுதான்" என்கிறார்கள் மருத்துவர்கள்.


"இரண்டு மணி நேரத்துக்கு பியர் அருந்து கிறேன். அடிக்கடி பூண்டு, கோவா இலைகள் என்பவற்றை உண்பேன். இவையே நீடித்த ஏப்பத்துக்குக் காரணம்" என்கிறார் ஏப்ப மன்னன் ஒலிவெட்டி.

"காற்றை உள்ளே வாயால் இழுத்து, விழுங்கி கண்களை இறுக மூடிக்கொண்டு வாயைத் திறந்தால் ஏப்பம் தானாகவே வரும்" என்றும் ஐடியா சொல்கிறார். யாராவது முயன்று பார்க்கலாம்.

## டூத் பிரஸ் நகரம்



சீனாவில் ஜியாங்க மாநிலத்தைச் சேர்ந்த ஹங்சாங் கிராமத்திற்கு 'டூத் பிரஸ் நகரம்' என்று பெயர். ஆண்டுக்கு 30 கோடி டூத் பிரஸ் இங்கு தயாராகிறது. சீனாவில் தயாராகும் டூத் பிரஸ் எண்ணிக்கையில் இது 40 சதவீதம்.




எல்லோருக்கும் ஒவ்வோர் ஆசை. ஆடையில்லாமல் பிறந்தோமே. ஆசையில்லாமல் பிறந்தோமா? என்று ஒரு பாடல் இருக்கிறது.

ஆசை இல்லாவிட்டால் வாழ்வில் சுவை இருக்காது. சுவாரசியமும் இருக்காது.

பேராசைதான் கூடாது. நியாய மான ஆசைகள் இருக்கலாம்.

சிலருக்கு சாதனை படைக்க ஆசை.


அமெரிக்காவில் வசிக்கும் பால்மில்லர் என்பவருக்கும் அப்படியொரு ஆசை. உடனே வளர்த்தார் மீசை.

அவரது ஆசைக்கு ஈடுகொடுத்து நீண்டு வளர்ந்துவிட்டது மீசை.

ஒரு மூலையில் இருந்து இன்னொரு மூலைக்கு அதன் நீளம் 8 அடி.

8 அடி மீசை விசயம் உலக சாதனைப் புத்தகமான கின்னசுக்கு எட்டியிருக்கிறது. விரைவில் இடம் பெறப்போகிறது பால்மில்லரின் பெயர்.

பால் மில்லர் தனது மீசையைக் கொண்டை போலக் கட்டி தொங்கு மீசையாக வைத்தும் அழகு பார்ப்பதுண்டு. அதுவும் அம்சமாகத்தான் இருக்கிறது.



## 90 வயது வயோதிப வாலிபர் பாய்ச்சல் சாதனைக்கு வயதோ எல்லை? இல்லை!!



வயதானால் என்ன? உள்ளத்தில் வலுவிருந்தால் சாதிக்கலாம். அது உண்மைதான். அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில் உள்ள குண்டேர்ஸ் வில்லி பகுதியைச் சேர்ந்தவர் மோட்டர் ஹாவே. அண்ணருக்கு வயது 90. மூன்று பிள்ளைகள். 11 பேரப்பிள்ளைகள். 16 பூட்டப் பிள்ளைகள் என்று தலைமுறைகள் கண்டவர். வயதான போதும் சாதிக்கும் ஆசை வர களத்தில் குதித்துவிட்டார். ஆம் உண்மையாகவே குதித்தார். 176 அடி உயரத்தில் இருந்து கீழே ஒரே குதியல்.

அண்ணருக்கு ஒரு பாதிப்பும் இல்லை. கம்புமாதிரி இருக்கிறார். 176 அடி உயர கட்டிடத்தின் உச்சியில் இருந்து இடையில் இணைக்கப்பட்ட ஒரு கயிற்றின் துணையுடன் கீழே பாய்ந்தார். பொதுமக்கள் கூடி நின்று வேடிக்கை பார்த்தனர். அவரது 58வயது மகன் ஜோ, 52 வயது மகன் வாம், ஜோவின் 34 வயது மகன் புரூஸ், புரூசின் 11 வயது மகள் செவின் என்று அவரது சந்ததியே மோட்டருடன் சேர்ந்து பாய்ந்து உற்சாகம் கொடுத்தனர். வயதான போதும் வாலிபன்.




இலண்டனில் உள்ள டெவோன் நகரில் ஒரு விலங்கு சரணாலயம் அமைத்துள்ளார் இந்தச் சிறுமி. அவருக்கு பிராணிகளின்மீது கொள்ளை ஆசை. அந்த பிராணிகளுக்கும் அவர்மீது கொள்ளை ஆசை. அதனால்தான் செல்லமாய் ஒரு முத்தம்.

www.padippakam.com நன்றி - நூலகம்

## மினி சினி

★ கிழக்குச் சீமையிலே வெற்றிப்படத்தை அடுத்து சத்தியஜோதி ஃபிலிம்ஸ் நிறுவனத்திற்காக பாரதிராஜா படமொன்றினை இயக்குகிறார். பிரபு கதாநாயகனாக நடிக்கும் இப்படத்திற்கு திருவிழா என்று பெயரிடப்பட்டுள்ளது.

★ நடன இயக்குநரான ரகுராமும், கமலஹாசனும் இணைந்து பரதக் கலையை மையமாக வைத்து சின்னமேளம் என்ற படத்தைத் தயாரிக்கிறார்கள். நாசர் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார் ரகுராம்.

★ ஹிந்தி சுப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன் நடித்த தக்ஷிராஷ்தா படத்தை இயக்கியவர் பாக்கியராஜ். தற்போது அனில்கபூர்-ஸ்ரீதேவி நடிக்க புதிய ஹிந்திப் படமொன்றை இயக்கவுள்ளார் பாக்கியராஜ்.

★ மலையாள மெகா ஸ்டார் மம்முட்டி திரையுலகிற்கு வந்து பதின்மூன்று ஆண்டுகளாகின்றன. இதுவரை இவர் 250 படங்களில் நடித்து முடித்துள்ளார்.

★ தெலுங்குத் திரையுலகின் பிரபல நிறுவனமான பிரதாப் ஆர்ட் புரடக்ஷன்ஸ் தயாரிக்கும் படத்தின் மூலம் தெலுங்கில் அறிமுகமாகிறார் சரவணன். இப்படத்தை வி.சி. குகநாதன் இயக்குகிறார்.

★ அன்னக்கிளி, முதல் மரியாதை, சின்னக் கவுண்டர் உட்பட பல படங்களுக்குக் கதை எழுதியவர் ஆர். செல்வராஜ். பொண்ணு ஊருக்குப் புதுசு, நீதானா அந்தக் குயில் உட்பட நான்கு படங்களை இயக்கிய செல்வராஜ் தறபோது முற்றிலும் புதுமுகங்கள் நடிக்க குயில் தோப்பு என்ற படத்தை இயக்கி வருகிறார்.

★ ராஜ்கிரண்-குஷ்பு நடித்து வரும் எல்லாமே என் ராசா தான் படத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேலு நடித்து வருகிறார். இப்படத்தில் வடிவேலு இளையராஜாவின் இசையில் ஒரு பாடலைப் பாடியுள்ளார்.

★ சரத்குமார் கதாநாயகனாக நடிக்கும் அரண்மனைக்காவலன் படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தமானவர் ரஞ்சிதா. தற்போது அந்த வேடத்தில் ரஞ்சிதாவிற்குப் பதிலாக சிவரஞ்சனி நடித்து வருகிறார்.

★ விஜயகாந்த் நடித்த பூந்தோட்டக் காவல்காரன் படத்தை இயக்கியவர் செந்தில்நாதன். மீண்டும் விஜயகாந்தைக் கதாநாயகனாக வைத்து புதிய படமொன்றை இயக்குகிறார் செந்தில்நாதன்.

## ஏழு பாடல் ரெடி

கார்த்திக் நடிக்கும் இனியெல்லாம் சுகமே படத்தை இயக்கும் விக்கிரமன் மற்றுமொரு படத்தையும் இயக்கப் போகிறார். படத்தின் பெயர் புதிய மன்னர்கள், கதாநாயகி பம்பாய் இறக்குமதி. பெயர் சங்கீதாபிஜோர்.

இசை, ஏ.ஆர்.ரகுமான். ஏழு பாடல்கள் பதிவு செய்யப்பட்டுவிட்டன.

## ஆரம்பமானது-இன்று முதல்.....
## நாயகன் பிரபு- நாயகி கௌதமி

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த பல படங்களுக்கு வெற்றிகரமான இயக்குநராக இருந்தவர் சி.வி.ராஜேந்திரன். சங்கிலி படத்தின் மூலமாக பிரபுவை தமிழில் அறிமுகப்படுத்திய பெருமையும் அவரையே சேரும்.

இப்போது புதிய பட நிறுவனம் ஒன்றை அவர் ஆரம்பித்துள்ளார். புதிய படம் தயாராகிறது.

பிரபுதான் படத்தின் நாயகன். நாயகி கௌதமி. படத்தின் பெயர் இன்று முதல்...

இசை இளையராஜா. வசனம் கிரேஸி மோகன்.

சிவாஜி கணேசன் குத்துவிளக் கேற்றி வைக்க படத்தொடக்க விழா நடந்துள்ளது.

கௌதமி மகிழ்ச்சியாக இருக்கிறார். பிரபுவின் ஜோடியாக நடிப்பதால் மகிழ்ச்சி.





## காதல் வலை ஒரு மாய வலை

நகைச்சுவை நடிகர் நாகேஷின் மகன் ஆனந்தபாபு நடித்துள்ள தோழன் திரைக்கு வரப்போகிறது.

அதிக படங்கள், கைவசம் இல்லாத போதும் ஆனந்த் பாபுவுக்கு என்றும் ரசிகர்கள் இல்லாமல் இல்லை. ஆனந்தபாபு அடுத்து நடிக்கவுள்ள படத்தின் பெயர் மம்மி மம்மி.

திரைப்படக்கல்லூரி மாணவரான விஜயபாரதி திரைக்கதை- வசனம் எழுதி இயக்கப் போகிறார்.

ஆனந்தபாபுவின் ஜோடியாக நடிப்பது சங்கவி. இசையமைப்பது ஆதித்யன்.

படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது. 'காதல்வலை அது மாயவலை' என்ற பாடல் காட்சியும் படமாக்கப்பட்டுள்ளது.

## துணிச்சலே அந்த இரகசியம்!

தமிழில் வாய்ப்பு சரிவர அமையாமல் பிறமொழிப் படங்களில் [illegible] தனில் ஒருவர் மாலாஸ்ரீ. கன்னட படவுலகில் கவர்ச்சிக் கொடி நாட்டி முன்னணி கதாநாயகியாக தான் கிளம்புகிறார். அப்படியும் நடிக்கலாம். எந்தளவுக்கு வேண்டுமானாலும் துணி குறைக்கலாம் என்ற துணிச்சலே வெற்றியின் இரகசியம்.

## விழிகளில் வடியும் வேதனை எந்த விடியலில் தீருமோ? ஏங்குகிறாள் இந்தப் பைங்கிளி!

மாலாஸ்ரீ
படம்-அடுத்த முதல்வர் யார் கண்டது

## சொல்வது நிஜம்தானா?

சரத்குமார் நடித்துவரும் படம் அரண்மனைக் காவலன். அப்படத்தில் சரத் ஜோடியாக முதலில் நடிக்கவிருந்தது ரஞ்சிதா. ஆனால் இப்போது நடித்துக் கொண்டிருப்பது சிவரஞ்சனி.

இது பற்றி ரஞ்சிதாவிடம் கேட்டால் "எனக்கு உடல்நிலை சரியில்லை. அதுதான் நானாகவே விலகிக் கொண்டேன்" என்கிறார்.

அதுதான் உண்மையா?



நாகார்ஜுன
படம் கமாண்டர்

## மறுபடியும் கார்த்திக்

கார்த்திக் மார்க்கெட் இதுவரை டல்லாக இருந்தது.

தற்போது திரைக்கு வந்து ஓடிக்கொண்டிருக்கும் சின்ன ஜமீன் டல்லான மார்க்கெட்டை தட்டி நிமிர்த்தியிருக்கிறது. சின்ன ஜமீனுக்குப் பின்னர் தயாரிப்பாளர்கள் பார்வை கார்த்திக் மீது விழுந்திருக்கிறது. ஆர்.வி.உதயகுமார் இயக்கத்தில் இளையராஜா இசையில் கார்த்திக் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது. ஆர்.வி.உதயகுமார் இயக்கத்தில் கிழக்குவாசல், பொன்னுமணி ஆகிய படங்களில் கார்த்திக் நடித்துள்ளார்.

அதில் கிழக்கு வாசல் மாபெரும் வெற்றிப்படம்.

சின்ன ஜமீன் சிறப்பாக ஓடுவதால் அப்படத்தை இயக்கிய ராஜ்கபூர் புதிய படம் ஒன்றை இயக்கப் போகிறார். படத்திற்கு சீமான் என்று பெயரிடப்பட்டுள்ளது. அதில் நடிப்பதற்கு கார்த்திக் உடனடியாக சம்மதம் தெரிவித்து விட்டார். படத் தொடக்கவிழாவும் நடந்துள்ளது.

புதுமுகம் பிரியா

## இனியெல்லாம் சுகமே

இயக்குநர் விக்ரமன் புது வசந்தம் படம் மூலமாக பிரபலமாகி [illegible] பின்னர் கோகுலம், நான் பேச நினைப்பதெல்லாம் போன்ற [illegible] இயக்கியவர். என்றாலும் புது வசந்தம் போல் பெரிய வெற்றி [illegible]

இப்போது விக்ரமன் இய[illegible] படம் 'இனியெல்லாம் சுகமே'. கதாநாயகன் கார்த்திக். [illegible] யாரை நடிக்கவைக்கலாம் என்[illegible] கொண்டிருக்கிறார்கள்.

ஊட்டி, அந்தமான் தீவு, [illegible] என்று எழில் கொஞ்சும் பகுதி[illegible] மாதம் படப்பிடிப்பு ஆரம்ப[illegible]



சீமான் படத்தில் கார்த்திக்

## யார் அந்த [illegible]

இந்தித் திரையுலகில் [illegible] போடும் படம் தலால்.

நாயகன் மிதுன் சக்கரவ[illegible] படத்தின் வெற்றியால் [illegible] இருக்கிறார்.

ஒரு துணை தேடுகி[illegible] அநேகமாக இந்திராணி பெ[illegible] இருக்கலாம் என்று ஒரு [illegible]



இந்திராணி பெல்லா[illegible]

## கமாண்டர் படைப்பாரோ சாதனை?

தெலுங்கில் வன்முறைக் காட்சிகள், [illegible] தழுவலக்கோடு கூடிய காதல் காட்சிகளுக்கு குறைவில்லை. நாகார்ஜுன் நடித்து தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்ட சகல படங்களும் வசூலில் பெரிய சாதனை என்று சொல்ல முடியாது. 'உதயம்' படம் [illegible] தமிழில் பிரபலமாகிய நாகார்ஜுன் மீண்டும் 'கமாண்டர்' படம் மூலமாக தமிழ் திரையுலகை வியக்கச் செய்வாரா என்று நம்புகிறார். பிரமாண்டமான சண்டைக் காட்சிகளோடு தயாராகியுள்ள 'கமாண்டர்' தெலுங்கிலிருந்து தமிழுக்கு வருகிறது.

[illegible] நாகேஸ்வரராவின் மகனான நாகார்ஜுன் அமலாவின் [illegible] இப்போது அமலாவோடு சிறு விரிசல் என்றும் ஒரு தகவல்.

## ராதிகாவின் சோகம் கலங்கிப் போனார் ரஜனி

தீபாவளிப் படங்களில் வெளுத்து வாங்கிக் கொண்டிருப்பது கிழக்குச் சீமையிலே. பாரதிராஜா மீண்டும் நம்பிக்கையோடு எழுந்திருக்கிறார்.

படத்தைப் பார்ப்பதற்கு வந்த ரஜனிகாந்த் ராதிகா நடித்த சோகமான காட்சியொன்றைப் பார்த்து கண்கலங்கி விட்டார். அருகில் இருந்த பாரதிராஜாவின் கரங்களைப் பிடித்து மனம் நெகிழ்ந்து பாராட்டினாராம்.

## தீபாவளி பட வசூலில்....

தீபாவளி திருநாளுக்கு வெளியான படங்களில் வசூலை வாரிக் குவிக்கும் படம் ஜென்டில் மேன். தமிழிலும், தெலுங்கிலும் எடுக்கப்பட்ட ஜென்டில் மேன் தமிழில் வெற்றிவாகை சூடியுள்ளது. விஜயகாந்த் போட்டியில் ஜெயித்துவிட்டார்.

## வளர்கிறான் 'செவந்த பொண்ணு'

[illegible] தங்க மனசுக்காரன் [illegible] ஆகிய படங்களைத் தயாரித்த [illegible] அடுத்து தயாரிக்கும் படம் 'செவந்த பொண்ணு'.

கதாநாயகனாக நடிப்பவர் சரவணன். அவருக்கு ஜோடி அஞ்சனா.

ஆரம்பக் காட்சிகள் [illegible] பின்னணியிலும், பின்னர் கிராமப் பின்னணியிலும் எடுக்கத் திட்டமிடுள்ளனர்.

பாடல்கள் வாலி. இசை தேவா. தமிழ் புத்தாண்டான ஏப்ரல் 14ம் திகதி திரையிடத் திட்டமிட்டுள்ளார்கள்.

## மறுபடி சூடு!

'பருவம் எனது அரசன்' [illegible] ஆகியவைப் பிரகாசமாகாத போதும் படங்கள் [illegible] அமையாமல் [illegible] [illegible]

இப்போது [illegible] நடிக்க ஒப்பந்தமாகியுள்ள படம் [illegible]


துவக்க விழாவும் நடந்துவிட்டது. திரைக்கதை-இயக்கம் ஆர்.டி. ராஜசேகர்.

[illegible] ஜோடியாக நடிப்பது சிவரஞ்சனி.



சி
னி
வி
சி

www.padippakam.com



## படமாகும் நிலா. நாயகி மதுபாலா

'ஸ்ரீசாய்ராம் ஆர்ட்ஸ்' என்னும் பட நிறுவனம் புதிதாகத் தயாரிக்கும் திரைப்படம் 'நிலா'. இப்படத்தில் கதாநாயகனாக நடிப்பவர் ஜெயராம். கதாநாயகியாக நடிக்கப் போவது மதுபாலா. கவுண்டமணி, செந்தில், டிஸ்கோ சாந்தி, விஜயகுமார், மஞ்சுளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

## ஆட முடியாத ரோஜா!

இந்து படத்தின் வேலைகள் படு தீவிரமாக நடந்துவருகின்றன. நாயகியாகி நடிக்கும் ரோஜாதான் கஷ்டப்படுகிறார்.

அதிரடிப்படை படத்தில் டூசும் டூசும் போட்ட போது இடது காலில் பட்ட காயம் இன்னும் ஆறவில்லை. அடிமேல் அடி வைத்து நடக்கிறார். முன்பு போல் ஓட, ஆட முடியவில்லை. காலை சரியாக மடக்கக்கூட முடியவில்லையாம். என்றாலும் வலியைப் பார்க்காமல் நடித்து வருகிறார். நாலு மாதங்களில் பூரண குணம் வந்துவிடுமாம். ரசிகர்கள் யாரும் கவலைப்பட வேண்டாம்.

## கண்ணாடி நடிகைகள்

இப்போதெல்லாம் பெரும்பாலான நடிகைகள் மூக்குக் கண்ணாடி போட ஆரம்பித்துள்ளார்கள். என்றாலும் சில நடிகைகள் கண்ணாடியோடு வெளியே வர வெட்கப்படுகிறார்கள்.

ரஞ்சிதா-மோகினி, வினோதினி, அஞ்சலி போன்றோர் வீட்டிலிருக்கும் போது மட்டும் மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்கிறார்கள்.

## அடடா பிரமாதம்

சின்னக் குஷ்பூ என்று அழைக்கப்படும் சிவரஞ்சனி குஷ்பூவின் பரம ரசிகை. சமீபத்தில் புருஷ லட்சணம் படம் பார்த்தாராம். அடடா குஷ்பு பிரமாதமாக நடித்துள்ளார் என்று புகழ்ந்து தள்ளிவிட்டாராம்.

குஷ்பூக்களுக்குள் ஒரு கோடினேசன். வாழ்க நட்பு

## ஆளை விடு!

ராஜகுமாரன் படப்பிடிப்பில் படு பிசியாக இருக்கிறார் ஆர்.வி.உதயகுமார். பலர் அவரிடம் நீங்களும் படத்தில நடிக்கலாமே என்று கேட்கிறார்களாம். வேண்டாம் இயக்குநராக மட்டுமே இருந்து விடுகிறேன் என்கிறாராம் ஆர்.வி.உ புத்திசாலி

## மாறுமோ முடிவு?

தெலுங்கில் சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவி, அரசியல்வாதிகளின் தொல்லைகளால் அவதிப்படுகிறார்.

நடிப்பதோடு சரி, அரசியல் வேண்டாம் என்று அவர் சொன்னாலும் விடாமல் துரத்துகிறார்கள். சிரஞ்சீவியின் ரசிகர்கள் புது யோசனை சொல்லுகிறார்கள். "தலைவா நாங்கள் ஒரு தனிக்கட்சி தொடங்குவோம்" என்கிறார்கள் [illegible] சிரஞ்சீவி அரசியலில் குதிப்பாரா என்பது விரைவில் தெரியும். காங்கிரஸ் கட்சி அவரை வளைத்துப் போட முயன்று தோல்வியடைந்திருக்கிறது.

சிரஞ்சீவி

## அதுதான் கோபம்!

[illegible]



ஆனந்தபாபு-சங்கவி படம் தோரண்

## இரத்தத்தில் கலந்தது!

படிக்கும் போதே தமிழ் உணர்வுடன் இந்தியை எதிர்த்துப் போராடி, கல்லூரியில் இருந்து சஸ்பென்ட் செய்யப்பட்டவர் விஜயகாந்த்.

இப்போதும் தான் நடிக்கும் படங்களில் தமிழ், தமிழர்கள் என்ற வசனங்கள் வருமாறு பார்த்துக் கொள்கிறார். "தமிழ் உணர்வு என் ரத்தத்தில் கலந்தது" என்று பளிச்சென்று சொல்கிறார் விஜய். அரசியலில் யார் பக்கமும் சேராமல் பொதுவாகவே பேசி வருகிறார். காங்கிரசிலும் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் திமுகவிலும் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்.

தோகை விரித்திருந்து
கோதையிவள்
பார்வை வீசும் போது
போதையுண்ட நிலையாக
மாறும் அன்றோ
காளையர்கள் உள்ளம்!



## சத்யராஜ் இடத்தில் சரத்குமார் நள்ளிரவில் ஆரம்பம்

இந்து படத்தின் இயக்குநர் பவித்ரன் ஹிட்லர் என்னும் பெயரில் ஒரு படத்தை இயக்கப்போகிறார்.

ஜீ.வி. பிலிம்ஸ் அந்தப் படத்தை தயாரிக்கிறது.

ஹிட்லரில் சத்யராஜ் நடிப்பதாக இருந்தது. பின்னர் ஏதோ காரணத்தால் சத்யராஜ் மறுத்துவிட, இப்போது சரத்குமார் நடிக்கப்போகிறார்.

டிசம்பர் 31 இரவு 11.54க்குப் பின்னர் படத் துவக்கவிழா நள்ளிரவில் நடக்கும். அப்போதே சில காட்சிகளும் எடுக்கப்படும் என்று பவித்ரன் கூறியுள்ளார்.



## காதோடு சொல்லுகிறோம்

[illegible]

## இங்கு வருகிறார்!

[illegible]


## பல்லவிக்கும் யோகம்தான்

[illegible]



## பாப்பா முரசு சிறுகதை

# அனுபவம் பேசுது



ஒரு முறை கிராமத்திலிருந்து ஒரு ரயில் பட்டணத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. வண்டியில் பலவித மான மக்கள் அமர்ந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். இதில் ஒரு வயதான விவசாயியும் அமர்ந்திருந்தார். அவர் ஒரு எட்டு முழம் வேட்டியைக் கட்டி இருந்தார். ஒரு சால்வையை உடம்பைச் சுற்றிப் போட்டிருந்தார். அவருக்கு எதிரில் ஒரு படித்த இளைஞன் அமர்ந்திருந்தான். அவன் முழுக்கால் சட்டையும், கோட்டும் அணிந்திருந்தான்.

விவசாயியை ஏளனமாகப் பார்த்தபடி புகை பிடித்துக் கொண்டே வந்தான். தான் அதிகம் படித்தவன் என்று அவன் தன்னுடன் பிரயாணம் செய்பவர்களிடம் காட்டிக்கொள்ள விரும்பினான். அதற்கு விவசாயியை மட்டம் தட்டுவது தான் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தான். உடனே விவசாயியிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தான். "ஏம்பா! நீ எந்த ஊருக்குப் போறே?" என்று கேட்டான்.

உடனே விவசாயி மெல்லப் புன்னகைத்தபடி, "தம்பி! என் வயதை மதித்தாவது நீங்கள் எந்த ஊருக்குப் போகிறீர்கள்? என்று சற்று மரியாதை யாகக் கேட்டிருக்கலாமே. பரவாயில்லை. நானே சொல்கிறேன்," என்றபடி "நான் பட்டணத்தில் படிக்கும் என் மகனைப் பார்க்கப் போகிறேன்," என்றார்.

உடனே இளைஞன், கிழவன் தன்னை இப்படி மற்றவர்கள் முன்பாக மரியாதை தெரியாதவன் என்று கூறிவிட்டாரே என்று ஆத்திரப்பட்டான். மேலும், விவசாயியை மட்டம் தட்ட முடிவு செய்தான்.

எனவே, "அய்யா தங்கள் பிள்ளை யைப் பட்டணத்தில் படிக்க வைக்கிறீர் களே! நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான். உடனே விவசாயி, "எனக்கு ஏதப்பா படிப்பு வாசனை எல்லாம். ஆனா, ஆவன்னா கூடத் தெரியாது. எல்லாம் வெறும் அனுபவப் படிப்புத்தான்," என்றார்.

உடனே இளைஞன் கடகடவென்று சிரித்தான். "அடப்பாவமே! படிப்பறிவே இல்லாமல் இந்த உலகத்தில் வாழ்வது மிகவும் கடினமாயிற்றே! உம்மால் எப்படிக் காலம் தள்ள முடிகிறது? பட்டணத்தில் உள்ள பெரிய கல்லூரியில் எம்.ஏ.படித்துவிட்டு மேலும் படிக்கிறேன் நான். என்னாலேயே இந்த உலகில் ஏமாறாமல் இருப்பது முடியாத காரியம் போல் இருக்கிறது. இதில் உம்மைப் போன்ற படிக்காதவர்கள் என்னதான் செய்வீர்கள்?" என்று கேலியாகக் கேட்டான்.

விவசாயி சிறிதும் முகம் சுளிக்காமல், "என்னப்பா செய்வது? என் அம்மா, அப்பா என்னைப் படிக்க வைக்கவில்லை. ஏதோ உலக அனுபவத்தை வைத்துத்தான் ஏமாறாமல் காலம் தள்ள வேண்டி யுள்ளது," என்றார். ரயிலில் பிரயாணம் செய்த எல்லாரும் விவசாயியும், இளைஞ னும் பேசுவதை வெகு சுவாரசியமாகக் கேட்டபடி வந்தனர்.

சிறிது நேரம் பேசாமல் இருந்த இளைஞன், "அய்யா ரொம்பப் படித்த என்னால் எப்போதும் சோம்பேறித் தனமாக இருப்பது முடியாத காரியம். என் மூளைக்கு வேலை தந்து கொண்டே இருக்க வேண்டும், என விரும்புபவன் நான். எனவே, உங்களுக்குத் தெரிந்த ஏதாவது விடு கதையைச் சொல்லுங்கள். நான் பதிலைச் சொல்கிறேன்," என்றான். விவசாயியும் ஒப்புக் கொண்டார். உடனே இளைஞன் திமிருடன், "அய்யா! நீங்கள் அதிகம் படிக்காதவர். எனவே, படிக்காத உங்களிடம் வெற்றி பெறுவதில் எனக்கு ஏதும் பெருமை இல்லை. எனவே, தாங்கள் கேட்கும் விடுகதைக்குப் பதில் தெரியாமல் நான் உங்களிடம் தோற்று விட்டால் நான் உங்களுக்கு பத்து ரூபாய் தந்து விடுகிறேன். நீங்கள் என்னிடம் தோற்றுவிட்டால், நீங்கள் எனக்கு ஐந்து ரூபாய் தந்தால் போதும்," என்றான்.

விவசாயி இப்போதும் அமைதியாக ஒப்புக்கொண்டார். போட்டி துவங்கியது. விவசாயி இளைஞனிடம், "எட்டுக்கால், பதினாறுகை, முப்பத்தியிரண்டு பற்கள், அறுபத்தினான்கு கண்கள், நூறு தலை கொண்டது எது?" என்று கேட்டார். அதைக்கேட்ட இளைஞன் திகைத்தான், திடுக்கிட்டான். திரு திருவென முழித்தான்: மூளையைக் கசக்கிக் கொண்டான். ஆனால் பதில் தெரிய வில்லை. எனவே, மிகுந்த அவமானத் துடன் தலையைக் குனிந்து கொண்டான். பின் தன் பையிலிருந்து ஒரு பத்து ரூபாயை எடுத்து விவசாயியிடம் கொடுத்தான்.

"அய்யா நான் தோற்றுவிட்டேன். இந்தாருங்கள் பத்து ரூபாய். இந்த விடுகதையின் விடையைச் சொல்வீர்களா?" என்று கேட்டான்.

உடனே விவசாயி அவன் கொடுத்த பத்து ரூபாயைத் தன் துண்டில் வைத்து முடிச்சுப் போட்டுக் கொண்டார்.

பின்பு ஒரு ஐந்து ரூபாயை எடுத்தார். அதை இளைஞனிடம் கொடுத்து, "தம்பி, அந்த விடுகதைக்கு எனக்கும் விடை தெரியாது. நான் தோற்று விட்டால் உனக்கு ஐந்து ரூபாய் கேட்டாயே, இந்தா காசு," என்று சொல்லி அவனிடம் கொடுத்தார். தன் காசிலேயே தனக்கு ஐந்து ரூபாய் தந்து விட்டு தானும் உட்கார்ந்த இடத்திலேயே ஐந்து ரூபாய் சம்பாதித்து விட்ட விவசாயியின் திறமையை எண்ணி இளைஞன் வியந்தான். தன் அறியாமையை மன்னிக்கும்படி வேண்டினான்.

உடனே விவசாயி, "இல்லையப்பா உன் மீது எனக்கு வருத்தம் இல்லை. படிப்பை நீங்கள் தவறாகப் பயன் படுத்துகிறீர்கள். படிப்பு பெருமைப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் வெறும் பெருமை மட்டும் பேசிக்கொண்டிருந்தால் போதாது. அனுபவ ரீதியாகவும் நாம் சில சமயம் செயற்பட வேண்டும். மற்றவர் களை மட்டம் தட்டுமுன் அவர்களின் உண்மையான திறமைகளை எடை போட வேண்டும். புரிகிறதா?" என்று கேட்டார். இளைஞன் அன்று முதல் தன் படிப்புத் திமிரை விட்டு அடக்கமான அனுபவம் தேடும் நல்ல மாணவனாகி விட்டான்.

பாப்பா முரசு

## விடுகதைகளும் விடைகளும்

1. சோற்றை கொட்டிவிட்டு பானையைச் சாப்பிடுவான். அவன் யார்?
2. நீரிலே பிறந்து நீரிலே அழிவான். அவன் யார்?
3. சாவுக்கும் உதவும். சமையலுக்கும் உதவும். அது என்ன?
4. உயர உயரப் பறப்பான். ஊசி படப் பொறுக்க மாட்டான். அவன் யார்?
5. சிகப்புப் பையுள் சில்லறைக் காசு. அது என்ன?
6. போன இரயில் திரும்பி வராது. அது என்ன?
7. வெள்ளை நிற மனிதனுக்கு கறுப்பு நிறத் தொப்பி. அது என்ன?
8. பச்ச பச்ச டாக் டாக். பால் பால் டாக் டாக். குண்டு மணி டாக் டாக். குதிரை வால் டாக் டாக். அது என்ன?
9. ஒரு இறாத்தல் மனிதனுக்கு அரை இறாத்தல் மீசை. அவன் யார்?
10. கண்ணால் பார்க்கலாம். கையால் தொட முடியாது. அது என்ன?
11. எங்கும் செல்வேன். எதையும் உரைப்பேன். என்னை உலகினில் எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். நான் யார்?
12. சிகப்பு வாசல். பச்சை வீடு. அது என்ன?
13. ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம். அது என்ன?
14. தம்பிக்கு எட்டும். ஆனால் அண்ண னுக்கு எட்டாது. அது என்ன?

1. பப்பாளிப்பழம் 2. உப்பு
3. கத்தி 4. பலூன்
5. செத்தல் மிளகாய் 6. உயிர்
7. தீக்குச்சி
8. வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு, புகையிலை
9. தும்புத்தடி 10. வானம்
11. தபால்
12. கிளி 13. உள்ளங்கை
14. நாக்கு

ம. கொன்ஸ்டெலா
புனித அன்னம்மாமகளிர் மகா வித்தியாலயம், வத்தளை.

1. வட்டக் கிணற்றிலே தீ எரிகிறது. அது என்ன?
2. மஞ்சள் நிற மங்கைக்கு ஆயிரம் படை காவல். அவள் யார்?
3. ஆயிரம் பேரை மேலே தூக்கிச் செல்வான். அவன் யார்?
4. மரத்து மேலே கூடு. கூட்டுக்குள்ளே ஆயிரம் குஞ்சு. அது என்ன?
5. சிறுக வளைந்து பெருக ஓடும்! அது எது?
6. ஒருவன் வாலை பிடித்துக்கொண்டு ஒன்பது பேர் ஓடுகிறார்கள். அவர்கள் யார்?
7. ஆயிரம் விளக்கேற்றி அண்ணாந்து பார்த்தால், பளிச்சென்று தெரியுது ஒரு விளக்கு. அது எது?
8. ஏட்டில் எழுதாத மொழி. எவரும் மகிழும் மொழி. என்ன மொழி?

1. குத்துவிளக்கு 2. நிலவு
3. விமானம் 4.தேன்கூடு
5. ஆறு 6. இரயில் பெட்டி
7. நிலவு 8. மழலை மொழி

கே.தீபதர்ஷினி
சீ.சீ தமிழ் வித்தியாலயம்
புஸ்ஸல்லாவ.

உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எழுதுங்கள். சிறந்தவை பிரசுரமாகும்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.01.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 21
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 18

பரிசுக்குரியவர்:
க. சஜனி
இந்துக் கல்லூரி
வாழைச்சேனை.

பாராட்டுக்குரியவர்கள்:

கே. சுபாசினி
ரொசாரி ரோட், நீர்கொழும்பு.

செல்வி. ஐ.எல். றுஸ்மினா
சம்மாந்துறை-03.

ரீ. தனா கௌரி
ராஜகிரிய.

வி. ஜெயந்தினி
விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு.

எம்.ரீ. ரிபானா
ஸ்ரீ சண்முகா வித்தியாலயம்,திருகோணமலை.

என். பிரசாந்தி, கண்டி.

எஸ். குருபாரன், கொழும்பு-12.

ஜே.பி. நாகதீபா
ராகல தமிழ் வித்தியாலயம் கல்கரனோயா.

வீ. கார்த்திக்
மூன்பிலேன்ஸ் தமிழ் வித்தியாலயம், நுவரெலியா.

சந்திரமோகன் வேணாட்
வாகரை.

எச். ஷர்மிளா ஹலீல்டீன்
ரீதிகம.

எம்.ஐ.எம். நுபைல்
அல் அமீன் வித்தியாலயம்
புதிய காத்தான்குடி-3.

எம்.ரீ. பாத்திமா ஸில்மியா
கொட்டியாக்கும்புர.

செல்வி சாந்த் பாலகிருஷ்ணன்
மாத்தளை.

ஆபிரிக்காவில் வாழும் தேனிப் பறவை தேனீக்களை உண்ணும் மிருகங்களைத் தேன்கூடு உள்ள இடங்களுக்கு வழி நடத்திச் செல்லும். அந்த மிருகங்கள் தேனீக்களைத் தின்றதும் கூட்டில் மீதமுள்ள தேன் முட்டை போன்றவற்றை இந்தப் பறவை தின்னும்.



## அறிவோம் மனதில் பதிவோம்




பதின்னான்காம் நூற்றாண்டிலேயே சூரியனையும், நட்சத்திரங்களையும் கொண்டு காந்தம் மூலம், செல்லும் திசையையும் தூரத்தையும் கணக்கிடும் முறையை அறிந்திருந்தனர் அக்கால மாலுமிகள்.

கொலம்பஸ் தனது சக மாலுமிகளுடன் இந்தியாவுக்கு வழி கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் சாந்தா மரியா என்ற கப்பலில் 1492ம் ஆண்டு இத்தாலியிலிருந்து புறப்பட்டார். அக்டோபர் 12ம் திகதி அமெரிக்கா கண்டம் முதன் முதலில் அவர்களது பார்வை யில் பட்டது.



உலகின் சிறந்த மாலுமியும் சரித்திரப் புகழ் பெற்றவருமான கொலம்பஸ், 15ம் நூற்றாண்டில் இத்தாலியில் பிறந்தார். ஏழ்மையில் வளர்ந்த அவர் சிறிதளவே கல்வி கற்றார். அவரது கடல் பயணங்களால் ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவுக்கும் இடையே கடல் வழிப் போக்குவரத்து ஏற்பட்டது.



1. ஆடைமேல் ஆடை போர்த்திருப்பான். அதை அகற்றினால் நம்மை அழச் செய்வான். அவன் யார்?
2. வேகாத வெய்யிலிலே வெண்ணை வைத்தேன். உருகவில்லை. ஆனால் உலர்ந்து விட்டது. அது என்ன?
3. காய்ச்சமுடியாத இரசம். குடிக்க முடியாத இரசம். அது என்ன?
4. அண்டை வீட்டில் குடியிருப்போம், அக்காள் தங்கை நாங்கள். கிட்ட இருந்தாலும் தொட்டுக்கொள்ள மாட்டோம். நாங்கள் யார்?
5. உயிரில்லை, ஊருக்குப்போவான். காலில்லை, வீட்டுக்குவருவான். வாயில்லை வார்த்தைகள் சொல்வான். அவன் யார்?
6. போட முடியும். ஆனால் எடுக்க முடியாது. அது என்ன?

1. வெங்காயம் 2. சுண்ணாம்பு
3. பாதரசம் 4. கண்கள்
5. தபால் 6. கோலம்

கே.விவிதா
தி/விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயம்
திருகோணமலை.

### மணிக்கூடு

டிக் டிக் டிக் டிக்
மணிக்கூடு
நேரம் காட்டும்
மணிக்கூடு
•
டிங் டிங் டிங் டிங்
பாட்டுப் பாடி
உழைக்கச் செல்லும்
மணிக்கூடு
•
சோம்பல் இல்லா
மணிக்கூடு
சுவரில் தொங்கும்
மணிக்கூடு.

சரீபா கன்னே
அறபா கனிஷ்ட வித்தியாலயம்
வெலிகாமம்.

# தேன் கிண்ணம்

## புத்தாண்டில் பூக்கட்டும் சமாதானம்!


தொழுதாலும் அழுதாலும்
பொழுதிங்கு விடியவில்லை!
அழுகுரல் ஓயவில்லை!
அகதிகள் குறையவில்லை!
புத்தாண்டு பிறந்ததென்று
பொங்கி மகிழ்கின்றார்!
புத்தாடை அணிந்து
பூரித்து வரவேற்கின்றார்!

பத்திரிகை எங்கும் பாடல்கள்!
பாவலர்கள் வரவேற்பாம்!
எத்தனை பேர் இலங்கையர்?
எவருமேன் காணவில்லை?
வடக்கில் வாழ்வோரை?
வாழ்த்துக்கள் யாருக்காமோ?

பூக்கட்டும் சமாதானம்
பொழுதிங்கு விடியட்டும்
திக்கெட்டும் தீந்தமிழர்
வாழ்வு சிறக்கட்டும்!
கத்துங்கள் பாடுங்கள்!
களிப்புடன் ஆடுங்கள்!
எத்திக்கும் ஒலிக்கட்டும்
எவர் வேண்டாம் என்றாரிங்கு

வாழ்த்துங்கள் போற்றுங்கள்
வர்ழ 'வழி காட்டுங்கள்!
கூத்துக்கள் கேளிக்கைகள்
கொண்டாட்டம் எமக்கும் வேண்டும்!
சாத்துங்கள் பாமாலை
சரித்திரத்தை மறக்காதீர்கள்!

-மு.வண்ணன்-




## சிகப்பாய் ஒரு நிலா

வா
அக்கம்பக்கம் பார்த்து
புகுந்துவிடு
வந்து சுகி
வேண்டிய சுகத்தை
வெட்கப்படாமல்
எடுத்துக்கொள்
குறைவாய் சொன்ன
கூலியை
குறையாமல் தா
இடையிடையே
கரு கலைப்பிற்கும்
காசு கொடு
இருட்டுடன் வந்து
இருட்டு தொலையுமுன்னே
எழுந்து போ
நாளையும் வா
நாளை மறுநாளும் வா
ஒவ்வொரு நாளும் வா
சாக்கடையுடன் சங்கமமாகு
எனக்குள் இருக்கும்
நோயை எடுத்து கொள்
உனது நோயை
எனக்கும் தா
மறக்காமல்
என்னை நினை
வாசல் தாண்டியதும்
மறந்து போ
மனைவியிடம்
பொய் பேசு
நண்பர்களிடம் நடி

குழந்தைகளுக்கு
குறள் சொல்லி கொடு
என்
கட்டிலைவிட்டு இறங்கியதும்
நீ ராமன்
ஆனால்
மரணிக்கும் வரையும்
மரணித்த பிறகும்
நான்
............?

-மட்டுநகர் எஸ்.ரோஜா-



## புத்தாண்டே நீ வர வேண்டும்!

எத்திக்கும் புத்தொளி வீச வேண்டும்!
எல்லோருக்கும் மனதில் அமைதி வேண்டும்!
பழமைகள் அடியோடு மறைய வேண்டும்!
புதுமைகள் புகழ் பூத்து ஓங்க வேண்டும்!

சாந்தி சமாதானம் நிலவ வேண்டும்!
சாதிப்பிரச்சினைகள் ஒழிய வேண்டும்!
வறுமையும் வாழ்வில் தீர வேண்டும்!
வஞ்சியர்க்கு மணவாழ்வு வரவும் வேண்டும்!

அகதிகள் என்ற நிலைமாற வேண்டும்!
அறியாமை என்ற நிலை தீர வேண்டும்!
போர் கொடிகள் மண்ணில் சரிய வேண்டும்!
பொங்கி வந்த துன்பங்கள் மறைய வேண்டும்!

ஒற்றுமையே பலமென ஓங்க வேண்டும்!
ஓரணியாய் நாமிங்கே திரள வேண்டும்!
அன்பினால் அகிலமதை ஆள வேண்டும்!
அழைக்கின்றேன் புத்தாண்டே நீ. வரவும் வேண்டும்!

ஹப்புத்தளை.எஸ்.ஜீ.மனோ.

## மீட்பர் மீண்டும் வருவாரா?

மார்கழியில் அவர் பிறந்தார்
மாசில்லாக் கன்னியிடம் அவர் பிறந்தார்

மாட்டுக் கொட்டிலில் அவர் பிறந்தார்
மானிடரை மீட்க அவர் பிறந்தார்

மாசுபட்ட உலக வாழ்வை
மாற்றிட அவர் பிறந்தார்

மாயை செய்யும் சாத்தானை வென்றிட
மானிட உருவெடுத்து அவர் பிறந்தார்

மாபரன் அவர் வந்த பின்பும்
மானிடரோ இன்னும் மாறவில்லை.

மாறாத மனித மனதை
மாற்றிட மீண்டும் அவர் வருவாரா?

திருமதி மர்லின் ராயன்-கண்டி.

## சமாதானம்

இப்பொழுதே,
நான்
பிறக்க வேண்டும்.

• • •

இறைஞ்சலில்லா
நேசிக்கும்
நெஞ்சங்களின்
கொஞ்சலில்
இப்பொழுதே-நான்
பிறக்க வேண்டும்

• • •

ஆத்தா
பால்கொடுக்க,
தாத்தா
வாரியணைக்க
ராத்தா
கொஞ்சி விளையாட
இப்பொழுதே-நான்
பிறக்க வேண்டும்.

• • •

இம்சையை
அழிக்கவந்த
அவதார புருசர்- போல்
இப்பொழுதே-நான்
பிறக்க வேண்டும்.

• • •

தீர்மானித்த
திகதிகள்
வரமறுத்தும்-வலுவாய்
இப்பொழுதே-நான்
பிறக்க வேண்டும்
-உங்களால்.

வாழையூர் ஸ்ரீவரணி.

## விலகிச் செல்லும் விடியல்...!

நினைவுகளைப்
புதைத்து
கனவுகளைத்
தொலைத்து
அமைதியைத்
தேடும்
நெஞ்சம்
விமானத்தின்
ஓசையைக்
கேட்டு
ஏங்கும்....!

••

பிணங்களைச்
சுமந்து
உயிர்களை
விதைத்து
உணர்வுகள்
கசிந்த
உள்ளம்
சமாதானத்தின்
தூரம்
கண்டு
அஞ்சும்....!

மனிதத்தை
விற்று
அன்பை
அறுவடை
செய்த
உள்ளம்
மனித
உயிர்களைத்
தேடி
அலையும்....!

••

குப்பிவிளக்கில்
கல்வி
கற்ற
நெஞ்சம்
வெட்டுப்புள்ளி
கண்டு
தவிக்கும்
விடியல்
விலகிச்
செல்லும்...!

••

-கவியுவன்
ஆரையம்பதி-



## குடிமகனே பாலென்று குருதியேன் நீ தந்தாய்?

குடிமகனே பாலென்று-உந்தன்
குருதியினைத் தந்தாய்!
படிமகனே பாடமென்று- எனக்கு
பகலிரவாய்ச் சொன்னாய்!
நடிமகனே மற்றவர் போல்-என்று
நீ சொல்லவில்லை!
பிடிமகனே வாலென்று-ஏன்
பழக்கி வைக்கவில்லை?

சரித்திரத்தைப் படித்ததனால்-தமிழன்
சங்கதியை அறிந்தேன்!
சிரித்திருந்த தமிழ்த்தாயின்-அன்றைய
சீர் சிறப்பைக் கண்டேன்!
புவியியலைப் படித்ததனால்-எங்கள்
பூர்வீகம் கண்டேன்!
கவிதையென வாழ்ந்தவரை-இன்று
கண்ணீரில் கண்டேன்!

ஏனம்மா படிப்பித்தாய்?-பாலில்
ஏன்மானம் சேர்த்தாய்?
காணாமல் போவதற்கா-என்னை
கருவறையில் வளர்த்தாய்?
ஏனம்மா தமிழின் மேல்-நீ
எனக்குயிரை வைத்தாய்?
வீணாக உன்னெதிரில்- நான்
வீழ்வதற்கா தாயே?

கவிஞர் செ.குணரத்தினம்.

## முதல் காதல்

தானாய் பாட்டு
வரும்.
கலர் கலராய்க்
கனவு வரும்.
சூடாய்
மூச்சு வரும்.
கூடச்சுடவே
கவிதை வரும்.
உறவில்
விருப்பு வரும்.
உணவில்
வெறுப்பு வரும்.
இதயத்தில்
துடிப்பு வரும்.
உதயத்தில்
சிரிப்பு வரும்.
வரும்...
எல்லாம் வரும்.
அவள் மட்டும்
வரவே மாட்டாள்!!

அழகானந்தம் அரவிந்தன்
கொழும்பு-15.

# கணவன்-மனைவி உறவு
# ஏமாற்றுவது யார்?
# கண்டு பிடிக்க சில வழிகள்

*உங்கள் கணவர் அல்லது உங்கள் மனைவி உங்களை ஏய்க்கிறார் என்ற சந்தேகம் உங்களுக்கு ஏற்படுமானால் இக்கேள்விகளுக்கு விடை காணுங்கள். இவ்வினாக்களில் மூன்றுக்கு 'ஆம்' என்று பதில் அளித்தீர்களானால், அனேகமாக உங்கள் துணைவர் அல்லது துணைவியார் உங்களை ஓரளவு ஏமாற்றி வருகிறார் என்ற உண்மை புலனாகிவிடும்.*

*இதனை நியூயோர்க்கைச் சேர்ந்த பிரபல உளவள ஆற்றுப்படுத்தல் நிபுணர் பொனி வெய்ல் தருகிறார்.*



- *உங்கள் வீட்டில் தொலைபேசி வசதி இருக்கிறது. தொலைபேசி கிணுகிணுக்கும். நீங்கள், அதனை எடுத்ததும் மறுமுனைபேச மறுத்து, 'கட்' செய்யப்படுகிறது. இது அடிக்கடி நடக்கிறதா?*
- *நீங்கள் பிரசன்னமாகியிருக்கும் போதே வேறு சிலருடன் குசு குசு என்று உங்கள் துணைவியோ துணைவரோ ஏதோ பேசுகிறாரா?*
- *நீங்கள் இருவரும் கலவியில் ஈடுபடுவது மிகவும் குறைவா?*
- *உங்களை அறியாமலே உங்கள் தொலைபேசிக் கட்டணக் கணக்கு அதிகரிக்கிறதா?*
- *உங்கள் துணைவரோ துணைவியோ அலுவலகப் பணிக்காகவென்று இரவு நேரங்களில் நேரங்கழித்து வீடு வருகிறாரா? அல்லது அலுவலகப் பணி என்று கூறிவிட்டு அடிக்கடி வெளியூர் சென்று விடுகிறாரா?*
- *காலையில் முன்னதாகவே பணிமனை சென்று காலம் தாழ்த்தித் திரும்புகிறாரா?*
- *முரட்டுத்தனமாகவும் எப்போதும் உங்களுடன் சண்டை போடவும் முற்படுகின்றாரா?*
- *வழக்கமான நடையுடை பாவனைகளை திடீரென மாற்றி புதிய மோஸ்தரில் உடைகளை அணிகிறாரா?*
- *உங்கள் துணைவி அல்லது துணைவர் முன்பெல்லாம் ஒரு நபரைப் பற்றி அடிக்கடி உங்களிடம் கூறிவந்திருப்பார். திடீரென அவ்வாறு அதே நபரைப்பற்றி அதிகமாக வாய்திறப்பதை குறைத்துக்கொண்டாரா?*
- *வீட்டிலிருக்கும் போது உங்கள் துணைவர் அல்லது துணைவி அமைதியற்றுக் காணப்படுகிறாரா?*

*இது ஒரு உளவள நிபுணரின் கருத்து மட்டுமே. முற்றிலும் சரியாக இருக்க வேண்டும் என்று நினைத்து விட வேண்டாம். பலவிசயங்களை அறிந்து கொள்ளலாம். அதற்காக மனதை அலைய விட வேண்டாம்.*

## இந்த வாரம் உங்கள் பலன்

### (26.12.93 முதல் 01.01.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

தனு - சூரியன், செவ்வாய், புதன், வெள்ளி
மகரம் - சனி
இடபம் - கேது
துலாம் - வியாழன்
விருட்சிகம் - இராகு

1994-புத்தாண்டு கன்னி இலக்கினம், கற்கடக இராசியில், ஆயிலியம் நட்சத்திரத்தில் பிறக்கின்றது.
இடபம், மிதுனம் கர்க்கடகம் இராசிகளில் சந்திரன் சஞ்சரிப்பார்

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர்கள் உதவி, கௌரவம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | நடைக்கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பயணத்தடை, வீண் முயற்சி | பகல் 12 மணி |
| புதன்- | துயர் நீங்கும், காரிய சித்தி. | காலை 10 மணி |
| வியாழன்- | பணக் கஷ்டம், புதிய முயற்சி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | கௌரவம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- | பயணங்களில் வெற்றி, சுபகாரிய மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், சுபகாரிய நன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், பயணங்களில் வெற்றி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சினேகம், மனக்குறை. | காலை 10 மணி |
| புதன்- | எடுத்த காரியத் தடை, வீண் செலவு. | பி.ப 4 மணி |
| வியாழன்- | வாக்கு வசீகரம், துணிவு மிகுதி. | காலை 10 மணி |
| வெள்ளி- | மன மகிழ்ச்சி, பணவரவு. | காலை 7 மணி |
| சனி- | செய்தொழில் நன்மை, கௌரவம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்- 4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் நஷ்டம், பணவிரயம். | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் கலக்கம், நண்பர்களால் உதவி. | காலை 10 மணி |
| புதன்- | எடுத்த காரியம் சித்தி, மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், செய்தொழில் வெற்றி. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | மனக்குறை நீங்கும், நடைக்கஷ்டம். | காலை 10 மணி |
| சனி- | அந்நியர் உதவி, பணவரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பணச்செலவு. | காலை 10 மணி |
| திங்களா- | தேகசுகம் பாதிப்பு, கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் பகை, வீண் முயற்சி. | பகல் 11 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், தடைகள் நீங்கும். | பி.ப 2 மணி |
| வியாழன்- | உறவினர் பகை, ஊதாரித் தனம். | காலை 10 மணி |
| வெள்ளி- | மனமகிழ்ச்சி, செய்தொழில் நன்மை. | பகல் 12 மணி |
| சனி- | பெரியோர் சகவாசம், காரிய சித்தி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கலக்கம், வீண் முயற்சி. | பி.ப 1 மணி |
| திங்கள்- | கௌரவம், தேகசுகக் குறைவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | எடுத்த கருமம் வெற்றி, பணக்கஷ்டம். | பி.ப 4 மணி |
| புதன்- | பெரியோர் சகவாசம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், சிறந்த வாழ்க்கை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தனலாபம், கௌரவக் குறைவு. | பி.ப 2 மணி |
| சனி- | செலவு மிகுதி, குடும்பக் கஷ்டம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண் வாக்குவாதம், மனக் குறை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | மனத் தெளிவு, நடைக்கஷ்டம். | பி.ப 1 மணி |
| புதன்- | வீண் கவலையொழிதல், தனலாபம். | காலை 10 மணி |
| வியாழன்- | அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, கௌரவம். | காலை 10 மணி |
| சனி- | தெளிவற்ற நிலை, மனஅமைதி குன்றல். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | நீடித்த நோய், பணச் செலவு | காலை 8 மணி |
| திங்கள்- | கீர்த்தி, செலவு கட்டுக்கடங்கல். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயமிகுதி, உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| புதன்- | நினைத்த காரியம் வெற்றி, மகிழ்ச்சி நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- | பயணங்களில் வெற்றி, செலவு அதிகம். | காலை 9 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், பெரியோர் சகவாசம். | பகல் 12 மணி |
| சனி- | நம்பிக்கையிழப்பு, வீண் கவலை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, மனக்குறை கேட்டல். | பி.ப 1 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, மகிழ்ச்சி நிலை. | காலை 8 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | வீண் தடைகள், காரியங்களில் குழப்ப நிலை. | காலை 7 மணி |
| வியாழன்- | நடைக்கஷ்டம், கீர்த்தி நிலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பணக் கஷ்டம், மனக்குறை. | பி.ப 2 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, தெய்வ நம்பிக்கை. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் வருகை, செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நட்பு, தேகாரோக்கியக் குறைவு. | பகல் 12 மணி |
| புதன்- | செய்தொழில் விருத்தி, இனசன உதவி. | காலை 10 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தனலாபம், குடும்ப நன்மை. | காலை 9 மணி |
| சனி- | உயர்ந்த நிலை, குடும்ப சுகம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -9

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், குடும்ப சுகம். | பகல் 12 மணி |
| திங்கள்- | கௌரவம், இனசனக் கொண்டாட்டம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | தூர இடப் பயணம், மனக்கலக்கம். | பி.ப 2 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, வீண் குறை கேட்டல். | காலை 9 மணி |
| வியாழன்- | பயணங்களில் இழப்பு, கவலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், பயணம். | காலை 9 மணி |
| சனி- | துயர் அதிகம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வாக்கு வசீகரம், பொருள் பேறு. | காலை 10 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், எண்ணங்கள் வெற்றி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பகை அதிகம், கௌரவக் குறைவு. | காலை 8 மணி |
| புதன்- | செய்தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், கஷ்டம் நீங்கும். | பகல் 1 மணி |
| சனி- | செலவு மிகுதி, பெரியோர் உதவி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனவிருத்தி, காரிய சித்தி. | காலை 9 மணி |
| திங்கள்- | விருந்தினர் வருகை, சுகமிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மகிழ்ச்சி நிலை. | காலை 9 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, வாக்குக் கலகம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | பெரியோர் குறைகேட்டல், அரசவிரோதம். | காலை 7 மணி |
| வெள்ளி- | தெய்வ நம்பிக்கை, மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| சனி- | விருந்துபசாரம், ஆடம்பரச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 5

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ ✚ விந்தைகள்

## நச்சுக் கழிவுகளால் நாசமாகும் குழந்தைகள்

## தொழில்மய நாடுகளில் உருக்குலையும் பிஞ்சுகள்!



**தொ**ழில் மயமாகி வரும் நாடுகளில் கழிவுப் பொருட்களும் அதிகரித்து வருகின்றன. முக்கியமாக கடந்த பல ஆண்டுகளாக யுத்தம் தொடர்பான நவீன கருவிகள் உற்பத்தி பெருகியமையினால், அக்கருவிகளை உருவாக்கப் பயன்படுத் தப்படும் பொருட்களிலிருந்து பெறப்படும் கழிவுகள் மனித இனத்துக்கே பெரும் அபாயத்தை ஏற்படுத்துகின்றன.


இப்பக்கத்தில் காணப்படும் படங்கள் உருக்குலைந்து பிறந்த குழந்தைகளுடையவை.

லட்டீவியா என்ற நாடு 50 ஆண்டுகளுக்கு மேலாக சோவியத் யூனியனின் ஓர் அங்கமாக விளங்கியது. இக்கால கட்டத்தில் இங்கு ஏவுகணைகள், ராடர்கருவிகள் கொண்ட நிலையங்கள் ஆகியவை ஏராளமாக உருவாக்கப்பட்டன. அத்துடன் பல்லாயிரக்கணக்கான தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் கதிரியக்கம் கொண்ட நச்சுக் கழிவுப் பதார்த்தங்கள் மலிந்தன. நீர் நிலைகளும் நச்சுத்தன்மை பெற்றன.

இத்தகைய மாசுகளினால் தாக்கப்பட்ட குடிமக்கள் பலதரப்பட்ட கொடுமையான நோய்களுக்கு இடம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தங்களுக்குள்ளாகின்றனர். புற்று நோய் மிகவும் வேகமாகப் பரவும் நோயாகவும் உள்ளது. இவையெல்லாவற்றையும் விட மிகப் பரிதாபகரமாக இருப்பது, கருவிலிருக்கும் குழந்தைகளே பெரும் பாதிப்புக்குள்ளாக்கப் படுவதுதான். கருவிலிருக்கும் குழந்தைகளை கதிர்வீச்சுத் தாக்குவதனால் அந்நாட்டில் பிறக்கும் மூன்று குழந்தைகளில் ஒன்று உருக்குலைந்தே பிறக்கிறது.

இவ்வாறு கைகால் சூம்பியும் விகார்மான முகத்துடனும் பயங்கர உருவுடன் பிறக்கும் குழந்தைகள் பெரும்பாலும் அதிக காலம் உயிர்வாழ்வதில்லை. வாழும் குழந்தைகளும் ஏனையோர் கண்களில் படாமல் மறைத்து வைத்து வளர்க்கப்படவேண்டிய நிலையில் உள்ளன.

பால்டிக் குடியரசுகளில் ஒன்றான லட்டீவியாவுக்கு, அண்மையில் தற்காப்புக்கலையான கராட்டி-யைப் பயிற்றுவிக்கச் சென்ற பிரிட்டிஷ் கராட்டி வீரர் லீ ஸ்மித் என்பவர், அந்நாட்டிலுள்ள நச்சுக்கதிர் வீச்சினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை வைத்து எடுக்கப்பட்ட வீடியோ படம் ஒன்றை தன்னுடன் கொண்டு வந்துள்ளார். இதுகாலவரை வெளியுலகுக்குத் தெரியாமலிருந்த இந்த இரகசியத் தகவல்கள் இந்த வீடியோ படம் மூலம் வெளி உலகுக்கு எட்டியுள்ளது.



## செய்ய வேண்டும் சிரசாசனம்!
## ஆயுள் உறுதிக்கு அதுவே உத்தரவாதம்!!



**யோ**காசனப் பயிற்சி நீண்ட நெடுங்காலமாக இந்தியாவுக்கும் இந்து தர்மத்துக்குமே சொந்தம் என்று கருதப்பட்டது. இன்று உலகம் முழுவதும் யோகாசனப் பயிற்சிகளும் தியானமும் பொதுச் சொத்துக்களாகிவிட்டன. மதம், நாடு என்ற குறுகிய வரையறைகளும் வரம்புகளும் நீங்கிய நிலையில் எங்கும் பரந்து மனித சமுதாயம் முழுமைக்குமே பயனளித்து வருகின்றன.

சிரசாசனம் இப்பொழுது சீனாவில் வெகுவேகமாகப் பரவி வருகிறது. அங்கு மிகப் புராதன காலந்தொட்டு பலதரப்பட்ட சுதேச வைத்திய முறைகள் மிகக் கொடிய நோய்களையே குணப்படுத்தவல்லன என்று கூறப்படுகிறது. 'அக்குபஞ்சர்' என்ற ஊசி குத்தும் முறையும் மிக நூதனமானதும் பலதரப்பட்ட நோய்களைக் குணப்படுத்தும் சக்திவாய்ந்தது என்பதும் உலகம் அறிந்ததே.

அவ்வாறிருந்தும் இப்பொழுது யோகாசனப் பயிற்சி மூலம், தீர்க்க முடியாத பல நோய்களையும் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை நாடு முழுவதும் பரவி வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

வு ஃபெங் என்பவருக்கு இப்பொழுது 65 வயதாகிறது. சீனாவில் அரச ஊழியராக இருந்து தனது 55வது வயதில் ஓய்வு பெற்றார். ஆனால் இவரை தீராத வயிற்று நோ ஓயாது வாட்ட ஆரம்பித்தது. 50வது வயதில் ஆரம்பித்த வயிற்று நோவுக்கான காரணம் எதையும் எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. எல்லா விதமான மருத்துவ முறைகளையும் செய்துபார்த்தும் நோய் குணமாகவேயில்லை. இறுதியில் தான் சிரசாசனம் செய்யும் முறையினை வு ஃபேங் துவங்கினார். சில வாரங்களிலேயே பூரணகுணமடைந்து விட்டார். இதிலிருந்து சிரசாசனத்தின் மகிமையைப் பற்றிப் பிரசாரம் செய்வதிலேயே தனது பொழுதைக் கழித்து வருகிறார்.

தொடர்ந்து 3 மணி நேரம் சிரசாசனம் செய்து சாதனையும் படைத்துள்ள வு ஃபங் தனது அனுபவத்தை ஒரு நூல் வடிவில் எழுதி வருகிறார்.

"சிரசாசனம் செய்யும் போது இரத்த ஓட்டம் அதிகரிப்பதுடன் இரத்த நாளங்களில் அடைப்புக்களோ வேறு சிக்கல்களோ இருந்தால் அவை அகற்றப்படுகின்றன. அத்துடன் மூளைக்கும் இரத்தம் போதிய அளவு செல்வதனால் சகலவிதமான நோய்களும் அகன்றுவிடுகின்றன. இதனால் சுகதேகியாக நீண்ட ஆயுளுடன் வாழ முடிகிறது" என்று வு ஃபெங் கூறுகிறார். ●


## அதிக காரமா? பெண்களுக்குப் பிடிக்கும்!

**மி**ளகு மற்றும் மிளகாய் சேர்ந்த கார உணவுகளை ஆண்களை விட பெண்களே அதிகம் விரும்புகின்றனர். பெண்கள் எப்போதும் குளர்ச்சியையே விரும்புகிறவர்கள் என்பதனால் கார உணவின் தாக்கத்தை மிகச் சுலபமாக ஏற்கும் தன்மை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.



இங்கிலாந்து, சசெக்ஸ் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் இக்கருத்து வெளியிடப்பட்டது. 32 பேரை வைத்து இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. இதில் கலந்து கொண்டவர்களில் பாதிப்பேர் பெண்கள். ஓரளவு அதிகமான காரம் கலந்த உணவு வகைகள் இருசாராருக்கும் கொடுக்கப்பட்டது. இவ்வுணவுகளை ஆண்களை விட பெண்களே விரும்பி சுவைத்து உண்டனர் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

காரம் உண்ட பின்னர் இரு தரப்பினருடைய உடலில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆராயப்பட்டன. இதன்படி ஆண்களின் உடலில் சில மாற்றங்கள் தென்பட்டுள்ளன. அதே வேளை பெண்களின் உடலில் காரம் எந்தவித மாற்றத்தினையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை என்று கூறப்படுகிறது. ■



## புதுமைத் தொடர்






### அத்தியாயம்—26

டி.ஐ.ஜி டென்சில் முன்னே நடந்துவர அவர் பின்னால் கிரனைட் கைக்குண்டோடு அவன் வந்துகொண்டிருந்தான்.

ஹோலின் கதவைத் தாண்டிய போது டி.ஐ.ஜி டென்சிலின் விழிகள் இருபுறமும் அலைந்தன.

அந்த விழிகளில் பட்டார் குலாம்ஷா. குலாம்ஷாவை கண்டதில் டென்சில் சந்தோசமானார். மறு நொடியே அதிர்ச்சியு மானார்.

குலாம்ஷாவின் முரட்டுத்துணிச்சல் டென்சிலுக்குத் தெரியும். எனவே குலாம்ஷா அவசரப்படப் போகிறாரோ என்று டென்சில் பயந்தார்.

பயந்தபடியே ஹோலின் கதவு தாண்டினார்.

அவனும் பின்னால் வந்து கதவு தாண்டி வெளியே கால்கள் தூக்கி வைத்தான்.

கண் இமைக்கும் நேரத்தில் குலாம்ஷா அவனை அளவெடுத்தார்.

அவன் இடது கரத்தில் கிரனைட்டை வைத்திருந்தான். குலாம்ஷாவும் இடது புறமாய் நின்றதால் அது வசதியாக இருந்தது.

அளவெடுத்து முடித்து ஒரே பாய்ச்சலாய் அவன் மீது தாவினார்.

எதிர்பாராத தாக்குதலில் எதிரி நிலை குலைந்து நிதானிப்பதற்குள், குலாம்ஷாவால் பின்புறமாய் சரிக்கப்பட்டு தரையில் விழுந்தான்.

அவன் கரத்தில் இருந்த கிரனைட் மீது தன் வயிறு படும்படியாக குலாம்ஷா விழுந்தார்.

இப்போது கிரனைட் வெடித்தால் குலாம்ஷா சிதறிப் போவார்.

அருகில் இருப்போர் தப்பிக் கொள்ளலாம். டி.ஐ.ஜி டென்சில், தன்னை மறந்து,

"ஐயோ குலாம்ஷா" என்று அதிர்ந்து கூவி ஓடி வர,

"கிட்ட வரவேண்டாம் டி.ஐ.ஜி" என்று கத்தினார் குலாம்ஷா.

டி.ஐ.ஜி கேட்கவில்லை. தனக்காக தன் உயிர் நண்பன் பிரிதலை சகிக்க முடியவில்லை.

குலாம்ஷா ஆச்சரியமானார்.

'இன்னும் ஏன் வெடிக்கவில்லை? ஒரு வேளை அவன் இன்னும் பிடியை விலக்கவில்லையோ' என்று நினைக்க,

குலாம்ஷாவின் வயிற்றின் அடியில் கிரனைட்டோடு சேர்த்து அழுத்தி அமுக்கப் பட்ட தன் கரத்தை அவன் விடுவித்துக் கொண்டான்.

தரையில் இருந்து துள்ளி எழுந்து ஓட முயல,

டுமீல், டுமீல்.....

இன்ஸ்பெக்டர் அரவிந்த் வைத்த குறி தவறவில்லை.

பின்னங்கால்கள் இரண்டிலும் ஒவ்வொரு தோட்டா.

அப்படியே குப்புற விழுந்தான்.

குலாம்ஷா வயிற்றின் அடியில் கிடந்த கிரனைட்டை கவனமாய் எடுத்துப் பார்க்க,

அது போலி என்று புரிந்தது.

"சே...மிரட்டியிருக்கிறான். ஏமாற்றியிருக்கிறான். என்றாலும் துணிச்சலாய் நடந்து, உண்மை போல் நடித்து.... புத்திசாலிதான்."

குலாம்ஷா எழுந்த போது டி.ஐ.ஜியின் இறுக்கமான அணைப்பில் சிக்கிக் கொண்டார்.

டென்சிலின் கண்களில் இருந்து வடிந்த கண்ணீர் குலாம்ஷாவின் தோளில் விழுந்து நனைத்தது.

பொலிஸ்துறையில் டென்சில் டி.ஐ.ஜி, குலாம்ஷா இன்ஸ்பெக்டர். பதவியின் ஏற்றத் தாழ்வுகள் பள்ளி நாட்களில் கூடித்திரிந்து, உள்ளம் புரிந்து இணைந்த நட்பை முனையளவும் முறிக்கவில்லை. பொறுப்புக்கள் பரஸ்பரம் மதிக்கப்பட்டன. திறமைகள் பரஸ்பரம் பாராட்டப்பட்டன. நண்பன் உயர்தலில் குலாம்ஷா மகிழ்ந்தார். தன் நண்பன் இன்னும் உயர வேண்டும் என்று டென்சில் நினைத்தார். நல்ல நட்புக்குள் பொறாமை மூக்கை நுளைக்க முடியாது.

"குலாம்ஷா உன் துணிச்சல் வியக்க வைக்கிறது. எங்கே அது உன்னை என்னிடமிருந்து பிரித்துவிடுமோ என்று கலங்கவும் வைக்கிறது. ஃபிளீஸ் குறைத்துக்கொள். துடிப்பு இருக்கலாம். அதற்காக கண்ணை மூடிக்கொண்டு..."

"உபதேசம் ஆரம்பமாக்கும்! எதையும் இங்கே வாங்கலாம் டென்-ஆனால் உண்மை அன்பை, நட்பை எந்த விலை கொடுத்தும் வாங்கமுடியாது. தன்னலம் பெரிதாகிவரும் உல்கில் வலைபோட்டு தேடினாலும் அது கிடைக்காது. நீ எனக்கு கிடைத்தது மாபெரும் அதிசயம். அதிசயம் அடிக்கடி நிகழ்வதில்லை."

டென்சில் குலாம்ஷாவின் முகம் பார்த்தார். பிரமிப்பாய் பார்த்தார்.

சந்தித்த விழிகளில் நட்பின் நெகிழ்ச்சியில் கசிந்தது ஈரம்.

கால்களில் சுடப்பட்டு விழுந்தவன் முனகிக் கொண்டிருந்தான்.

டென்சிலின் அணைப்பில் இருந்து விடுபட்டு அவன் அருகே சென்று குனிந்து குலாம்ஷா கேட்டார்,

"என்ன பிரதர் வலி பலமாய் இருக்கிறதா? இருக்கட்டும் யார் நீ..?"

"தண்ணீர்...தண்ணீர்..?

"பதில் சொல்லும் வரை பச்சைத் தண்ணீர் கிடையாது பிரதர். சொல்லடா யார் நீ?"

எதிரியின் மீது குலாம்ஷா இரக்கம் காட்டுவதில்லை. அப்படி இரக்கம் காட்டுவதே அவர்களுக்கு ஒரு பலமாகி விடும் என்று நினைப்பவர் குலாம்ஷா.

டென்சிலும், இன்ஸ்பெக்டர்களும் குலாம்ஷாவையும், அவனையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் பதில் சொல்லத் தயங்கினான். குலாம்ஷா எரிச்சல்பட்டார்.

"பிரதர் ஏற்கனவே வலியில் துடிக்கிறாய். இன்னும் வலிக்கப் போகிறது. குலாம்ஷாவைப் பற்றி நீ கேள்விப்பட்டதில்லையா பிரதர்?"

பெயர் சொன்னதும் அவன் விழிகளில் இருந்த வலி போய் மிரட்சி தெரிந்தது..

"சொ...சொல்கிறே...ன்"

"சொ..சொ...சொல்லித் தொலையடா" உறுமினார்.

"நான்...வில்பிறட்."

"நல்லது. யார் கண்ணா உன்னை இங்கே அனுப்பியது?"

மீண்டும் தயங்கினான். குலாம்ஷா அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். பொறி கலங்கியது.

"லால்...பி.எம்.லால்."

"இதை அப்பவே சொல்லியிருக்கலாம் நீ. "சிலருக்கு பட்டால்தானடா புத்தியே வருகிறது. எங்கே இருக்கிறான். பொய் உதவாது. பின்னர் உதையின் உதவியை நான் நாடவேண்டி......."

குலாம்ஷா சொல்லி முடிப்பதற்குள் அவன் பதறிக்கொண்டு பதில் சொன்னான். தெளிவாய் முகவரி சொன்னான்.

"அது போதும்" குலாம்ஷா உற்சாகமாய் எழுந்தார். டி.ஐ.ஜி நோக்கி சல்யூட் ஒன்றை வழங்கிவிட்டு,

"தாமதித்தால் எதிரிகள் தப்பிவிடுவார்கள். சோ. விரைவாக வளைக்க வேண்டும். நானே போகிறேன். உத்தரவு தாருங்கள் டி.ஐ.ஜி."

டி.ஐ.ஜி யோசித்தார். பின்னர் இன்ஸ்பெக்டர் அரவிந்திடம்,

"இவனை பாதுகாப்பாய் கொண்டு சென்று சிகிச்சையளிக்க வேண்டும். நீங்களே அழைத்துச் செல்லுங்கள். எமக்குப் பிரயோசன மானவன் என்பதால் எதிரிகள் இவனை உபயோகமில்லாமல் செய்ய முயல்வார்கள். அதனால் மிக ஜாக்கிரதை"

உத்தரவிட்டு, பின் குலாம்ஷாவைப் பார்த்து,

"லால் மட்டும் மடக்கப்பட்டால் போதாது ஷா. இத்தோடு குற்ற உலகே அழிக்கப்படவேண்டும்."

"அழியும். அழிக்கப்படும். எனக்கு மட்டும் சில சுதந்திரங்கள் கொடுங்கள் டி.ஐ.ஜி. அது போதும்."

குலாம்ஷாவின் தோளில் தட்டிவிட்டு, டி.ஐ.ஜி சிரித்தார்.

"முதலில் இவனைத் தெளிவாக விசாரிக்க வேண்டும் குலாம்ஷா. சிகிச்சை முடிந்து வந்ததும் உங்கள் தனிப் பொறுப்பில் எடுத்து இன்று இரவு முடிவதற்குள் விசாரணையை முடியுங்கள். பின் விபரத்தோடு என்னை சந்தியுங்கள். என்ன செய்வது எப்படிச் செய்வது என்று முடிவு செய்யலாம்."

"ஓ.கே. டி.ஐ.ஜி. உங்கள் விருப்பம்."

இன்ஸ்பெக்டர் ரஞ்சித் டி.ஐ.ஜியை நோக்கி ஓடி வந்தார்.

"என்ன ரஞ்சித் உள்ளே இருந்த மதுமிதாவைக் காணவில்லையா?"

டி.ஐ.ஜி கேட்க ரஞ்சித் முகத்தில் திகைப்பு வந்து ஆக்கிரமித்தது.

"என்ன, வெளியே நின்ற எனக்கு அவள் உள்ளேயிருந்து காணாமல் போனது எப்படித் தெரியும் என்று யோசிக்கிறீர்கள். அப்படித்தானே ரஞ்சித்?"

ஆம் என்பது போல ரஞ்சித் டி.ஐ.ஜியின் முகம் பார்க்க, அவர் சிரித்தார். சத்தம் போட்டு சிரித்தார். பின்னர் குலாம்ஷாவைப் பார்த்து,

"குலாம்ஷா உங்களுக்கு ஏதாவது உடனே செய்ய வேண்டும் போல் எப்போதும் ஒரு துடிப்பு. இப்போதும் அந்தத் துடிப்பு இருக்கும். ஒரு முக்கிய வேலை இருக்கிறது. செய்வீர்களா?"

"சொல்லுங்கள் டி.ஐ.ஜி!"

"இதோ நிற்கிறார் பாருங்கள் இன்ஸ்பெக்டர் ரஞ்சித் இவரை.."

"இவரை...."

"கைது செய்யுங்கள்!"

■

தெருவில் இருந்து வந்து சரிந்த வானில் இருந்து இரத்தம் வடிந்தபடி இருக்க, வானைச் சுற்றி கூட்டம் திரண்டது. உள்ளே போலி மதுமிதாவுக்கு மட்டும் உயிர் இருந்தது.

தனபால் இரத்தத்தில் பிணமாய் கிடந்தார். சாரதி ஆசனத்தில் இருந்தபடி கழுத்தில் கண்ணாடித் துண்டு ஒன்று செருகப்பட்டிருக்க பாபு உயிர் விட்டிருந்தான்.

கூடி நின்ற கூட்டத்தால் மதுமிதா வெளியே இழுத்தெடுக்கப்பட்டாள். நெற்றியில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

'பொலிஸ் வரும். மாட்டப்போகிறோம். தப்ப வேண்டும்' போலி மதுமிதா மனதுக்குள் அவசரமானாள். கூட்டத்தில் நின்றவர்களை நோக்கினாள்.

"இந்தப் பெண்ணை நான் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்கிறேன்."

கூட்டத்தில் நின்ற நடுத்தர வயதுக்காரர் தானே முன்வந்து உதவிக்கரம் நீட்டினார். கூட்டம் வழிவிட்டு விலகி அழகான அவள் முகத்தில் வடிந்திருந்த இரத்தத்தை அனுதாபத்தோடு பார்த்தது.

அவர் தன் கறுப்பு நிற பியட்டின் பின் கதவு திறந்து,

"ஏறம்மா" என்றார்.

ஏறினாள். கதவு சாத்திவிட்டு, முன்னால் சென்று சாரதி ஆசனத்தில் அமர்ந்தவர் ஒரு துணி எடுத்து நீட்டினார்.

"இந்தா கட்டுப்போட்டுக்கொள்."

"தாங்யூ வெரிமச்"

கார் புறப்பட்டது.

கார் சிறிது தூரம் சென்றதும் நடுத்தர வயதுக்காரர் மெல்லச் சிரித்தார்.

"அடி பலமோ மது?"

போலி மதுமிதா திகைத்துப் போனாள்.

"என்னை உங்களுக்கு.."

"தெரியுமா? எப்படித் தெரியும்? யார் நீங்கள்? என்றெல்லாம் கேட்கப்போகிறாய். சொல்கிறேன்."

சொன்னார். போலி மதுமிதா திகைத்துப் போய் இருக்க,

அவர் தான் அணிந்திருந்த மீசையை அகற்றினார். கண்களில் அணிந்திருந்த கண்ணாடியைக் கழற்றினார்.

போலி மதுமிதா பின்சீற்றில் அதிர்ச்சியில் உறைந்து போய் இருந்தாள்.

■

பஸ்டின் சொன்ன பதில் நந்தகோபாலை தலைகீழாய் தூக்கித் தரையில் அடித்தது போல இருந்தது.

பஸ்டின் நிதானமாய் பேசினான்.

"என்னப்பா நந்தகோபால்! அதிர்ச்சி வைத்தியம் போல் இருக்கிறதா? சத்தியமாய் என் தந்தை வைத்திலிங்கம்தான். நீயும் தனபாலும் சேர்ந்து அவரைக் கொன்று விட்டீர்கள். குடும்ப டாக்டராக இருந்து, நண்பனாய் நடித்து அவர் முதுகில் குத்திய துரோகி நீ."

நந்தகோபால் சிலையானார்.

"பிளாஸ்டிக் சேர்ஜரி மூலம் தனபாலை வைத்திலிங்கம் ஆக்கி நாடகம் ஆடினீர்கள். தனபால் உன்னையும் ஏமாற்றிவிட நினைக்க அவனையும் முடித்துவிடத் திட்டம் தீட்டினாய்."

நந்தகோபாலுக்கு தரை நழுவிப்போவது போல இருந்தது. தலை சுற்றியது.

'ஒரு மகன் இருக்கிறான் என்று தெரியும். அவன் பன்னிரண்டு வயதில் காணாமல் போய், வைத்திலிங்கம் பணத்தைக் கொட்டி தேடியும் கிடைக்காமல் போய்... அவனா இவன்...?'

"என்ன யோசிக்கிறாய் நந்தகோபால்? உங்கள் நாடகங்கள் எல்லாமே எனக்குத் தெரியும். சொன்னது யார் தெரியுமா நந்தகோபால்?"

யார் என்பதாய் அவனைப் பார்த்தார் நந்தகோபால்.

"சொன்னால் ஆச்சரியப்படுவாய். நான் அர்ச்சுனன் அவர் கண்ணன். ஆனால் ஒன்று, இந்த அர்ச்சுனன் களத்தில் நின்று யோசிப்பவன் அல்ல. ஏன் தெரியுமோ? எதிரே நிற்பது சகோதரர்களுமல்ல. சமூகத்துக்கு உபயோகமானவர்களும் அல்ல."

தன்னை இனிக் காப்பாற்ற முடியாது என்று நந்தகோபால் புரிந்து கொண்டார். மடிவதற்கு முன் பஸ்டினுக்கு பின்பலம் யார் என்று அறியும் ஆவல் எழுந்தது. கேட்டார்.

"யார் அந்த கண்ணன்?"

■

பி.எம்.லால் நல்ல போதையில் இருந்தான்.

போதை உள்ளே போனால் அவனுக்கு ஒரு பெண் வேண்டும். பெண் இருந்தாள்.

அவன் தேவை புரிந்து அவன் வெற்று மார்பில் தன் இதழ்களால் ஒத்தடம் கொடுத்தபடி இருந்தாள்.

லாலுக்கு சுகமாய் இருந்தது. இதழ்கள் மார்பில் புரள்கையில் இதமாக இருந்தது. அவளின் தலைமுடியை தன் கரத்தால் கோதிவிட்டபடியே பேசினான்.

"சுஜி உனக்கு விசயம் தெரியுமா? எனக்குப் போட்டியாக வந்த சந்தோஷ் மடிந்துவிட்டான். தனபால் இந்த நேரம் இங்கே கொண்டுவரப்பட்டுக் கொண்டிருப்பான். நினைத்ததெல்லாம் வெற்றி."

உரத்துக் கூவினான். அவள் அவனை மேலும் சந்தோசப்படுத்த தன் இதழ்களை அவன் மார்பில் பொருத்தி தன் நாவால் மெல்லிய ஈரம் காட்டினாள்.

"சுஜி! போதும் மேலே வா" என்று அவளை வாரி இழுத்து தன் மேல் போர்வை போல இறுக்கிக் கொண்டான்.

அவன் மேலே முழுதாய் கவிழ்ந்து நெற்றியில் முத்தமிட்டபடி சுஜி கேட்டாள்,

"ரம்யா உங்களைப்பற்றிய விபரங்களை சொல்லமாட்டாள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?"

லால் சிரித்தான்.

"ரம்யாவை கொல்ல ஆள் ஏற்பாடு செய்துவிட்டேன் சுஜி. இந்த நேரம் ரம்யா செத்திருப்பாள்."

உறுதியாகச் சொன்னான்.

"காவல் பலமாய் இருக்குமே."

"ஆள் உள்ளேயே இருப்பதால் காவல் தடுக்காது சுஜி. இப்போது உன் அழுகுகளுக்கு போட்டுள்ள காவல்கள்தான் எனக்குத் தடை."

சொல்லியபடியே தடைகள் விலக்கினான்.

தடைகள் விலக அழகுப் பிரதேசங்களில் ஆரம்பமானது ஒரு படையெடுப்பு.

■

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: பி. வேல்முருகா
வயது: 22
முகவரி: 85/3, வென்றோயன் வீதி,
கொழும்பு-13.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, புத்தகம்.



பெயர்: பி. ஜெனிபர் பிலிஷியா
வயது: 21
முகவரி: 127/4, எம்.டீ. இல.2,
நுவரெலியா.
பொழுதுபோக்கு: வானொலி, டி.வி., புத்தகம், பேனா நண்பர் தொடர்பு.



பெயர்: எம்.ஏ.எம். சாலிம்
வயது: 23
முகவரி: 97ஏ, வஹுங்கொஹ,
ஹந்தஸ்ஸ, கண்டி.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நாவல், சினிமா, வானொலி, டி.வி.



பெயர்: எஸ்.எச். அஸீஸ்
முகவரி: P.O.BOX-51509
AL-RIKKAH 53456
KUWAIT.
பொழுதுபோக்கு: ரீ.வி.பார்த்தல், கரம், பத்திரிகை.

பெயர்: க. மகேந்திரன்
வயது: 33
முகவரி: 'ராஜா வாசம்'
மருத்துவர் வீதி,
அக்கரைப்பற்று-08.
பொழுதுபோக்கு: பேனா நண்பர் தொடர்பு, சினிமா, தொலைக் காட்சி.

பெயர்: ராசு ராஜலட்சுமி
வயது: 16
முகவரி: தங்கமலை எஸ்டேட்,
சார்னியா குறூப்,
பதுளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: எம்.எச். சாலிம்
வயது: 24
முகவரி: ஏ.பி. லிமிட்டட்,
667, கொட்டாவ வீதி, தலவத்து கொட, பத்தரமுல்லை.
பொழுதுபோக்கு: சஞ்சிகைகள் படித்தல், பாடல்கள் கேட்டல், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: எம்.ஐ. ஹிதாயா
வயது: 22
முகவரி: 353, ஷைலான் வீதி
கல்முனைக்குடி
கல்முனை-4.
பொழுதுபோக்கு: பேனா நண்பர் தொடர்பு, பத்திரிகை வாசித்தல்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

குறுங்கதை

# சூழ்நிலைக் கைதிகள்



-மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்-

குழந்தை ரம்யா அழுது கொண்டிருந்தாள்.

-பாவமாய் இருந்தது.

தேவகி அந்த 'லக்டோஜன்' வெற்றுப் பெட்டியை எடுத்துப் பார்த்தாள். 'ச்சே... பால்மாவும் முடிந்து விட்டதே...!' பெட்டியைத் தூரமாய் எறிந்தாள். அது 'தொப்' என்ற சின்ன ஓசையுடன் எங்கேயோ போய் விழுந்தது.

'டாக்டர் ஸேய்ஸ்....பிரெஸ்ட் ஃபீடிங் ஈஸ் பெஸ்ட்'

'தாய்ப்பாலே மிகச் சிறந்த குழந்தையுணவு என வைத்தியர்கள் கூறுகிறார்கள்.' அந்தப் பெட்டி வாசகங்களில் தேவகி எதையோ சோகமாய் உணர்ந்தாள்.

தன் உதிரத்தையே பாலாக ஆக்கித் தாய்ப்பால் கொடுக்கலாமென்றால்.... மார்பிலும்பால் சுரக்கவில்லையே....அவளும் திருப்தியாய் சாப்பிட்டு நான்கு நாளாச்சு. தண்ணீர்.... தண்ணீர்.... தண்ணீர் என்றே பசியெடுக்கும் நேரமெல்லாம் வயிற்றுக்குள் வார்த்து, எத்தனை நாளைக்குத்தான் தன் மார்பில் பாலெடுப்பது? குழந்தைக்கு அது தெரியுமா? குழந்தை பரிதாபமாய் அழுதுகொண்டேயிருந்தது.

தேவகியின் மனம் கசந்தது.

கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

சக்தியில்லாமல்..... உடம்பும் தள்ளாடியது.

'குழந்தையும் எத்தனை மணி நேரம்தான் அழும்....பசியின் கொடுமை தாங்க முடியாமல் அப்படியே மூச்சிறைத்து மடிந்து போனால்....' நினைக்கவே தொண்டையில் அக்னியின் வேதனையை உணர்ந்தாள்.

கணவன் முருகேசன் லொரியொன்றின் சாதாரண கூலியாள். "லொரிக்கு சாமான் ஏற்ற வேண்டும்....ஊரைவிட்டுக் கொஞ்சம் தூரமாய்ப் போகிறேன். வர இரண்டு மூன்று நாட்களாகும்" எனத் தலையில் துண்டைச் சுற்றிக்கொண்டு, இவளது கையில் நூறு ரூபாயும் சொச்சம் சில்லறையும் கொடுத்துவிட்டுப் போனவன்.... போனவன் தான். இன்றோடு இரண்டு வாரமாகிறது. இன்னும் வீடு வந்து சேரவில்லை. என்ன காரணமோ...லொரி பழுதடைந்து போச்சோ.

கையில் இருந்த பணமும் எப்போதோ முடிந்து போய்....

அக்கம் பக்கம் வீடுகளுக்கும், ராமநாதனின் சந்திக்கடைக் கும் என கடனும் பட்டாயிற்று. இனி யாரும் கடன் தர மாட்டார்கள். தவிர, எந்த முகத்தோடு கேட்பது?

-ராமநாதனின் கடைக்குப் போனால்....அவன் இவளது இளமையான எலுமிச்ச நிற உடம்பையும்...வளைவான மேடுபள்ளங்களையும் தன் கண்களால் இலவசமாய் உறிஞ்சுவதும்....சாமான் தரும் நோக்கில் முரட்டுத்தனமாய் இவளது கையைப் பற்றுவதும்... அழுத்துவதும்....

-தேவகிக்கு அருவருப்பாயிருந்தது.

என்றாலும்....சூழ்நிலையின் பொருட்டு கைதியாகிப்போன அவளால் ராமநாதனின் செயல்களை எதிர்க்கவோ- தவிர்க்கவோ முடியவில்லை.

தேவகி எழுந்தாள்.

குழந்தை ரம்யாவை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டாள்.

'கடைசியாய் ஒரு பால் பக்கற் கடனுக்குக் கேட்டுப்பார்க்க வேண்டும்!' மனதுக்குள் நினைத்துக்கொண்டு அப்படியே ராமநாதனின் சந்திக்கடையை நோக்கி நடந்தாள்.

ராமநாதன் கல்லாவில்அமர்ந்திருந்தான். தேவகியைக் கண்டதும் அவன் கண்களில் சூரியனின் பிரகாசம்....

தராசில் எதையோ நிறுவை செய்து கொண்டிருந்த கடைப்பையனை டீ வாங்கி வரச்சொல்லி அனுப்பி வைத்தான். அவன் ஆச்சரியமாய் வெளியேறினான்.

தேவகி கடையினுள் பதட்டமாய் நுழைந்தாள்.

"என்ன தேவகி....முருகேசன் இன்னும் வரலியா?"

-ராமநாதனின் பார்வையில் விஷம் இருந்தது. தேவகியின் உடம்பு கூசியது.

"இன்னும் வரலீங்கண்ணே..."

"எப்போ வருவான்மா உன் புருஷன்?"

"தெரியலீங்கண்ணே...."

ராமநாதன் பார்வையால் அவளைத் துகிலுரித்துக்கொண்டே....

"ஏன் இந்தப் பக்கம் தேவகி?"

"வந்து.... வந்து..."

"என்ன குழந்தை அழுகிறது....பால் பக்கற் வேணுமா?"

"ஆமாண்ணே...."

"பணம் வெச்சிருக்கியா?"

"அவர் வந்தவுடனேயே கொடுத்திடுறேன் அண்ணே!"

-குழந்தை விடாமல் அழுது கொண்டிருந்தது.

"உன் புருஷன் எப்போ வந்து என் கடனை அடைக்கிறது? த்தப் பாரும்மா தேவகி... நானும் சின்னதாக வியாபாரம் செய்யுறேன். கடனுன்னு போனால் அப்படியே கடையை மூடிவிட்டு வீட்டுக்குப் போயிட வேண்டியதுதான்."

"இல்லண்ணே! இந்த முறை மட்டும் கொடுங்கண்ணே..."

-ராமநாதன் ஏதோ தடுமாறினான்.

"கொடுக்கிறது ரொம்பக் கஷ்டம் தேவகி..."

-பார்வையால் நாலா பக்கமும் அளந்து விட்டு.... மெல்ல கிசு கிசுப்பாய்ச் சொன்னான்.

"என் சம்சாரம் பிரசவத்துக்காக அவங்க அம்மா வீட்டுக்குப் போயிருக்காள். கொஞ்சம் ராத்திரி வீட்டுப்பக்கம் வந்து போறியா?"

அவளுக்கு குப்பென்று வியர்த்தது.

தேவகி எதிர்பார்த்ததுதான். என்றாலும் ஏதோ அமிலமாய் உணர்ந்தாள்.

குழந்தை அழுதழுது தொண்டை தண்ணீர் வற்றிப் போக...

தேவகி எதையுமே யோசிக்கத் திராணியற்று.... அந்தத் தப்புக்கு உடன்பட்டு.... கசப்பாய்ச் சொன்னாள். "சரீங்க!"

வார்த்தைகளில் பிசிர் ஒட்டிக் கொண்டது.

ராமநாதனால் நம்பவேமுடியவில்லை.

-உடம்பெல்லாம் பிரகாசமாகி "கட்டாயம் வரணும் தேவகி!" என்றவன் அடுக்கி வைத்திருந்ததில் இருந்து 'லக்டோஜன்' பக்கற்றொன்றை எடுத்துக் கொடுக்க, கைநடுங்க அதைப் பெற்றுக் கொண்ட தேவகி வேகமாய் வெளியேறி நடந்தாள். கண்கள் நனைய ஆரம்பித்தன.

'ரூப்புத்தெரா மஸ்தானா' பாடிக் கொண்டே கடைப்பையன் டீக் கோப்பையோடு கடைக்குள் நுழைய... ராமநாதன் ரொம்பவும் குஷியானான்.

இரவு நேரம் எட்டு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது.

-தேவகி ராமநாதனிடம் போகத் தயாரானாள். பயம் மனசுக்குள்ளும்- வயிற்றுக்குள்ளும் பந்தாய் உருண்டது.

குழந்தை ரம்யா பாலருந்திவிட்டு அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தாள்.

தேவகி குழந்தையை நன்றாகப்போர்த்தி விட்டு, குப்பிலாம்பைத் தூரமாய் வைத்தாள்.

அப்படியே...

வாளித்தண்ணீரில் முகம் கழுவி, சேலைத் தலைப்பை இழுத்து விட்டுக் கொண்டாள். மனம் சூறாவளியாய் ஓவென அழுதுகொண்டிருக்க....ஈரமாகிப் போன விழிகளுடன் முன்வாயலை நோக்கி நடந்து... மீண்டும் திரும்பிப் பார்த்தாள்.

ரம்யா உறக்கத்தில் ஆழ்ந்து போயிருக்க- கதவின் தாழ்ப்பாளை மெல்லமாய் விலக்கித் திறந்தாள்.

-அப்படியே....ஒரு நிமிடம் உடம்பில் இரத்தோட்டம் நின்று போக, சிலையாகிப் போனாள் தேவகி. வெளியே.......

கையில் லக்டோஜன் பக்கற்றோடு, தலையில் துண்டைச் சுற்றி... வெற்றுடம்பில் வியர்வை மினு மினுக்க முருகேசன் நின்று கொண்டிருந்தான்.

"என்ன தேவகி மலைச்சுப்போயிட்டே?"

-தேவகி சடாரென அவன் தோளில் முகம் புதைத்து அழ ஆரம்பிக்க, முருகேசனுக்கு எதுவுமே புரியவில்லை. தன் மனைவியை ஆதரவாய் அணைத்துக் கொண்டான்.

# "அழகு"

-ஷர்மிளா இஸ்மாயில்-



மாலை மயங்கும் வேளை. வெய்யிலின் தகிப்பும் நகரத்து புழுதியும் காற்றை மிகுதம் அசுத்தமாக்கியது போன்ற உணர்வு. வியர்வை ஓடைகள் உற்பத்தியின் உபயத்தில் உடைகள் ஈரமாக ஒருவித அசூயை உடலெங்கும் பரவும். "உஹும். டி.வி பார்க்க முடியாது." மனம் அடித்தீச் சொல்லிற்று. லைப்ரரியிலிருந்து எடுத்து வந்த நாவல்களைத் தேடிப்பிடிக்கிறேன்.

எனக்குப் பிடித்தமான எழுத்தாளர்களின் நாவல்கள். ஜன்னலோரமாய் நாற்காலியை இழுத்துப் போட்டமர்ந்து வசதியாய் சாய்ந்து வாசிக்க ஆரம்பம். சூழ்நிலை சரியாயில்லை. கவனம் எங்கோ சிதறிற்று. வாசலில் என் ஒரே தம்பி ராஜுவும் அவன் நண்பர் குழாமும் அரட்டையிலும் Birdwatchingலும் (அவர்கள் பாசை- அர்த்தம் ஜொள்ளுவிடல்/கலர் பார்த்தல்/சைட் அடித்தல்.) பொழுதைப் போக்குவதும் கவனத்தை ஈர்த்தது. பாதையில் போகும் வரும் பெண்களைப் பற்றிய விமர்சனம், கமென்ட்ரீஸ். எத்தனையோ முறை திட்டியிருக்கேன். அவர்கள் வயசு அபபடி. கேட்காது. இப்போது நானும் அதை அசட்டை செய்வதில்லை.

"ஏய்....அங்கே பாருடா....கறுப்புத் தங்கம்......." ஒருத்தனின் குரல். "உவ்வே.... கலரா அது....?கண்றாவி. கரிச்சட்டி." இன்னொருவன்- நிச்சயமாய் யாரோ ஒரு பெண். மனசுக்குள் உஷ்ணம் ஏற சட்டென எழுந்து ஜன்னலால் எட்டிப் பார்க்கிறேன்.

பாவம். தலையைக் குனிந்தபடி போய்க் கொண்டிருந்தாள் அவள். முகம் தெரியவில்லை. குள்ளமான உரு. சல்வாரினிலிருந்து மீந்திருந்த கை, கழுத்தின் பின்புறம் கன்னங்கரேல்! அப்படியொரு கறுப்பு. பாவம். முகம் தெரியாத அவளுக்குள் எத்தனை மன வேதனையோ. இவர்களின் வார்த்தைகள் இதயத்தைப் பிய்த்திருக்குமோ? கோபத்துடன் முறைக்கிறேன். தம்பியை தனியே அழைத்து க்ண்டிக்கிறேன். "ஏண்டா உனக்கும் உன் பிரெண்சுக்கும் வேற வேலையில்லையா? எல்லோரும் ஒரு பொண்ணு வயித்தில பொறந்தவங்க தானே. இப்படி நாக்கூசாம பேசறீங்களே... இரு. அப்பாகிட்ட சொல்லி உன் முதுகு தோல உரிக்க வெக்கிறேன்." அலட்சியமாய்ப் பார்த்துவிட்டுப் போய் விட்டான்.

என் மனசுக்குள் மீண்டும் மீண்டும் கசிவு. அழகை இரசிப்பது சரிதான். அதுக்காக அவலட்சணங்களை மிதிப்பதா? அழகும் அவலட்சணமும் ஒரே இறைவனின் இரு துருவ ஓவியப் படைப்புக்கள். அப்புறம் அழகை மாத்திரம் கொண்டாடுவதும் அசிங்கத்தை அலட்சியப் படுத்துவதும் எப்படி நியாயமாகும்? சிந்தனை ரேகைகள் அந்தப் பெண்ணைச் சுற்றி சுற்றியே படர்ந்தன. வாசிப்பில் மனம் லயிக்க மறுத்தது.

பின்னால் வந்த நாட்களில் அவளை நேருக்கு நேர் காண சந்தர்ப்பம் வாய்த்தது. விபரங்களும் கொஞ்சமாய்த் தெரிய ஆரம்பித்தன.

புதிதாய்க் குடிவந்திருக்கிறார்கள். எங்கள் தெருவின் கோடியில் தான் வீடெடுத்திருக்கிறார்கள்.

எட்டுப் பேர் கொண்ட குடும்பத்தில் அவள் ஏழாவது. மற்றவர்களையும் பார்த்துள்ளேன். சராசரியாக, அழகாக, சுமாராக..... ஆனால் ஒருத்தரும் இவளைப் போல் அவலட்சணமாயில்லை. 'ஏன் இறைவா இவளுக்கு மட்டும் இந்த 'தண்டனை' மானசீகமாய் இறைவனை கேள்வி கேட்பேன். அவலட்சணம் அதன் விளைவாக அலட்சியம். அதனால் ஏற்பட்ட மனப் பாதிப்பு. தாழ்வு மனப்பான்மை. அவளைப் பார்க்கையிலேயே அது புரியும். யாரோடும் பேசுவதில் பழகுவதில் தயக்கம். தன்னைப் பார்த்துத்தான் உலகமே சிரிக்கிறதோ என்கிற மனப்பயம். சறுகலான உணர்வுகள். அவள் புன்னகைத்து நான் பார்த்ததேயில்லை. ஆனாலும் நான் புன்னகைத்து வைப்பேன்.

பக்கத்து வீட்டு மாமி தான் ஒரு நாள் சொன்னாள். அந்தப் பெண் வீட்டில் எல்லாருக்கும் மணமாயிற்றாம். அவளது தங்கைக்கும் சமீபத்தில் திருமணப்பேச்சு வார்த்தைகளில் தீர்வு. ஆனால் அவளுக்கு மட்டும்?யாருமே ஏறெடுத்துப் பாராத ஊமத்தம் பூ அவள். ஏ..... எந்த ஆணுக்காவது அவளைப் பிடித்துப் போகாதா? அவளுக்கும் வரன் தேடுகிறார்களாம்..... "யாரு தான் அவளக் கட்டிக்கப் போறாங்க?" மாமியின் வினா என் உள்ளத்தை தைத்துப் போனது. விடை சொல்லப் போவது யார்? யார்?

ஒரு ஞாயிறின் மாலை. மீண்டும் கைகளில் ஒரு நாவலோடு நான். தயக்கமாய் வந்த தம்பியின் முகத்தை ஏறிட்டு வினவுகிறேன். "வ...வந்து.... அக்கா... அந்த கறுப்பு பொண்ணு இருக்கே... அ...அது வந்து ரயில் முன்னால பாய்ஞ்சு......" "ஆ....." என் மனமெல்லாம் கனமாகி எதுவோ பாரமாய் அழுத்தியது. நெஞ்சுவலித்தது. இமை மூடி மீண்டும் திறந்த போது கண்ணீர்த் துளிகள் சூடாக விழுந்தன. "விடுதலைடா. அவ இந்த பாழும் உலகத்த விட்டுட்டுப் போனது சரிதான். இனியாவது அவள் ஆத்மா இந்த உலகத்து அலட்சியங்கள சந்திக்காதது நிம்மதி." நான் உளறுவதாக நினைத்தானோ என்னவோ, ஒரு மாதிரியாய்ப் பார்த்து நகர்ந்தான் அவன்.

"அழகை அழகு என்று பாராட்டுவது குற்றமா? அழகு தொடர்புச் சொல். நமக்கு அழகு பிறருக்கு வேறு. இன்றைக்கு அழகு. நாளைய கோரம். நிரந்தரமில்லாத விஷயம். மேல் பூச்சு. உள்ளே எல்லோரையும் போல இரத்தம், சளி, மலம், மூத்திரம், இவைகளை அழகென்று எவர் சொல்ல முடியும்? அழகில்லை என்பதற்கு இவை எப்போதுமே உதாரணங்களாகும். அழகு என்ற பெண்ணுக்குள் அழகின்மை உண்டு. எனவே அழகு என்பது அர்த்தமற்றது. மேல் தோற்றம் கற்பிதம். அன்றைய அபிப்பிராயம்-" நாவல் வரிகள் இவை. திரும்பத் திரும்ப படிக்கிறேன். நானுணர்ந்த இந்த உண்மையை உலகு உணருவது எப்போது?

(கதைக்கு கற்பனையழகு)

# தங்கை ஒரு தீபமன்றோ!

-அக்குறணை ஹரீரா அனஸ்-



சத்தியமாய் அவளுக்கு வந்த கோபத்தில் அவனை எட்டி உதைத்திருக்க வேண்டும், ஆளைப்பார்! ஆளை!! மூக்கும் காவிப்பல்லும், கம்பனியா கேக்குது? கருவிக் கொண்டாள்இ பஸ் வேகமாகத் தனது பயணத்தைத் தொடர்ந்தது. இன்னும் மூன்று மணி நேரம் இந்த நரகத்தில் இருந்து வேக வேண்டும். மனம் எரிச்சலுடன் அந்த கறுத்த- நாற்பத்தைந்து வயதுடையவனைத் திரும்பிப் பார்த்தது. இன்னும் அவன் அவளின் மார்பின் கூர்மையையே விழுங்கிக் கொண்டிருந்தான்.

சிரித்தான்; முறைத்தாள்.

விரகம், தாபம் எல்லாம் அவனிடம் நடனமாடின போல்....அவன்,

அவளோடு ஒரு வார்த்தை பேசிவிடத் துடித்தான். மன உந்துதலால் ஆவலோடு அவளை ஸ்னேக தோரணையில் நெருங்கி, பின்னர் பேசி அதன் பின்னர் விசாரிப்பதாய் எண்ணினான்.

அவளிடம் மனமில்லை; அதனால் இப்போது இடமில்லை. தற்செயலாய் சனம் பஸ்ஸில் கூடிக்கொண்டே போனது. பயணம் அமைவதெல்லாம் யார் கொடுத்த வரமோ? அவன் எதிர்பார்த்திருந்ததும்; அவன் எதிர்பாராததுமான இருக்கையும் அவளருக்கில் நெருக்கமும் கிடைத்தது.

"மிஸ்...உங்களோடை கொஞ்சம்....."

"என்ன.... உனக்கென்ன... என்னோடை பேச்சு..

"யார் நீ...உனக்கும் எனக்கும் என்ன உறவு? ஊரிலை உள்ள கண்ட கண்ட பெண்களோடு எல்லாம் பல்லைக் காட்டுவியாக்கும். உன்னர பல்லைத் தட்டி... கையிலை தந்திடுவன். ஆமா..." அவனை அவள் யாரென்று அறிந்திருந்தால், இப்படியெல்லாம் பேசுவாளா?

"மிஸ்...கொஞ்சம் பொறுத்துக்கோங்க.... நான் பெண் எண்டா பேதை என்பதாகக் கணக்கெடுக்கிறதே இல்லை. அதே போல நீங்களும் பேதை இல்லை என்றதை நிரூபிச்சிட்டீங்க. ஆனா ஒண்டை வெளிப்படையாகவே சொல்லிடுறன். "உங்களை நான் பார்த்தது காமக் கண்களோடை இல்லை."

"ம்...என்ன சொல்றீங்க...? "அவள் தணிந்து வந்தாள். "அப்ப என்ரை மார்பையே குறிவைத்து..."

"அட. கடவுளே! உங்கள் மார்பிலிருந்த அந்த "ஏ" எழுத்துப் பொறிக்கப் பட்ட "பென்டன்."

"என்ன சொல்றீங்க....? சியாமா... வியப்பும் ஆச்சரியமும் மேலிட்டாள்.

"ஆமா சியாமா...தங்கச்சி..."

பெயர் கூறக் கேட்டவள் முன்பின் தெரியாத ஒரு ஆடவன் தன்னைப் பெயர் கூறி அழைப்பதைக் கேட்டு திடுக்கிட்டாள்.

"சியாமா... என் தங்கச்சி... என் செல்வமே! நீ எங்கேயம்மா போயிருந்தாய்? உன்னை எங்கையெல்லாமம்மா நான் தேடுறது. எங்கேயம்மா நீ போயிருந்தாய்? உன் அன்பைத் துரதிஷ்டவசமா இழந்த இந்தப் பாவி இன்னும் சாகவில்லையம்மா! இன்னும் சாகவில்லையம்மா!! உயிருடன் தான் இருக்கிறன்."

எல்லாவற்றையும் புரிந்து கொண்டவள்,

"அண்ணா" என்று அலறினாள்.

தான் உயிருக்குயிராய் நேசித்த அண்ணா!

தன் இன்ப துன்பங்களிலெல்லாம் பங்கேற்ற அண்ணா!

தன் வாழ்க்கைக்காகவே தன்னைப் பிரிந்து போன அண்ணா!

இப்போது எத்தனையோ வருடங்களின் பின் தன்னருகே நெருக்கமாக.... மிக நெருக்கமாக.. உயிரோடு இணைந்து பக்கத்தில் அமர்ந்திருப்பதை எண்ணி எண்ணி விம்மினாள். அன்பினால் அழுதாள். "என் அண்ணா..." என்று அவனின் மடியில் முகம் புதைத்துக் கேவிக் கேவி அழுதாள்.

தன் இத்தனை கால சோகத் தழும்புகளையும் சொல்வதற்காய் -உயிராய் நேசித்த அண்ணாவைக் கண்டுவிட்ட பூரிப்பிலும், நெகிழ்விலும் தன் அண்ணாவின் முகத்தை கைகளுக்குள் எடுத்து அன்பாய் ஒரு முத்தம் கொடுத்து விட்டு பேசத் தொடங்கினாள்... சியாமா.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறு கதை

**அவளைப் பார்த்ததும் எல்லாமே தலைகீழாய்ப் போய்...**



# காதல்

எம். சுரேஷ்

ஏதோ ஒரு விபரிக்க முடியாத அருவருப்பு, தடுமாற்றம்...... ஒன்றுமே புரியவில்லை. அப்படியானால் இதெல்லாமே கற்பனையா?

'நரேஷ்! உன்னை நீயே ஏமாற்றிக் கொள்வதில் என்ன இலாபம் இருக்கிறது? பேசாமல் தோல்வியை ஒப்புக்கொள்.'

'முடியாது. முடியவே முடியாது.....'

'நரேஷ்! இங்கேதான் நீ பிழைக்கிறாய்.... உன்னை அறியாமலே உனக்குள் தோல்வி முகாமமைத்துவிட்டது...... புலம்பியது போதும். பூக்களையும், நிலவையும் துணைக்கழைத்துக் கொண்டு செயற்கையாய் சிரி..... உன்னைப் பொறுத்தவரைதான் இது தோல்வி. உலகைப் பொறுத்தவரை இது ஒரு பெரும் வெற்றி... எழுந்து வா...நீ புதிதாய் தாஜ்மகால் கட்ட வேண்டியதில்லை!'

சேச்சே! எத்தனை வித்தியாசமான எண்ண அலைகள். மனசாட்சி என்பது உண்மையா? அது சொல்வதை எற்றுக்கொள்ளத்தான் வேண்டுமா? குழம்பினான்.

'நரேஷ்! நீ எத்தனைதான் திட்டங்கள் போட்டிருந்தாலும், உனக்கு முன்னமே நமது சக்திக்கு அப்பாற்பட்ட ஒருவன் உனக்கு வேண்டிய திட்டங்களை வரைந்து முடித்துவிட்டான். இனி எல்லோமே அதன்படிதான்..... பேசாமல் தோல்வியை ஒப்புக்கொள்.'

'நோ! எப்படி...எப்படி அதை நான் ஏற்றுக்கொள்வது? அது எனக்கு சாத்தியப்படுமா? பொருந்துமா.....? முடியாது.... தயவு செய்து என்னை தொந்தரவு செய்யாதே'

'நரேஷ்! வீணாக அடம்பிடிக்காதே. நீ தோல்வியடையவில்லையானால், ஏன் அவளைப்பற்றியே அதிகம் சிந்திக்கிறாய்? அவளோடு பேசத் துடிக்கிறாய்?'

இந்தக் கேள்வியால் நரேஷ் தடுமாறிப் போனான். சிலவேளை அது உண்மையாக இருக்குமோ? அவனுக்கு "ஓவென" வாய்விட்டு அழவேண்டும் போல் இருந்தது. அழுதான்!

'எதற்கு இந்த அழுகை?' அவனுக்கே புரியவில்லை!

அவன் ஒரு பெரிய தொழிலதிபர், பட்டதாரி, சமூகத்தில் பெரும் புகழ்பெற்றவன்.... எத்தனையோ பட்டமும், பதவியும், பொருளும், புகழும் உள்ள பெண்கள் அவனை சுற்றிச் சுற்றி வந்த போதும் தனது பிரம்மச்சரிய கொள்கையை நழுவவிடாமல் இருந்தவன், அந்தப் பூக்காரியைப் பார்த்ததும்.... போயும் போயும் ஒரு பூக்காரியைப் பார்த்ததும் எல்லாமே தலைகீழாய் போய்...

ச்சே! இது எப்படிச் சாத்தியமானது? அதை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை.

அந்தப் பூக்காரி அழகாகத்தான் இருந்தாள். குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும், பனித்த சடையும், பவளம் போல் மேனியும்...இதழ்களைக் குவித்து அவள் பேசும் போதும், சிரிக்கும் போதும்...மனதிற்குள் என்னமோ காணாமல் போனது!

"அந்தப் பூ...."

"அது என்னோடதில்லையா!"

"அப்போ பூ இல்லைங்கிறியா?"

"ஐயய்யோ! அப்பிடி இல்லீங்க.... கொஞ்சம் நில்லுங்க, நான் வாங்கியாந்து தாறேன்."

வாங்காமலே நின்றான். வாங்கி வருவாள் என்ற நம்பிக்கை... காற்றும், சுவாசமும் போல் இதுவும் இயற்கை யானதா? வழமையானதா?

சொல்லிக்கொள்ளாமலே சொற்கள் காணாமல் போனது....

நிலவு சுட்டது...

காற்றில் காகிதம் எழுதவேண்டும் போல் இருந்தது.....

கொஞ்சம் பயமும், கொஞ்சம் சுகமும், ஒன்றாகச் சேர்ந்தால், இன்பக் காதல்!

அவ்வப்போது மனிதனைக் குழப்பி விடுவது தானே மனசாட்சியின் வேலை...?

இது எப்படி யதார்த்தத்திற்குப் பொருந்தும்? அழகு மட்டும்தான் வாழ்க்கையா? அழுகு மட்டும் இருந்தால், அழகான மனைவி மட்டும் கிடைத்துவிட்டால் வாழ்க்கை இன்பமயமாகி விடுமா?.... இல்லை, இல்லவே இல்லை.....இன்று அழகு இருக்கிறதோ இல்லையோ பணம் இருக்க வேண்டும். அறிவு இருக்க வேண்டும்!

அவனைப் பொறுத்தவரை பணம் தேவையில்லை. ஆனால் அறிவு...? அந்தப் பூக்காரி எட்டாம் வகுப்புக்கூட படித்து முடித்திருக்க மாட்டாள். 'இவளை எப்படி என் மனைவியாக.....?'

'நீ என்ன அவளைப் பேசியா முடிக்கப் போகிறாய்? காதலித்துவிட்டு அறிவைப் பற்றிப்பேசுகிறாயே? முட்டாள்.... உன்னைச் சொல்லவில்லை. காதலைச் சொன்னேன்!'

'எத்தனையோ பெரிய இடத்து அழகான பெண்களையெல்லாம் புறக்கணித்த நான், போயும் போயும்.... ச்சே! எத்தனை பெரிய தோல்வி....'

'காதல்... இதுவும் நாம் போன பிறப்பில் செய்த பாவபுண்ணியத்திற்கு ஏற்றவாறுதான் அமைகிறது போலும்.... வேறு எப்படித்தான் சொல்வது?'

காதல் வருவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். (பலருக்கு இறைவன் கொடுத்த வரம்!)

'சரி! அப்படித்தான் இருக்கட்டுமே....இப்போது நீ என்ன செய்யப் போகிறாய்?'

அதுதான் அவனுக்கும் புரியவில்லை. இதயத்திற்குள் இரத்தக் கீறல்!

இறுதியான முடிவெடுத்து, உறுதியாக அவளை மறக்க முயன்று முடியாமல் போன நரேஷ் சிரித்தான்.

சிலவேளை மனசாட்சியின் கணிப்பும் சரியாகத்தான் அமைகிறது. ஒருவேளை மனசாட்சிதான் நமது தலைவிதியாகவும் இருக்கலாம். காரணம் நாம் நமது மனசாட்சிப்படிதானே ஒவ்வொரு பாவ புண்ணியத்தையும் செய்கிறோம்!

அவனுக்கு ஆத்மார்த்தமாக சிந்திக்கத் தெரியாது. அவள் படித்திருக்காவிட்டாலும் பரவாயில்லை. திருமணத்திற்கு முக்கியம் மனப்பொருத்தம் தானே? இனியும் முகமூடிகள் எதற்கு?

'எங்கே மனசாட்சி... என் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும்.'

'எந்தத் தோல்வி'

'அதுதான்....'

'அது தோல்வி இல்லையே...?'

'என்னைப் பொறுத்தவரை...'

'ஏன் உன்னை மட்டும் பொருத்து கிறாய்....? உன்னோடு அவளையும் பொருத்திப் பார், வாழ்க்கை இனிக்கும்!'

(அவன் சிரித்தான்)

'இனி வேஷம் வேண்டாம்...அவள் உன்னோடு பேசிக்கொண்டே இருப்பாள்...'

மீண்டும் இதயத்தில் அழுத்தமாய் ஒரு இன்பக் கீறல்!

மனசாட்சி...நீண்ட மௌனம்!

அது மனசாட்சியின் இறப்பா? திருப்தியா?

# தடம் புரளாத ரயில்கள்

என். உதயகுமார்

காலை ஐந்து முப்பது மணி பஸ்ஸில் நான் புறக்கோட்டை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். எனது மனமோ பஸ் எப்போது புறக்கோட்டையை வந்தடையுமென்று தவித்துக்கொண்டிருந்தது.

மட்டக்களப்பிற்குச் செல்லும் புகையிரதம் புறப்படுவது 6.45 என்றாலும் எனக்கு இலேசான பயம், எங்கே புகையிரதத்தைத் தவற விட்டு விடுவோமா என்று...

எனது மனப்பயத்தைப் போக்க நினைவுகளை வேறுபக்கம் திசைதிருப்ப முயலுகின்றேன்.

ஆறு மாதத்திற்கு முன்புதான் கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் வேலை கிடைத்து கொழும்புக்கு வந்த நான் இப்போது நத்தார் விடுமுறைக்காக எனது சொந்த ஊரான மட்டக்களப்பிற்குப் போகப் போகிறேன்.

எனது மனம் வீட்டை நினைத்துப் பார்க்கின்றது...

அம்மாவின் கையால் சமைத்த உணவை மீண்டும் சாப்பிடப் போகிறோம் என்று நினைத்த போது மனம் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது.

எட்டு வீட்டுக்கும் மணக்கத்தக்கதாக அம்மா சுண்டும் சுறா மீன் வறுவலை நினைக்க எனக்கு இப்போதே நாக்கில் எச்சி உறியது.

தங்கச்சி பிரியாவுடன் சண்டை பிடித்து எத்தனை நாட்களாகிவிட்டன? அவள் சிற்றி எஃப்.எம் அலைவரிசைக்கு திருப்புவதும் நான் திரும்பவும் தமிழ்ச் சேவைக்கு மாற்றுவதும் கடைசியல் எங்கள் இரண்டு பேருடைய சண்டை பொறுக்காமல் அம்மா வந்து ரேடியோவை ஆஃப் பண்ணிவிட்டு போவதையும் இப்போது நிகைக்கவும் எனக்கு சிரிப்புத்தான் வந்தது. எப்போதும் "சித்தா பூனை காட்டுங்க. கோழி காட்டுங்க." என்று கெஞ்சும் அண்ணாவின் இரண்டு வயது மகள் வைதி.....

"கொட்டுவ ஸ்டேஷன் கட்டிய ஒக்கம பயின்ட" என்ற குரல் எனது நினைவுகளைக் கலைத்தது.

அவசரமாக எனது சூட்கேஸ், இன்னுமொரு கிட்பாக்குடன் இறங்கிக் கொண்டேன். இரண்டு கைகளிலும் சுமையாயிருந்தாலும் வீட்டுக்குப் போகும் சந்தோஷத்தில் அவை எனக்கு பெரிய சுமைகளாய்த் தெரியவில்லை.

நுழைவுச்சீட்டை வாங்கிக்கொண்டு மட்டக்களப்பு செல்லும் புகையிரதம் தரித்து நிற்கும் மேடைக்கு வந்தபோது கைக்கடிகாரத்தைப் பார்த்தேன் மணி 6.20 தான் ஆகியிருந்தது. எனது அதிஷ்டமோ என்னவோ எனது இரு கைகளிலும் சுமைகளைப்பார்த்த ஒருவர் எனது ஒரு கையிலிருந்த சூட்கேஸை வாங்கி மேலே காரியரில் வைத்துவிட்டார். நான் எனது மறு கையிலிருந்த கிட்பாக்கையும் வைத்துவிட்டு அவருக்கு நன்றி கூறிக்கொண்டேன். என்றாலும் மனதில் இலேசான வருத்தம், அது யன்னலோரத்தில் ஸீட் கிடைக்கவில்லையே என்று தான். நான் ஸீட்டில் அமர்ந்த சில வினாடிகளுக்கெல்லாம் புகையிரம் மெதுவாக நகரத்துவங்கியது.

நான் அவசரமாகக் கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். மணி 6.25 தான் ஆகியிருந்தது. நேரத்தைப் பார்த்து ஒரு கணம் அதிர்ந்தாலும் இப்போது புகையிரதம் புறப்படும் நேரத்தை மாற்றியிருப்பார்கள் என்று சமாதானமாகினாலும் உள்மனசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. பக்கத்திலிருப்பவர் யாரிடமாவது இந்தப்புகையிரதம் எங்கே போகிறது என்று விசாரிக்க நினைத்தேன். அப்போது தான் கவனித்தேன். ஒரு முகம் கூட தமிழ் முகமாய்த் தெரியவில்லை. நெற்றியில் திருநீறு பூசியவர்களையோ, பொட்டு வைத்த முகங்களையோ ஒரு சல்வார்கமீஸையோ காணவில்லை.

மாறாக எனக்குப் பக்கத்திலிருந்தவர் வெள்ளை நிறக் காற்சட்டை சேட் உடுத்தி பார்ப்பதற்கு பளிச்சென்றிருந்தார். ஆனால் அவரது கையில் சிங்கள நாளிதழ் பத்திரிகையிருந்தது. அவருக்குப் பக்கத்தில் ஒரு யுவதி தன் ஐந்து வயதுப் பிள்ளையின் சேட்டைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர போராடிக் கொண்டிருந்தாள்.

எனக்கு எதிரில் அமர்ந்திருந்த இளைஞனைப் பார்க்கவே எனக்குப் பயமாயிருந்தது. பட்டிக் சாரமும் அதனை மடித்துக்கட்டி சிவப்பு நிற நீட்டுக்கை சேட்டு உள்ளுக்குள் விட்டு கையை மடித்துவிட்டிருந்தும் புகை மண்டலங்களாய் விட்டுக்கொண்டிருந்த பீடியும் எனக்குப் பார்க்கவே அருவருப்பாயிருந்தது. போதாததிற்கு அவனது முகத்தில் இருந்த தழும்பு என் மனதில் அவன் ஒரு ரௌடியாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைக்கத் தோன்றியது.

சரி அவர்களிடமாவது கேட்போமா என்று நினைத்தால், எனக்குத் தெரிந்த கொச்சைச் சிங்களத்தில் கேட்பதற்கு தயக்கமா யிருந்தது.

மூன்றாம் வகுப்பில் சிங்களப் பீரியட்டின் போது கட் அடித்துக்கொண்டு திரிந்ததின் விளைவை இப்போது நினைத்துக்கொண்டேன். சரி அடுத்த ஸ்டேஷனில் புகையிரதம் தரித்து நிற்கும் இடங்களை அறிவிப்பார்கள் தானே அப்போது அறிந்து கொள்ளலாமென்று பேசாமலிருந்து விட்டேன். காலையிலும் மாலையிலும் மட்டுமே கடவுளை நினைக்கும் எனது மனம் இப்போது 'சிவபுராணம்' சொல்லிக்கொண்டது.


ஆனாலும் எனக்கு பெரிதும் ஏமாற்றமாயிருந்தது, அடுத்த ஸ்டேஷனிலும் எந்த அறிவிப்புமே அறிவிக்கவில்லை. சரி இவர்களிடமாவது கேட்கலாம் என்று நினைத்தால் எதிரே இருந்த அந்த வெட்டுக்காய தழும்பு இளைஞன் என்னையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருப்பது போல் எனக்குத் தோன்றியது.

ஜன்னலினூடாக வீசிய சில்லென்ற காற்று என் முகத்தில் பட்டும், பயத்தால் எனக்கு வியர்த்துக்கொட்டத் துவங்கியது.

"தம்பி, நீ எந்தச் சிங்களப் பெடியனோடையும் சினேகிதம் வைச்சுக் கொள்ளப் போகாத. ஏதாவதென்றால் அவன் உன்னை வெட்டிப் போடுவான்."

"அக்கம் பக்கத்து சனத்துக்கு நீ தமிழன் என்று காட்டிக்கொள்ளாத, ஏதும் கலவரம் வந்தால் உன்னைத் தேடி வருவினம்."

நான் முதன்முதலாக கொழும்புக்கு வரும்போது எனது உறவினர்கள் கூறிய வார்த்தைகளை நினைக்க எனது பயம் இன்னும் அதிகரித்தது. வேடர்கள் விரித்த வலையில் தானாக வந்து மாட்டிக் கொண்ட மானைப்போல் நான் என்னை நினைத்துக்கொண்டேன். எனது பயத்தை அதிகரிப்பது போல் அந்த முறுக்கு மீசை இளைஞன் அவனது இடுப்பில் செருகி வைத்திருந்த எதையோ எடுக்க முயன்றான். எனது சப்தநாளங்கள் ஒடுங்கின. ரௌடிகள் எப்போதும் கத்தியை இடுப்பில் தான் செருகி வைத்திருப்பார்கள், என்பது எனக்கு இப்போது தமிழ் சினிமாவில் பார்த்ததும்



கதைப்புத்தகங்களில் படித்ததும் ஞாபகம் வந்தன. அப்படியானால் இவனும் நான் தமிழன் என்று தெரிந்து கொண்டு என்னை சதக் சதக்..என் மனம் பலவாறு கற்பனை செய்துகொண்டிருக்கையில் அவன் இடுப்பில் செருகி வைத்திருந்த பீடிக்கட்டை எடுத்து, பீடி பற்றவைத்துக் கொண்டிருந்தான்.

நான் எனது கற்பனையை நினைத்து என்னையே கண்டித்துக்கொள்கிறேன். வீணான பயத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்று நினைத்துக்கொண்டு அடுத்த ஸ்டேஷனுக்காக காத்திருந்தேன். புகையிரதம் அடுத்த ஸ்டேஷனில் நின்றதும் நான் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டேன். புகையிரதம் தரித்து நிற்கும் ஒவ்வொரு இடங்களாய் அறிவித்துக் கொண்டிருந்தார்கள். இறுதியில் "அனுராதபுர" என்று அறிவித்தது.

இதைக் கேட்டதும் எனது முகத்தில் ஈயாடவில்லை. திகைத்துப்போய் செய்வதறியாது நின்றேன். எனது இந்த நிலையையறியாத புகையிரம் மீண்டும் நகரத்துவங்கியது. நான் மலங்க மலங்க விழித்துக்கொண்டிருந்தேன்.

தோழமையுடன் என் தோளில் ஒரு கை விழுந்தது. நான் நிமிர்ந்து பார்த்தேன். அதே முறுக்கு மீசை வெட்டுக்காயத் தழும்பு இளைஞனின் கைகள் தான்.

"அய் மல்லிட மொனா அறி பிரஷ்னத" அவர் கேட்டது எனக்கு அரைகுறையாகத்தான் புரிந்தாலும், என்னுடைய நிலைமையைப் பற்றித்தான் ஏதோ கேட்கிறார் என்று நினைத்துக்கொண்டு நான் வெறுமனே தலையை மட்டும் ஆட்டினேன்.

"மொனா ஹரி உதவு ஒனனங் கியண்ட மல்லி"

"மம கோச்சி....மட்டக்களப்பு யண்ட..." நான் இந்த ஆறு மாதத்தில் கற்றுக் கொண்ட சிங்களத்தில் பேசியது அவனுக்கு விளங்கியதோ என்னவோ.

"ஷரி...ஷரி தங் பய வென்ட எபா, அனித் ஸ்டேஷனெகே பாலாமடகளப்புவ கோச்சி ஆவாம நகின்ட புழுவங்." நீளமாக அவர் பேசிக்கொண்டு போனது எனக்கு சரியாகப் புரியாவிட்டாலும் அடுத்த ஸ்டேஷனில் இறங்க வேண்டுமென்று கூறுகின்றார் என்று மட்டும் புரிந்தது. அதற்குள் மற்றவர்களும் அவரிடம் விஷயத்தைக் கேட்டு அறிந்து கொள்கிறார்கள். மறுவிநாடி எல்லோரும் வந்து என்னிடம் ஏதோ கூறிக்கொண்டிருந்தார்கள். எனக்கோ ரி.வியில் மகாபாரதம் பார்ப்பது போலத் தானிருந்தது.

இப்போது நான் எனது உறவினர்கள் கூறியவற்றை நினைத்துப் பார்க்கையில் சிரிப்புத்தான் வந்தது. சிங்கள சனம் எல்லாம் கெட்டவர்களல்ல, சந்தர்ப்பமும் சூழ்நிலையும்தான் அவர்களை ஒரு இனக்கலவரத்தை ஏற்படுத்தத் தூண்டுகிறது என்று, அவர்களுக்கு சிங்களவரைப் பற்றிய தவறான எண்ணத்தை நிச்சயம் இம்முறை போக்க வேண்டுமென நினைக்கிறேன்.

"அய் மல்லிட தாமத் பயத. அபி இன்னவானே, ஒயா பயவென்ட எபா" எனது தொடர்ச்சியான மௌனத்தைப் பார்த்து அந்த இளைஞன் மீண்டும் கேட்டிருக்க வேண்டும்.

நான் இயல்பான நிலையில் தானிருக்கிறேன் என்பதற்குப் பதிலாக அவரைப்பார்த்து புன்னகை புரிந்தாலும் உள் மனசுசொல்லிற்று.

நான் பயப்படவில்லை, மாறாத எங்கள் இரு இனங்களுக்குமிடையிலுள்ள இடைவெளியைப் பற்றித்தான் நினைத்துக் கவலைப்படுகின்றேன். ஒருவரைப்பற்றி ஒருவர் புரிந்துகொள்ளாத அந்த 'இடைவெளி' யாலத்தான் நாட்டில் இன்று இந்த நிலை....

அடுத்த ஸ்டேஷன் பொல்காவலை. ஸ்டேஷனில் புகையிரதம் நின்றதும் எல்லோரினதும் தைரிய வார்த்தைகளுடன் நான் இறங்குகின்றேன். என்னுடன் அந்த இளைஞனும் இறங்கி வந்து என்னை ஸ்டேஷன் மாஸ்டரிடம் அழைத்துச் சென்று ஏதோ பேசினார். என்னை மட்டக்களப்பு புகையிரதத்தில் ஏற்றி விடும்படித்தான் கூறியிருக்க வேண்டும். ஸ்டேஷன் மாஸ்ரர் என்னை ஓய்வெடுக்கும் அறையில் அமரச் சொல்லுகின்றார்.

புகையிரதம் மீண்டும் புறப்படுவதற்கு முதலாவது விசில் ஊதப்படுகின்றது. நான் அந்த முறுக்கு மீசை, வெட்டுக்காய தழும்பு இளைஞனுக்கு- இல்லை எனது நண்பனுக்கு எப்படி நன்றி சொல்வதென்று தெரியாமல் கலங்கிய கண்களுடன் அவரது கைகளை பிடிக்கின்றேன். எனது நிலை அவருக்குப் புரிந்திருக்க வேண்டும். ஆதரவுடன் எனது தோளில் தட்டிக் கொடுக்கின்றார். அவர் ஏறவும் புகையிரதம் புறப்படவும் சரியாகவிருந்தது.

யன்னலுக்கூடாக அவர் எனக்கு கை அசைத்து விடை கொடுத்துக் கொண்டிருக்க புகையிரதம் நகர்ந்து கொண்டிருந்தது. புகையிரதம் கொஞ்சம் கொஞ்சமாய் என் பார்வைக்கு எட்டாத தூரமாய் மறைந்து கொண்டிருந்த அதே நேரம் என் மனதிலும் சிங்களவரைப் பற்றி நான் கொண்டிருந்த தவறான எண்ணமும் மறைந்து கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தென்றல் மீது சுடடது கோபம்!

## தருவது ரசிகன்

"போதும் இதில் ஒன்றும் குறைச்சல் இல்லை."

வான்மதி தன் இடை மீது அழுத்திய சேரலாதனின் கரத்தை தன் கரத்தால் எடுத்து விலக்கினாள்.

மென்மையான இடையில் சற்று நேரம் கூட தாமதிக்க முடியவில்லையே என்ற வருத்தத்தோடு சேரலாதன் கேட்டான்,

"எதில் குறைச்சல் என்கிறாய்?"

வான்மதி பதில் சொல்லாமல் இருந்தாள்.

பளிங்குத்தரைபோல இருந்த அவள் கன்னத்தின் வாளிப்பை இரசித்துக்கொண்டே விழிகளை இறக்கிய சேரலாதன் இரு பெரும் கிண்ணங்களை கவிழ்த்து வைத்தது போல் அவள் நெஞ்சில் எழுந்த அழகுகள் மீது விழிகளை தரித்து நிற்கச் செய்தான்.

வான்மதி, சேரலாதன் விழிகள் எங்கு வந்து தரித்து நிற்கின்றன என்பதை புரிந்து கொண்டாள். தன் அழகுகள் மீது அவன் மெய்மறந்து வியத்தலை நினைத்து மனதுக்குள் மகிழ்ந்து கொண்டாள்.

தனக்குரியவன் தன் அழகின் முன் பிரமித்துப் போதல் பெண்ணுக்குப் பிடிக்கும். மனது உள்ளேயே சந்தோசத்தில் மிதக்கும். தன் அழகின் ஆளுமையை நினைத்து உள்ளே ஒரு தன்னம்பிக்கை எட்டிப்பார்க்கும். வான்மதி மகிழ்ந்தாள். வெளியே காட்டிக்கொள்ளாமல் உள்ளே சந்தோஷத்தில் மிதந்தாள்.

சேரலாதன் பொறுமையைத் தொலைத்துக் கொண்டிருந்தான்.

"எதில் குறைச்சல் என்று கேட்டேன்?"

சற்று குரல் உயர்த்திப் பேசினான்.

"காது நன்றாகத்தான் இருக்கிறது."

"அது உண்மைதான்."

"எது உண்மைதான்?"

"காது நன்றாக இருப்பது. கடித்துத் தின்னலாம் போல் ஆசையாகவும் இருக்கிறது. ஆனால்..."

சொல்லி நிறுத்த,

"என்ன ஆனால்?"

"காது கேட்கும் நிலையில் இருக்கிறதோ என்பதுதான் சந்தேகம்."

வான்மதி தன் வண்ண முகத்தில் பொய்க் கோபம் அணிந்து சேரலாதனைப் பார்த்து முறைத்தாள். பின்னர் கேட்டாள்.

"இத்தனை நாளாய் எங்கே போயிருந் தீர்களாம்?"

"பார்த்தாயா வான்மதி. போகும் போது சொல்லிவிட்டுத்தானே போனேன்?"

"என்ன சொல்லிவிட்டுப் போனீர்கள்?"

"வணிக விசயமாக வெளியூர் போகிறேன் என்று."

"அது தெரியும். எத்தனை நாளில் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனீர்களாம்?"

"அட...அதுதான் என் செல்லக் கிளிக்கு கோபமாக்கும்."

கூறியபடியே அவள் மூக்கில் மெல்லக் கிள்ளினான்.

வான்மதிக்கு அவன் கிள்ளியது சுகமாக இருந்தது. ஆனால் நீண்டநாள் பிரிந்திருந்து தன்னை காதல் நோயில் வாட்டியவனை துன்பப்படுத்திவிட்டு பின் தழுவிக் கொண்டு அன்புகாட்டும் எண்ணம் வந்தது.

"என்னைத் தொட வேண்டாம்."

"உன்னைத் தூர இருந்து பார்க்கும் போதே துறவிக்கும் ஆசைவரும். நான் துறவியும் அல்ல. தவிர..."

"தவிர?"

"ஆசைப் புரவி உள்ளே இருந்து மாடப் புறாவை தழுவிக்கொள். தருவதை வாங்கிக்கொள் என்று வேகம் காட்டுகிறது."

"இத்தனை நாளாய் அந்தப் புரவி எங்கே இருந்ததாம்?"

"அதையேன் கேட்கிறாய் வான்மதி. சொன்னால் பொய் என்பாய். எப்போது காண்பேன். உன் செவ்விதழ்களில் சிந்தும் தெவிட்டாத அமுதத்தை எப்போது சுவைப்பேன் என்று என் மனது துடித்த துடிப்பிருக்கிறதே அப்பப்பா..."

சேரலாதன் சொல்லச் சொல்ல வான்மதிக்கு மனதுக்குள் மழை பொழிந்தது.

தன் நினைவில் தன் காதலுக்குரியவன் உருகிப்போனது அவன் தன் மீது கொண்ட அன்புக்கு சாட்சியாய் மனதில் பதிந்தது.

அவன் தவிப்பை இன்னும் அறியும் ஆவல் எழுந்தது.

தனக்குரியவளோ, தனக்குரியவனோ முழுதாய் தன் வசமாய் போவது அறியும் போது இதயத்தில் ஒரு கர்வம் வரும். மனதுக்கு இறக்கைகள் முளைக்கும். வண்ணத்திப் பூச்சிகள் போல மனதில் இறக்கைகள் பட படக்க வான்மதி மேலும் தூண்டில் வீசினாள்.

"எல்லாம் பொய். இவர் துடித்தாராம். நடிப்பைப்பார்."

"இந்தப் பெண்களே இப்படித்தான்."



சேரலாதன் பொய்யான சலிப்புக் காட்டினான். ஆனால் வான்மதியோ கோபமானாள். பொதுப்படையாய் பெண்கள் என்று அவன் கூறியதால் கவலை கொண்டாள்.

காதலில் சுயநலமும் இருக்கிறது. வேறு எவரையும் விட, வேறு எதனையும் விட தன்னை மட்டுமே உயர்வாய், முழு முதலாய் நினைக்க வேண்டும் என்று மனது விருப்பப்படும். ஆணுக்கும், பெண்ணுக்கும் அந்த நினைப்பு பொதுவாக இருக்கும்.

தன் அன்புக்குரியவள் வேறு ஒரு ஆடவனை இயல்பாகப் புகழ்ந்தால் கூட கோபம் வரும். என்னைவிட அவன் உயர்த்தியோ என்று பொறாமை வரும். பெண்ணுக்கும் அப்படித்தான். கரை கடந்த நேசம் தரும் சுயநலம் அது. அதுவே காதலின் பலம். அது ஊடலுக்கும் காரணம்.

"பெண்களைப் பற்றி அதிகம் தெரியுமாக்கும். யார் கண்டது, இருக்கும். இருக்கும்."

வான்மதியின் குரலில் கோபம் பார்த்த சேரலாதன் கிணறு வெட்டப் போய் பூதம் வந்த கதையாகி விட்டதே என்று நினைத்தான்.

"சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன் வான்மதி. உன்னைப் போன்ற ஒரு பெண்ணின் காதல் பெற்றவன் எத்தனை யுகமானாலும் வேறு பெண்ணை நினைக்க முடியுமோ?"

கேட்டான். இனியும் பேச்சுக்கு இடம் கொடுத்தால் ஆசைப்புரவியின் தாகம் அதிகமாகும் என்று நினைத்து வான்மதியின் இடையில் கைவைத்து தன்னோடு சேர்த்து அணைத்தான். வான்மதி திருப்தி கண்டாள். அவன் கரத்தை விலக்க முயல்வது போல் நடித்தாள். மனதுக்குள் இன்னும் அழுத்தட்டும் என்று நினைத்தாள்.

சேரலாதன் தன்னை இழந்து கொண்டிருந்தான். வான்மதி தன்னை மறந்துகொண்டிருந்தாள். கோபம் பஞ்சு போல் பறந்துவிட அவள் கொவ்வை இதழ்களில் சேரலாதன் உதடுகள் பூவில் மகரந்தம் தேடும் வண்டுகளாயின.

இடையில் பதிந்த கரம் மேலெழுந்து வான்மதியின் இளமைச் சிகரங்களில் ஊர்வலம் நடத்திக்கொண்டிருந்தன. வான்மதி தடுக்க வில்லை.

தன்னை அவன் வசம் முழுதாய் இழந்து தன் கரங்களை அவன் முதுகில் பதித்து தழுவினாள். தழுவியபோது தன் மார்பில் மோதிய சிகர சுகம் உணர்ந்து சேரலாதன் ஆசை வலையில் விடுபட முடியாமல் விழுந்தான்.

குளிர்ந்த தென்றல் வந்து இருவரின் அணைப்புக்கிடையில் தனக்கும் ஒரு இடம் கேட்டுப் புகுந்தது.

இப்போது வான்மதிக்கு கோபம் வந்தது. கோபம் சேரலாதன் மீதல்ல. இடையிலே புகுந்த

## இலக்கிய நயம்

தென்றல் மீது.

"தென்றலுக்கு இங்கென்ன வேலை? எமக்கிடையில் பிரிவுக்கும் இடமில்லை. இடையிலே புகுந்து கொள்ள தென்றலுக்கு இடமில்லை."

மனதிலே நினைத்தாள். சேரலாதனை இறுக்கமாய் ஆரத் தழுவினாள்.

சேரலாதன் அந்த அழகுச் சிறையில் ஆயுள் முழுக்கவும் அடைபட்டுக்கிடக்கலாம் என்று நினைத்தான்.

இடையே புகுந்த தென்றலுக்கு சேரலாதன் நன்றி சொன்னான்.

வான்மதி தென்றல் மீது இன்னமும் கோபமாயிருந்தாள். அவள் கோபம் சேரலாதனுக்கு சுகலாபம்.

வள்ளுவர் இந்த நேரத்தில் வந்து ஒரு குறள் நீட்டுகிறார்.

**"முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற**
**பேதை பெருமழைக் கண்."**

அதிகாரம் 124. குறள் 1239.

தழுவுதலுக்கு இடையே குளிர் காற்று நுழைய பெரிய மழை போன்ற காதலியின் விழிகள் பசலை நிறம் அடைந்தனவாம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—30

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ■ | 3 | |
| | ■ | 4 | | | | |
| 5 | 6 | | ■ | ■ | ■ | |
| | | ■ | 7 | ■ | 8 | 9 |
| | | 10 | | 11 | | ■ |
| ■ | | ■ | | | | 12 |
| 13 | | | | ■ | | |

**இடமிருந்து வலம்**

1. இப்போது நாட்டிற்குத் தேவையானது.
3. வெளிச்சத்தோடு சம்பந்தப்பட்டது.
4. புலிகள் அமைப்புக்குள் மாத்தையா மீது இதுதான் நடந்துகொண்டிருக்கிறதாம். (குழம்பியிருக்கிறது)
5. மங்கள நாட்களில் இதன் ஓசை கேட்பதுண்டு.
10. இன்று உலகில் இதுதான் அதிகமாகி வருகிறது.
13. இராசிகளில் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

1. வலிக்கும் இடத்திற்கு இது கொடுக்கலாம்.
2. வீட்டில் வளர்க்க அழகு.
6. நிழல் தரும்.
7. வாழ்க்கையில் இது இருந்தால் நிறைவுதான்.
8. அரித்து விடும் ஜாக்கிரதை.
9. வேடுவர்கள் அணிவது (தலைகீழாக இருக்கிறது)
11. இதற்காகவே எத்தனையோ போர்கள் நடந்துள்ளன.
12. பகலவனைக் கண்டால் ஓடி விடும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 01.01.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-30**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு -05.**

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-28க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வ | ட் | டி | ■ | 2 சோ | க | ம் |
| ள் | 3 அ | மை | ச் | ச | ர் | ■ |
| ள | ங் | ■ | 4 கை | லி | க | 5 அ |
| ல் | கா | 6 பொ | ■ | 7 ச | வா | ரி |
| ■ | டி | ங் | 8 கு | ம் | ■ | தா |
| 9 போ | ■ | க | கை | ■ | 10 பு | ர |
| 11 தை | ய | ல் | ■ | 12 ஷ | வி | ம் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.28இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. செல்வி. திலகா சின்னையா மாத்தளை.
2. திருமதி. எவ். இனாமுல்லாஹ் அக்குறணை.
3. சி. கருணாகரன் மாத்தளை.
4. எம். இம்தியாஸ் உக்குவளை.
5. வி. றொனால்ட் கண்டி.
6. எல். சயந்தன் நீர்கொழும்பு.
7. கு. இந்திராணி கொழும்பு-7.
8. றிஸ்மினா சுபைர்கான் காத்தான்குடி-6.
9. எஸ். மகிந்தன் குருநாகல்.
10. வபீரா இம்தியாஸ் கொழும்பு-5.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



## கத்தரித்த கடி ஜோக்ஸ்

புதிய கணவன்: நாம் இருவரும் ஒருவராகி விட்டோம்.
மனைவி: எல்லாம் சரிதான். சாப்பாடு ஓடர் பண்ணும்போது இரண்டு பேருக்கு ஓடர் பண்ணுங்கள்.

▫

அவன்: நான் தப்பு செய்தமைக்கு முதலாளி என்னைத் திட்டவில்லை.
நண்பன்: அப்படியா?
அவன்: ஆமாம். ஆனால் வேலையை விட்டு நீக்கிவிட்டார்.

▫

சட்டத்தரணி: யுவர் ஆனர்! நீங்கள் சொல்லப் போகும் தீர்ப்பில் தான் 18 பேரின் எதிர்காலம் இருக்கிறது.
நீதிபதி: குற்றவாளி அத்தனை பெரிய குடும்பஸ்தனா?
சட்டத்தரணி: இல்லை. நான் பெரிய குடும்பஸ்தன்.

▫

அவர்: என்றாலும் பெண் வீட்டாருக்கு இத்தனை மறதி கூடாது.
மற்றவர்: என்ன விசயம்? தருவதாகச் சொன்ன சீதனத்தை மறந்து விட்டார்களோ?
அவர்: இல்லை. முதலிரவில் பெண்ணை அனுப்பிவைக்க மறந்துவிட்டார்கள்.

▫

டாக்டர்: அந்த பேஷண்டுக்கு எல்லா டெஸ்டும் எடுத்தாச்சா?
நர்ஸ்: அவரிடம் இருந்த பணம் தீரும்வரை எடுத்தாகிவிட்டது டாக்டர்.

▫

ரகீம்: இரவில் தூக்கம் வராவிட்டால் என்ன செய்வீர்கள்?
நஜீம்: முழித்தபடி இருப்பேன்.

▫

நீலா: பூச்சிகளில் அதிகம் சுமக்கும் பூச்சி எது?
மாலா: மூட்டைப் பூச்சி.

▫

அவர்: ஒரு ஆயுதம் 'பாக்கி' வைத்திருக்கிறது. அது எது?
மற்றவர்: துப்பாக்கி.

▫

மனைவி: நீங்கள் வேலையை விட்டு வந்துவிட்டீர்கள். கடன்காரர்களுக்கு யார் பதில் சொல்வது?
கணவர்: அதுக்கு ஏனடி கவலைப்படுகிறாய்? எனக்குத்தான் வேலை இல்லையே. நான் பதில் சொல்லிக் கொள்கிறேன்.

*(19ம் பக்க மகாபாரதம் தொடர்.)*

**-பின் நோக்கு-**

*(மாதரி ஒரு குதிரையில் ஏறுகிறாள்)*

மாதரி: நான் வெற்றி பெற்றால்...!
பாண்டு: நடக்க முடியாது!
மாதரி: பந்தயம் என்ன?
பாண்டு: நீ தோற்றால் என்ன தருவாய்?
மாதரி: நீங்கள் எதைக் கேட்டாலும்...!
பாண்டு: நான் வென்றால் எனக்கு மகன்களைத் தர வேண்டும். ஐந்து குமாரர்கள்.
மாதரி: ஏற்றுக்கொள்கிறேன். நான் இரண்டரைப் புதல்வர்களைத் தருகிறேன். அக்கா மற்ற இரண்டரைக் குமாரர்களைத் தருவார்.ஆ....இல்லை. அக்கா மூத்தவள் அக்கா மூன்று குமாரர்கள் தருவார். நான் இருவரைத் தருகிறேன்.

**-பின் நோக்கு முடிவு-**

*(பாண்டுவின் குடிசை)*

பாண்டு: உங்கள் இருவரில் எவருமே கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாது.
குந்தி: ஏன் மன்னவா?
பாண்டு: மாமுனி கிந்தமரின் சாபம்.
குந்தி: சாபமா?
பாண்டு: ஆமாம். இந்தச் சாபத்துடன் வாழ்ந்து மாழ வேண்டியவன் நான்.
குந்தி: அதற்கு ஒரு பரிகாரம் உண்டு மன்னவா?
பாண்டு: பரிகாரமா?
குந்தி: ஆமாம் பிரபு. இளமையில் துர்வாச முனிவருக்கு நான் செய்த பணிகளில் மகிழ்ந்து அவர் எனக்கொரு மந்திர உபதேசம் செய்தார். இதன்படி எந்தத் தேவனையும் நான் அழைத்தாலும் அவர் பிரசன்ன மாவார். அவர் மூலம் மகப் பேறு பெற முடியும்.
பாண்டு: அப்படியா? உடனடியாகத் தர்மராஜனை நினைத்து மந்திரத்தை ஜெபித்து மகனைப் பெற்றெடுப்பாயாக?
குந்தி: தங்கள் சித்தப்படியே பிரபு.

**-காட்சி மாற்றம்-**

*(மலைசூழ்ந்த பகுதியில் குந்தி அமர்ந்து மந்திரம் ஜெபிக்கிறாள். தர்மராஜா தோன்றுகிறார். குந்தியின் மடியில் குழந்தை கிடக்கிறது. பாண்டுவிடம் குழந்தையை எடுத்துச் செல்கிறாள்)*

அசரீரி: தர்ம நியாயங்கள் தெரிந்தவன் இவன். உண்மையே பேசுவான். வீரமும் உறுதியும் மிக்கவன். குந்தி! இவனுக்கு யுதிஷ்டிரன் என்று பெயரிடுவாயாக.

**-காட்சி மாற்றம்-**

*(திருதராட்டிரன் அரண்மனை -பீஷ்மர் வருகிறார்)*

திருத: (பீஷ்மரின் காலடியைக் கணித்தே) பெரியப்பாவா?
பீஷ்மர்: வாழ்க மகாராஜா! எனது பாராட்டுக்கள். குரு வம்சத்தை விளங்க வைக்க இளவரசன் பிறந்து விட்டான்.
திருத: எதுவும் புரியவில்லையே பெரியப்பா.
பீஷ்மர்: பாண்டுவுக்குப் புத்திரன் பிறந்துள்ளான். யுதிஷ்டிரன் என்று பெயரிட்டுள்ளனர்.
திருத: அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள் பெரியப்பா.
பீஷ்மர்: தங்கள் சித்தப்படி மகாராஜா.
காந்தாரி: நான் நினைத்தேன். முதல் குழந்தை நானே பெறுவேன் என்று.
திருத: இறைவன் சித்தம் எப்படியோ அப்படியே நடக்கும்.

**-காட்சி மாற்றம்-**

*(பாண்டுவின் முகாம்)*

பாண்டு: குந்தி தேவி இப்பொழுது வாயு தேவனை அழைப்பாயாக!
குந்தி: தங்கள் சித்தம் பிரபு.

**-காட்சி மாற்றம்-**

*(மலையடிவாரம். குந்தி மந்திரத்தை ஜெபிக்கிறாள். வாயு பகவான் ஓர் ஆண் மகவைத் தருகிறார். குந்தி பாண்டுவிடம் குழந்தையைக் கொடுக்கிறாள். குழந்தையைப் பாண்டு ஒரு கல்லின் மீது போடுகிறார். கல் உடைகிறது. குழந்தை சிரிக்கிறது.)*

அசரீரி: அதிபராக்கிரம சாலி கூட இவனுடைய கைபட்டால் இந்தக் கல்லைப் போல நொறுங்குவான். யுத்தகளமே இவனால் அச்சமுறும். எதிரிகளைப் பொடிப் பொடியாக்குவான். இவனை பீமன் என்று அழைப்பாயாக.

**-காட்சி மாற்றம்-**

காலத்தின் குரல்: (கானகத்தில் குந்தி பீமனைப் பெறும் போது அஸ்தினாபுரத்தில் காந்தாரி துரியோதனனைப் பெறுகிறாள். மாதரி நகுலன், சகாதேவன் ஆகிய இருவரையும் பெற்றெடுக்கிறாள். இதே காலகட்டத்தில் காந்தாரி நூறு புத்திரர்களையும் துஷாலா என்ற பெண் குழந்தையையும் பெறுகிறாள். குந்தியையும் மாதரியையும் கானகத்தில் விடுத்து காந்தாரியை அஸ்தினாபுரத்தில் விட்டு விட்டு மதுராபுரி செல்கிறோம்! அங்கு சிறைக் கூடத்தில் மகா பாரதத்தின் உண்மையான சூதத்திரதாரி தோன்றப் போகிறான். அவன் தான் வாசுதேவ கிருஷ்ணன்.....கிருஷ்ண பரமாத்மா....

**-காட்சி மாற்றம்-**

**சிறைக்கதவுகள் தானாகவே திறக்கின்றன. சக்கரம் சுழன்று கொண்டு முன் வருகிறது.**

(வாரந்தோறும் வரும்)

(எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

**இது-**
**எம்.ரி.வி. தொலைக்காட்சியில்**
**இவ்வாரம் இடம்பெறும் தொடர்.**
**(26.12.93 ஞாயிறு மாலை 7.00மணி)**
**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

# மகாபாரதம்

**அங்கம் 9**

**காலத்தின் குரல்:** மகரிஷி கிந்தமர் மனமுவந்தளித்த வரம் வீண்போகலாமா? குந்தியும் மாதரியும் விரைவில் தாய்மை எய்த வேண்டும். மகாபாரதக் கதையில் கிந்தம மாமுனிவர் முக்கியமானதொரு திருப்பு முனையாகிறார். மகாராணிகள் இருவரும் தாய்மையெய்த வரமளித்தார்.ஆனால் தனது தர்ம பத்தினிக்கு அவ்வரமளிக்கவில்லை. இத்துடன் கதை முடியவில்லை. முனிவரின் ஆசியுடன் அவர்கள் அஸ்தினாபுரம் திரும்ப வேண்டும். ஏனெனில் அவர்களின் பிரிவால் தாய் சத்தியவதி தனிமையில் தவிக்கிறாள்.

*(அஸ்தினாபுரி- சத்தியவதி அந்தப்புரம் பீஷ்மர் வருகிறார்)*

**பீஷ்மர்:** வணக்கம் தாயே!

**சத்தி:** வாழ்க நீடூழி!

**பீஷ்மர்:** என்னை அழைத்தீர்களா தாயே?

**சத்தி:** ஆம் மகனே. பாண்டு ஓய்வு நாடிச் சென்று நீண்ட நாட்களாகி விட்டன. அவர்கள் பிரிவு என்னை வாட்டுகிறது. அவர்களை அழைத்து வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

**பீஷ்மர்:** தங்கள் சித்தம் தாயே!

**சத்தி:** திருதராட்டினரிடம் கூறி அவர்களை அழையுங்கள்!

**பீஷ்மர்:** அப்படியே ஆகட்டும் அம்மா!

-காட்சி மாற்றம்-

*(திருதராட்டினரின் அரண்மனை)*

**காந்தாரி:** அன்னையின் ஆணைக்காகக் காத்திராமல் பாண்டுவை அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள் அரசே!

**திருதரா:** ஏன் காந்தாரி! தம்பி பாண்டு போதுமான ஓய்வினைப் பெற வேண்டாமா?

**காந்:** அவர் இங்கும் ஓய்வெடுக்கலாம். அவர் நீண்டகாலம் அங்கு இருப்பது நன்றாகப் படவில்லை எனக்கு. தாங்கள் கிரீடத்துடன் உறவை வளர்த்து விடுவீர்களோ என்று எனக்குக் கவலை எற்படுகிறது.

**திருதரா:** காந்தாரி!

**காந்:** நான் பார்வைக்கே திரை போட்டவள். உணர்வுகளுக்குத் திரையிடவில்லை. தங்களுடைய உணர்வுகளும் தூங்க வில்லையே!

**திருதரா:** உனது அண்ணன் கூறியவற்றை மறந்து விட்டாயா?

**காந்:** எதைக் கூறினார்? அரசே! அறவே மறந்து விட வேண்டியவையும் அனேகம் உள்ளதே!

**திருத:** இக்கிரீடம் என் தலைக்கே பொருத்தமானது என்றாரே...!

*(பீஷ்மர் வருகிறார்)*

**திருத:** (பாத ஒலி கேட்டே) பெரியப்பா!

**பீஷ்ம:** கண்ணிருந்தும் கருத்துடன் காண முடியாதவர்கள் உள்ளனர். ஆனால் நீயோ அடி ஓசை கேட்டே அறிந்து விடுகிறாய்!

*(காந்தாரியை ஆசிர்வதிக்கிறார்)*

**காந்:** வாருங்கள் பிதாமகரே!

**பீஷ்ம:** காந்தாரி! ராஜ மாதா சத்தியவதியிடமிருந்து தூதனாக வந்துள்ளேன். பாண்டுவை அழைத்துவர அரசர் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அன்னை கூறியுள்ளார்.

**திருத:** இது கோரிக்கையா இல்லை கட்டளையா?

**பீஷ்ம:** பெரியவர்களின் வேண்டுகோளை ஆணையாகக் கொள்வதே கடமை- அவர்களை அழைத்துவர ஏற்பாடு செய்யுங்கள்.

-காட்சி மாற்றம்-

*(அரண்மனையில் ஒரு புறம்)*

*(சகுனி தானாகவே சொக்கட்டான் ஆடுகிறார்)*

**சகுனி!** அஸ்தினாபுரமே இந்த சகுனி உன்னை வென்றாக வேண்டும்! உன் எதிர்காலத்தை நீ பணயமாக வைத்துவிடு- நான் பணயமாக வைப்பது எனது ஆத்மாவை.

*(காய்களை உருட்டுகிறார். எட்டு; ஆறு என்று கேட்டதே கிடைக்கிறது)*

*(திருதராட்டினர் வருகிறார்)*

**திருத:** காந்தார இளவரசே! யாருடன் சொக்கட்டான் ஆடுகிறீர்?

**சகுனி:** வணக்கம் மன்னரே! வாருங்கள்! அமருங்கள்.

**திருத:** எனது வினாவுக்கு விடை எங்கே?

**சகுனி:** எனது ஆத்மாவுடனும் அபிலாசைகளுடனும் விளையாடுகிறேன் மன்னவரே!

**திருத:** எதனுடைய வெற்றி உமக்கு மகிழ்ச்சி தரும்?

**சகுனி:** சகுனி தனது வெற்றிக்காகத் தான் விளையாடுவான். தாங்கள் அறிந்ததே!

**திருத:** உமது ஆத்மாவும் அபிலாசைகளும் உம்முடையவை தானே, காந்தார இளவரசரே

**சகுனி:** ஆத்மா முழுமையாக எனதுடமையல்ல. ஆத்மா ஆண்டவனுடையதே. ஆனால் எனது ஆசைகளனைத்தும் தோற்றாலும் வென்றாலும் என்றுடையவையே! ஆண்டவனின் சொத்தான ஆத்மாவின் வெற்றியால் எனக்கென்ன? ஆகவே, என் ஆசைகளின் வெற்றியே எனது நாட்டம். அது சரி, இந்த வேளையில் தாங்கள் ஏன் வந்தீர்கள்?

**திருத:** தூக்கம் வரவில்லையே...!

**சகுனி:** தங்கள் தூக்கத்தைக் கெடுத்தவர் யார்?

**திருத:** பாட்டிதான்.

**சகுனி:** சத்தியவதித்தாயாரா? ஆனால் அவர் தங்கள் மீது அதிக பாசம் கொண்டவராயிற்றே!

**திருத:** அவர் என்மீது பாசமற்றவரல்லர் என்று எப்போது சொன்னேன்? இருப்பினும் என்னைப் போல பாண்டு மீதும் அவருக்குப் பாசமுண்டு. நாட்டின் அரியாசனத்தில் என்னை அமர்த்த அவர் நினைத்தார்.ஆனால் சாஸ்திரங்களைக் காட்டி விதுரர் பாண்டுவை அரியணை ஏற்றி விட்டார். மகுடமற்று வாழப் பழகிக் கொண்டேன். பாண்டு ஓய்வெடுக்கச் செல்ல, முடியை என் தலையில் ஏற்றினார்கள். இப்பொழுது பாண்டுவை அழைத்துவர தாயாரே



ஆணையிட்டுவிட்டார். அவனில்லாமல் வாழ முடியவில்லை தாயாருக்கு. கிரீடம் என் தலையை விட்டு இறங்கப் போகிறது.

*(சகுனி அமைதி)*

உமது மௌனம் என் பிரச்சினைக்கேற்ற தீர்வு உம்மிடமில்லை என்பதையே உணர்த்துகிறது. இந்த அந்தகாரத்தில் உழன்று மடிவதற்கே நான் பிறந்தவன் போலும்.

**சகுனி:** தைரியத்தை இழந்துவிடுவது அழகல்ல. நீங்கள் பார்க்க முடியவில்லை என்பதற்காக சூரியனோ சந்திரனோ உதிக்காமலோ அஸ்தமிக்காமலோ இருக்கவில்லை. என் தங்கை ஆளப் பிறந்தவள். இந்த முடிவினை எட்ட நான் எதையும் செய்யச் சித்தமாயுள்ளேன்.

**திருத:** விதுரனின் கணிப்பினைத் தட்டிக்கழிக்க பெரியப்பாவாலும் முடியவில்லை. இதில் உன்னால் எதையும் சாதிக்க இயலாது.

**சகுனி:** உங்கள் பெரியப்பாவுடன் என்னை ஒப்பிட வேண்டாம். அவருடைய விசுவாசம் உங்களிடமல்ல. அரியணையிடம் தான் அவர் கரிசனையெல்லாம். அவருடைய விரதம் அவரை அரியணையுடன் பிணைத்திருக்கிறது. நீங்கள் அரியணையில் இருந்தால் அவருடைய விசுவாசம் உங்களிடமே! இப்போராட்டம் முடியும்வரை தளராதிருங்கள். சத்தியவதித் தாயார் பாண்டுவை அழைக்க ஆணையிட்டால் அவ்வாறே அழையுங்கள். ஆனால் இந்த சகுனி மீது நம்பிக்கை வையுங்கள். இவனுடைய அம்புகள் கூர்மையுடையவை! குறிதவறாதவை!

-காட்சி மாற்றம்-

*(ஆரண்யத்தில் பாண்டுவின் விடுதி)*

**மாதரி:** அஸ்தினாபுரத்திலிருந்து அழைப்பு வந்ததும் அரசருக்குள்ள ஆனந்தத்தைப் பாருங்களேன்.

**குந்தி:** பெரிய தாயாரிடமிருந்து அழைப்பு வரவில்லையானால் அரசர் மேலும் சில காலம் தங்கியிருப்பார். மாதரி ஆசைகளை அடக்கக் கற்றுக் கொள்!

**மாதரி:** அம்பை எய்து அழித்து விட ஆசைகளும் மானல்லவே! அக்கா! வாழ்க்கை வாழ்வதற்குத்தானே!

**குந்தி:** உண்மைதான். இருப்பினும் சில விதிமுறைகளுக்கும் நாம் கட்டுப்பட்டேயாக வேண்டும். பெரிய தாயாரின் கட்டளைக்கும் நாம் கட்டுப்பட்டேயாக் வேண்டும்.

**மாதரி:** அக்கா நீ எப்போதும் அவர் பக்கமே சாய்ந்து நிற்கிறாய்!

**குந்தி:** அவரைச் சார்ந்தே இருப்பதும் நமது விதிதானே!

*(சிங்கத்தின் கர்ஜனை ஒலி கேட்கிறது)*

**மாதரி:** பிரபு! சிங்கம் ஒன்று அண்மையில் வந்துள்ளது. அதனை வேட்டையாடி வாருங்களேன், எனக்காக...

**குந்தி:** அது தீங்கேதும் செய்யவில்லையே!

**மாதரி:** என்னக்கா...!

*(பாண்டு புறப்படுகிறார். உண்டபின் செல்லும்படி குந்தி கூறுகிறாள்)*

**பாண்டு:** நான் வந்து உண்கிறேன்.

-காட்சி மாற்றம்-

*(சிங்கத்தின் கர்ஜனை கேட்டுச் சென்ற பாண்டு ஒலிவந்த திசையில் அம்பெய்ய கர்ஜனைக்குப் பதிலாக மனிதனின் வேதனைக்குரல் கேட்கிறது. பாண்டு சென்று பார்க்கும் போது கிந்தமமுனிவரும் அவர் பத்தினியும் அம்புக்காயத்துடன் துடிக்கின்றனர்)*

**பாண்டு:** நான் சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்டே பாணத்தை எய்தேன் மாமுனிவரே!

**கிந்த:** ஓசைகளின் பேதங்களை உணராத நீ அம்புவிட யோக்கியதையற்றவன். உனது எல்லைகளை மீறிவிட்டாய் பாண்டு. இதற்குரிய தண்டனையை நீ ஏற்றாக வேண்டும்.

**பாண்டு:** வேண்டாம் மாமுனிவரே!

**கிந்த:** குழந்தையின்றியே நாங்கள் மடிகிறோம். உனக்கு நான் தரும் சாபம்!- நீ எந்தப் பெண்ணைத் தீண்டினாலும் அக்கணமே உன் உயிர் பிரியக்கடவது...!

**பாண்டு:** வேண்டாம்....வேண்டாம்.

*(இருவரும் இறக்கின்றனர்...)*

-காட்சி மாற்றம்-

(பாண்டுவின் ஓய்வு முகாம்)

**குந்தி:** எங்கும் அசாத்தியமான அமைதி நிலவுகிறதே. ஏதோ நடந்துவிட்டது போலும். மகாராஜாவையும் காண வில்லை.

(பாண்டு வருகிறார்)

**குந்தி:** மகாராஜா!

**பாண்டு:** பயங்கரமான சம்பவமொன்று நடந்துவிட்டது.

**குந்தி:** என்ன மகாராஜா?

**பாண்டு:** சிங்கத்தின் ஒலி கேட்டு அம்பெய்தேன். அது கிந்தம முனிவரையும் அவர் தர்மபத்தினியையும் கொன்று விட்டது.

**குந்தி:** என்ன? கிந்தம மகரிஷியா! ஆண்டவா!

**பாண்டு:** நான் உண்மையில் கிந்தம முனிவரை நோக்கி அம்பு வீசவில்லை...!

**குந்தி:** நான் அறிவேன் மகாராஜா! அஸ்தினாபுரத்து மாமன்னன் ஒரு போதும் ஒரு மாமுனிவரை வீழ்த்த நினைக்கவே மாட்டார்.

**பாண்டு:** விபத்து நடந்து விட்டது. மகரிஷியை நான் கொன்று விட்டேன், குந்தி!

**மாதரி:** மகாராஜா! தாங்கள் கொலைகாரரல்ல. நானே அக்கொலைக்குப் பாத்திரவாளி! நான் தானே அந்த மிருகத்தின் தோலைக் கேட்டேன்.

**பாண்டு:** இல்லை மாதரி! கொலையைச் செய்த கொலைக்காரன் நானே! அதற்கான தண்டனையையும் நானே ஏற்க வேண்டும் மாதரி!

**மாதரி:** அதற்குத் தண்டனையானால், நாம் இருவரும் சேர்ந்தே அதனை ஏற்போம்.

**குந்தி:** அப்போ என்னைத் தனிமைப் படுத்திவிட்டாயா மாதரி? இதனை நான் உன்னிடம் எதிர்பார்க்கவே இல்லை...! எனது வாழ்வில் சம பங்குடையவள் நீ என்று எண்ணியிருந்தேன். இப்பொழுது இந்த இக்கட்டான வேளையில் என்னை மட்டும் ஒதுக்கிவிட நினைத்து விட்டாயோ?

**மாதரி:** அப்படிச் சொல்லாதீர்கள் அக்கா!

**பாண்டு:** நீயே எமது உறுதி; நீயே எமது பலம்; நீயே எமது கௌரவமும் அடையாளமுமாவாய். அப்படியிருந்தும் ஏன் இப்படிக் கூறுகிறாய்?

-காட்சி மாற்றம்-

*(அஸ்தினாபுரம்- திருதராட்டிரன் அரண்மனை- திருதராட்டிரனும் காந்தாரியும் இருக்க பணிப்பெண் வருகிறாள்)*

**ப.பெண்:** வணக்கம் மகாராஜா! பாண்டு மாமன்னர் ஆரண்யத்திலிருந்து நேராக இங்கே வந்து கொண்டிருக்கிறார் மகாராஜா!

**திருத:** தம்பியின் ஓய்வு காலம் சீக்கிரம் முடிந்து விட்டதே! அது சரி, பாட்டியிடம் முதலில் போகாமல் ஏன் இங்கே நேராக வருகிறான். ஆட்சிப் பொறுப்பினை அவனிடம் திரும்பித்தர மறுத்து விடப் போகிறேனோ என்று ஐயம் ஏற்பட்டு விட்டதோ?

**காந்:** அவ்வாறு ஏன் கருத வேண்டும் மகாராஜா? அரசனுடைய ஆர்வம் எப்போதும் ஆட்சிமீதும் அரசியல் மீதும்தானே! அதனாலேயே மன்னர் தங்களை நாடி வருகிறார். கை நீட்டி வரவேற்க வேண்டும் என்பது தானே தங்கள் கடமை?

**திருத:** ஆமாம்! அவனை நானே வரவேற்கிறேன். வரவேற்பதுடன் வாழ்த்தவும் போகிறேன்!

*(பாண்டு வர திருதராட்டினன் வரவேற்க இருவரும் தழுவிக்கொள்ளுகின்றனர்)*

**திருத:** தம்பி பாண்டு! ஓய்வுகாலம் நன்றாக அமைந்ததா?

**பாண்டு:** அண்ணா! அசம்பாவிதம் ஒன்று ஆரண்யத்தில் நடந்து விட்டது!

**திருத:** என்ன நடந்தது?

**பாண்டு:** மகரிஷி கிந்தமரை தெரியாமல் கொன்று விட்டேன் அண்ணா!

**காந்தா:** கொலையா அல்லது விபத்தா? நிச்சயமாக நீங்கள் கொலை செய்திருக்க முடியாது. அது விபத்தாகத்தான் இருக்கும். விபத்தினால் ஏற்படும் சாவுக்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டியதில்லையே!

**திருத:** பிரச்சினைகளுக்குத் தீர்வு தர விதுரரே தகுந்தவர். இதோ கிரீடத்தை ஏற்றுக் கொள். தம்பி பாண்டு! விதுரரிடம் சென்று விடை கோருவோம். பெரியப்பாவும் அங்குதான் இருப்பார்.

**காந்தா:** வினாவுக்கே இடமில்லாத போது விடைகாண ஏன் துடிப்பு?

**திருத:** பிரச்சினை இல்லாமலில்லை! காந்தாரி நீயும் வா. தம்பி இதனை அணிந்து கொள். அரசவையில் பதில் பெறலாம். வாருங்கள்.

-காட்சி மாற்றம்-

*(அரசவை)*

**விதுரர்:** நடந்தது நடந்தாகிவிட்டது. கொலை நடந்திருக்கிறது. அதுவும் மகாராஜா பாண்டு அவர்களின் கையினாலேயே...!

**திருத:** இறப்புதீதான். ஆனால் அது கொலை அல்ல. அது ஒரு விபத்து. அது பாபமுமாகாது. குற்றமுமாகாது. அவ்வாறிருக்கும் போது தண்டனைக்கே இடமில்லையே! இதனை விபத்தாகக் கணிக்க வேண்டும் என்பதே எனது கருத்து.

**விதுர:** விபத்துத்தான். அதற்காகத்தான் பிராயச்சித்தம் அவசியம் என்கிறேன். கொலையாக இருந்திருந்தால் மன்னரே தனக்குத் தானே மரண தண்டனையை விதித்திருக்க வேண்டும். அதுவே நாட்டின் சட்டம்.

**பாண்டு:** விதுரரின் கருத்தை ஏற்கிறேன். அஸ்தினாபுரத்தின் அரசனான நான் கொலை செய்த பாவி. இதற்கு பிராயச்சித்தமாக நான் உலக போகங்களைத் துறந்து துறவறம் ஏற்கிறேன். நாட்டு மக்களுக்கு இது ஒரு நல்லுதாரணமாக இருக்கட்டும்!

**பீஷ்:** துரதிஷ்ட வசமான அந்தச் சம்பவத்துக்கு உன்னைத் தவிர வேறு சாட்சியில்லை. நீயே மறைத்துமிருக்கலாம். ஆனால் நீதியை வகுப்பவனும் நீதியைப் பரிபாலிப்பவனுமான நீ அதனை மறைக்க வில்லை. மன்னவனே சட்டத்துக்கு மதிப்பளிக்கவில்லையானால் மன்னவனை மக்கள் மதிக்கமாட்டார்கள். ஆகவே மன்னவனே! உனது இத் தீர்மானம் மனிதவர்க்கமுள்ளவரை மதிப்புப் பெற்றிருக்கும்.

**பாண்டு:** அண்ணன் திருதராட்டினரே! ஆட்சியின் பொறுப்புகளை இப்பொழுது முதல் ஏற்கட்டும்.

**திருத:** ஆண்டவன் அநுக்கிரகம் அதுவானால் அவ்வாறே ஆகட்டும், அன்புத் தம்பி!

**பீஷ்மர்:** மாமந்திரி விதுரரே!

*(விதுரர் முடியை எடுத்துக் கொடுக்க பீஷ்மர் முடிசூட்டுகிறார்)*

**பாண்டு:** அஸ்தினாபுரியின் மாமன்னருக்கு எனது பணிவான வணக்கம்.

-காட்சி மாற்றம்-

*(சத்தியவதியின் அந்தப்புரம்)*

**சத்தியவதி:** கங்கையின் மைந்தரே! நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா? பாண்டு துறவறம் பூணுகிறானா?

**பீஷ்:** உண்மைதான் தாயே!

**சத்தி:** உன்னால் தடுக்க முடியவில்லையா?

**பீஷ்:** அது எனது அரசவையல்லவே அதனைத் தடுப்பதற்கு...!

**சத்தி:** பாண்டு புரியாத ஒரு குற்றத்திற்காக வாழ்வையே துறக்கும் விபரீதத் தண்டனையா?

**பீஷ்:** அஸ்தினாபுர மாமன்னன் தானே எடுத்துக் கொண்ட தீர்மானம் தாயே!

**சத்தி:** உனது தீர்மானத்தைத் தான் நான் கேட்கிறேன் மகனே!

**பீஷ்:** மாமன்னரின் தீர்மானத்துக்கு நான் கட்டுப்பட்டவன் அன்னையே!

**சக்தி:** அக்கட்டுப்பாட்டுக்குள் நீ இல்லை யானால்...?

**பீஷ்:** பலமற்றதாக பாசமிருக்கலாகாது அன்னையே! மன்னரின் தீர்மானத்தால் தாங்கள் பெருமைப்பட வேண்டியவர்கள்லவா? பாண்டு மன்னர் தனக்குத் தானே வழங்கிய தீர்ப்பால் தாங்கள் பெருமைப்பட வேண்டியவர்கள். மாமன்னர் பாண்டு தனக்குரிய நீதியினைத் தானே வழங்கியிருக்கிறார். அவரை ஆசீர்வதிப்பதே தங்கள் கடமை தாயே!

**சக்தி:** மகனே! உனக்களித்த ஆசிகளுடன் எனது முழுசக்தியையும் இழந்தவளாகி விட்டேன். அஸ்தினாபுரிக்கு நான் அளிக்க வேண்டிய கடனை எப்போது தீர்க்கப் போகிறேனோ தெரியாது!

-காட்சி மாற்றம்-

*(பாண்டுவின் மாளிகை துறவுக்கான ஆயத்தங்கள் நடைபெற குந்தியும் மாதரியும் துறவு கோலத்தில் வருகின்றனர்)*

**குந்தி:** வா மாதரி.

**பாண்டு:** இதென்ன கோலம்?

**குந்தி:** ஆச்சரியம் எதற்கு மன்னவரே!

**பாண்டு:** இந்த உடைகள்...?

**குந்தி:** இந்த உடைகளுக்கு என்ன?

**மாதரி:** ஒன்றும் இல்லை அக்கா, மகாராஜாவின் ஆடைகளுக்கு ஏற்றதாக இருக்கின்றன.

**பாண்டு:** வனவாசத்திற்கு நீங்கள் வேண்டாம் குந்தி! நீ மூத்தவள். மாதரிக்கு எடுத்துச் சொல்.

**குந்தி:** எடுத்துச் சொல்ல என்ன இருக்கிறது மாமன்னரே!

**பாண்டு:** குந்தி! மகரிஷி கிந்தமரின் மறைவுக்குக் காரணமானவன் நான். அதற்கான பிராயச்சித்தம் தேட வேண்டியவனும் நானே. அரண்மனையையும் அரச போகங்களையும் உதறிவிட்டு நீங்கள் இருவரும் வனத்திற்கு வர ஏன் நாட்டம் கொண்டீர்கள்?

**குந்தி:** மகாராஜா! ஜனகரின் மகள் சீதாப் பிராட்டியார் ஸ்ரீ இராமனுக்கு என்ன சொன்னார் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். நாங்கள் இருவரும் தங்கள் துணைவியர். நாங்கள் இல்லாமல் நீங்கள் இல்லை. நீங்கள் யாகத்தை மேற்கொண்டாலும் பிராயச்சித்தம் செய்தாலும் நாங்கள் இன்றி அவை பூரணமாகாது. இதனை மறுக்கமுடியுமா உங்களால்? மகாராஜா! அக்கினி சாட்சியாக, முனிபுங்கவர்கள் சாட்சியாக சுகத்திலும் துக்கத்திலும் தங்களுடன் சம பங்கு ஏற்போம் என்று உறுதி பூண்டவர்கள் அல்லவா நாங்கள்? அரச போகத்துடன் மட்டும் நாங்கள் இணைக்கப்பட்டவர்கள் அல்லவே மகாராஜா!

**மாதரி:** நாங்கள் உங்களைத் தொடர்ந்து வருவோம் மகாராஜா.

**குந்தி:** நாங்களின்றி நீங்கள் முழுமையாக முடியாது மகாராஜா. ஒரு முழு மனிதனால் தான் பிராயச்சித்தம் செய்ய முடியும். இராம பிரானும் தனியாக சென்றிருந்தால் அவருடைய வனவாசம் சீதையின்றி முழுமை பெற்றிருக்க முடியாது. நாங்கள் இருவரும் தங்களுடனேயே வருகிறோம்.

**பாண்டு:** சரி அப்படியே ஆகட்டும்.

-காட்சி மாற்றம்-

*(சத்தியவதியின் அந்தப்புறம்)*

**பாண்டு:** பாட்டி. வனவாசம் செல்லும் எங்களை வாழ்த்தி அனுப்புங்கள் தாயே!

**சக்தி:** தனது குழந்தைகளை வாழ்த்துவது தாயின் கடமைதானே. ஆனால் என் பாசம்....

**பாண்டு:** இதுவும் தங்கள் மீதுள்ள பாசத்தினாலேயே...!

**சத்தியவதி:** நீ போக வேண்டும் என்பது சரி. ஆனால் இவர்களை ஏன் அழைத்துச் செல்கிறாய்? குந்தி போஜ மன்னரும் மதுரா நாட்டின் அதிபதியும் என்னிடம் வந்து கேட்டால் நான் என்ன விளக்கம் தர முடியும்? அரண்மனையில் வாழ வேண்டியவர்களைக் கானகத்துக்கு அனுப்பிவிட்டாயே என்று கேட்டால் என்னால் எதுவும் கூறமுடியாது. விதவையான உன் தாய் அம்பாலிகா உன்னைவிட்டு எவ்வாறு இருப்பாள்?

**பாண்டு:** தாயைவிட்டுப் பிரிவது எனக்குத் துன்பமில்லையா?

**மாதரி:** அம்மா! மகாராஜா, எங்களை அழைக்கவில்லை. நாங்களே விரும்பிச் செல்கிறோம்.

**சத்தி:** ஏன் மகளே? எதற்காக?

**குந்தி:** தாயே நாங்கள் அவரின் நிழல் தானே. அவரை விட்டு நிழல் நீங்க முடியுமா?

**சத்தி:** சரி குழந்தைகளே. இறைவன் என்றும் உங்களுடனே இருப்பார். விரைவில் திரும்பி வந்து சேருங்கள்.

*(சத்தியவதியிடமும் தாயார் அம்பாலிகாவிடமும் விடை பெற்றுச் செல்கின்றனர்)*

-காட்சி மாற்றம்-

*(அஸ்தினாபுர நகரின் ஓர் புறம். பாண்டுவையும் மனைவியர் இருவரையும் சூழ்ந்து மக்கள்......)*

**ஒருவர்:** வந்தனம் மகாராஜா! எங்களை விட்டுச் செல்லாதீர்கள். உங்களைப் போக விடமாட்டோம்.

**பாண்டு:** உங்கள் பேரன்பு என்னை ஆட்கொள்ளுகிறது. ஆனால் நான் போக வேண்டிய கடமை உண்டு. தயவு செய்து விடை தாருங்கள்.

(பீஷ்மர் இரதத்துடன் வருகிறார்)

**பாண்டு:** வணக்கம் பெரியப்பா.

**பீஷ்மர்:** வா மகனே பாண்டு.

**பாண்டு:** இது எதற்குப் பெரியப்பா?

**பீஷ்மர்:** உனக்குத் தேவைப்படாவிட்டாலும் மாதரிக்கும், குந்திக்கும் இது பயன்படலாம். கானகத்திற்கு இவர் உங்களைக் கொண்டு சேர்ப்பார்.

(மூவரும் வணங்குதல்)

**பீஷ்மர்:** ஆண்டவன் அருள் புரியட்டும். மகிழ்ச்சியுடன் சென்று வாருங்கள்.

-காட்சி மாற்றம்-

*(அஸ்தினாபுரம்....திருதராட்டினர் அரண்மனை.....சகுனி வருகிறார்)*

**சகுனி:** அஸ்தினாபுரத்து மாமன்னரை இன்று வாட்டும் கவலை என்னவோ?

**திருத:** தம்பி பாண்டுவின் வனவாசம் என்னைத் தடுமாற வைக்கிறது.

**சகுனி:** இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தான் நான் எதிர்பார்த்தேன். மகுடம் இனித் தங்கள் தலையை விட்டு நீங்காது. இழைக்கப்பட்ட அநீதிக்கு இன்று நீதி கிடைத்து விட்டது. இருண்ட மேகத்தின் ஓரங்களிலும் வெள்ளிக் கரைகள் தென்படுமல்லவா? மகாராஜா திருதராட்டினரே! உங்களை மனமாரப் பாராட்டுகிறேன். அஸ்தினாபுர அரியாசனம் இனித் தங்களுடையதே. நாட்டை நீங்கள் ஆளுங்கள். காட்டைப் பாண்டு ஆளட்டும்.

-காட்சி மாற்றம்-

*(யாகத்திற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. ரிஷிகள் மந்திரம் ஜெபிக்கின்றனர். பாண்டு முனிவர்களின் ஆசி பெறுகிறார்)*

-காட்சி மாற்றம்

*(சொர்க்கம் செல்லும் பாதை-ரிஷிகள் செல்கின்றனர். தொடர்ந்து பாண்டுவும் செல்கிறார்)*

**ரிஷி:** பாண்டு நீ எங்கே செல்கிறாய்? நாங்கள் சொர்க்கம் செல்கிறோம்.

**பாண்டு:** தயவு செய்து என்னையும் அங்கே அழைத்துச் செல்லுங்கள்.

**ரிஷி:** மன்னிக்க வேண்டும். அங்கு வர நீ அருகதை அற்றவன்.

(18ம் பக்கம் பார்க்க)

